# வலை

டானியல் அன்ரனி



Ek/195-

# வலை

சிறுகதைத்தொகுப்பு

டானியல் அன்ரனி

சமர் இலக்கிய வட்ட வெளியீடு

● வலை - சிறுகதை தொகுப்பு
Valai - Collection of Short Stories

● டானியல் அன்ரனி
Daniel Antony
O Author

● அட்டை ஓவியம் - கோ. கைலாசநாதன்
Cover Design - G. Kailasanathan

● முதற்பதிப்பு - ஜனவரி 1987
First Edition - January 1987

● அச்சுப்பதிப்பு
சித்திரா அச்சகம்
664, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Printers
Chitra Achchakam,
664, Hospital Road, Jaffna.

● அட்டை அச்சுப்பதிவு
விசயா அழுத்தகம்
551 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Cover Offset by
Visaya Aluththakam
551 K. K. S. Road Jaffna.

● விலை ரூபா 15/-
Price Rs. 15/-

நன்றி...

இந்நூலில் வெளியாகியுள்ள
சிறுகதைகளை
வெளியிட்டு
கௌரவித்த —
பத்திரிகைகள், சஞ்சிகைகளான...

- O வீரகேசரி
- O சிந்தாமணி
- O மல்லிகை
- O கணையாழி
- O தாயகம்
- O மாற்று
- O சமர்

— ஆகியவற்றிற்கு —

டானியல் அன்ரனி

□ உலக மெங்கிலும்
அடக்குமுறைக்கும்
ஒடுக்குமுறைக்கும்
எதிராகப்போராடி
மானுடவிடுதலைக்காக
மடிந்த போராளிகளுக்கு
இந்நூல் –
காணிக்கையாகிறது.

# பருந்துகள் பறந்து கொண்டிருக்கின்றன.

●

மதியம் கடந்துவிட்டது. அப்படியிருந்தும் வெயில் தணியவில்லை. சவிரிமுத்தர் ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்தார். அவருடைய கையில் ஒன்று வழுக்கை விழுந்த தலையில் இருந்தது. முன்னோக்கிப் பெருத்திருந்த தொந்தி பெருஞ்சுமையாகக் கனக்க மூச்சு இரைக்க இரைக்க பிரதான ஒழுங்கையில் திரும்பினார். எதிரே 'ஜீப்' வண்டியொன்று வேகமாக வந்துகொண்டிருந்தது. ஜீப்பைக் கண்டதும் மரநிழலில் ஒதுங்கும் பாவனையில் கானோரத்தில் நின்ற பூவரச மரத்தடியில் நின்றுகொண்டார்.

ஜீப் வண்டி அவரைக் கடந்து எதிர்த் திசையை நோக்கி வேகமாக விரைந்து கொண்டிருந்தது. கடந்து செல்லும் வேகத்திலும் கூட சவிரிமுத்தர் அவனைப் பார்த்துவிட்டார். இரு பொலிஸ்காரர்களுக்கிடையில் பெருமாள் இருந்து கொண்டிருந்தான். அவனுடைய பெரிய கண்கள் சவிரிமுத்தரைக் கண்டு கொண்டதும்

எதையோ அவசரத்துடன் கேட்க எத்தனிக்கும் வேளை யில் வண்டி வெகுதூரம் சென்றுவிட்டது.

அவனுடைய கண்கள். அவை பார்த்த பார்வை; சவிரிமுத்தரின் மனதில் ஏதோ ஒரு உறுத்தல். உட லில் ஒரு கணசிலிர்ப்பு. இனம்புரியாத இரைச்சல்கள். சோர்வுடன் நடந்தார்.

ஒழுங்கை நிறைய சனங்கள். படலை வாசல்களி லும் வேலிகளுக்கு மேலாலும் இன்னும் பலர். 'ஜீப்' வண்டி சென்ற திசையை அவர்கள் பார்த்துக் கொண் டிருந்தனர். தங்களுக்குள் எதையோ பேசி விமர்சித் துக்கொண்டு அனுதாபப் பட்டுக்கொண்டிருந்தனர். எதையுமே கண்டு கொள்ளாதவராக சவிரிமுத்தர் நடந்து கொண்டேயிருந்தார்.

வெய்யிலில் நடந்து வந்த களைப்பில் உடம்பு வேர் வையால் நனைந்திருந்தது. அணிந்திருந்த மேற்சட் டையை கழைந்து போட்டுவிட்டு கரு கருவென சடைத்து, ரோமங்கள் வளர்ந்திருந்த வெறும் உடம்பை ஆசுவாசத்துடன் அங்கிருந்த ஈசிச்செயரில் சாய்த்துக் கொண்டார்.

கழுத்தில் இரட்டை வடம் சங்கிலி கனத்தது. விரல்களில் கற்கள் பதித்த மோதிரங்கள், கருங்காலித் தடிக்கு பூண் போட்டதுபோல் மினுமினுத்துக் கொண் டிருந்தன.

''ஆனுசி... ஆனுசி... இவன் செல்லையா வந்த வனே...''

சவிரிமுத்தர் போட்ட சத்தத்தில் குசினிக்குள் இருந் தவள் வெளியே வந்தாள்.

''ஏன் இப்பிடி சத்தம் போடுறீங்க. இப்பதான் அவன் கொண்டுவந்து வைச்சிட்டுப் போறான். சாருக் குள்ளதான் இருக்கு...''



''அதை எடுத்துக் கொண்டு வா...''

ஆனுசி விசுக்கென்று சாருக்குள் சென்றாள். வரும்போது அவள் கையில் இருந்த போத்தல்களில் 'கள்' நிரம்பியிருந்தது. சவிரிமுத்தரின் காலடியில் வைத்துவிட்டு அவள் மறுபடியும் குசினிக்குள் போய் விட்டாள்.

சவிரிமுத்தர் கோப்பையில் சிறிது கள்ளை வார்த்து பக்கத்தில் வைத்துவிட்டு புகையிலையைக் கிழித்து சுருட்டத் தொடங்கினார். அவருடைய சிந்தனை எதிலோ லயித்திருந்தது.

''என்ன ஒரு விஷயம் கேள்விப்பட்டீங்களோ நம் மளோட தொழிலுக்கு நிண்ட பெருமாளையல்லோ பொலிஸ்காரங்கள் பிடிச்சுக் கொண்டு போறாங்க.'' குசினிக்குள் இருந்து ஆனுசியின் சத்தம் கேட்டது.

''நானும் வழியில பார்த்துக் கொண்டுதான் வாறன். என்ன நடந்ததாம்....'' சவிரிமுத்தர் உணர்ச்சியின்றிப் பேசினார்.

''அவன் கள்ளத்தோணியெண்டு ஆரோ பொலி சுக்கு பெட்டிசம் போட்டிட்டாங்களாம். அதுதான் அவனை வந்து இழுத்துக்கொண்டு போறாங்கள். ஏனெணை... அவனை இனிமேல் விட மாட்டாங்களா...''

ஆனுசி வெளியே வந்து சவிரிமுத்தருக்குப் பக்கத் தில் நின்று கொண்டாள். சவிரிமுத்தர் மனைவியை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தார். மௌனமாக கோப்பை யிலிருந்த கள்ளை எடுத்து ஒரு தடவை உறிஞ்சினார். அந்த மூச்சிலே கோப்பை முழுவதும் காலியாகிவிட்டது.

ஆனுசிக்கு அதிசயமாக இருந்தது. இவ்வளவு பெரிய செய்தியைச் சொல்லியும் புருஷன் அக்கறைப் படுத்துவதாகத் தெரியவில்லை.

''ஏனெண உங்களுக்கு பொலிசில இருக்கிற பெரியவங்களை தெரியுந்தானே. ஒருக்கா போய் என்னண்டு தான் பாத்துக்கொண்டு வாங்கோவன்...''

சவிரிமுத்தர் மறுபடியும் கள்ளை வார்த்து ஒரு முறடை உறிஞ்சிவிட்டு கள்ளில் தோய்ந்துவிட்ட பெரிய மீசையை தடவி விட்டுக்கொண்டார்.

''பேச்சி... இதுகள் ஒண்டும் உனக்கு விளங்காது. என்ன மாதிரித்தான் தெரிஞ்சவங்களெண்டாலும், லேசில இந்த மாதிரி விஷயங்களை விடமாட்டாங்கள்.

ஆனுசி அதற்கு மேல் எதுவும் பேசாமல் போய் விட்டாள். சவிரிமுத்தர் சுற்றி வைத்திருந்த சுருட்டை எடுத்து பற்றவைத்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தார். ஆனுசி கேட்டதற்காக ஏதோ சொல்லி வைத்தார். ஆனால் அவருடைய மனதில் பெருமாளின் விடயம் உறுத்திக் கொண்டிருந்தது. கண்களை மூடிக் கொண்டார்.

சவிரிமுத்தருக்கு நன்ருக நினைவிருந்தது. பத்து வருடங்களுக்கு முன் ஒரு வெள்ளிக்கிழமையாய் இருக்க வேண்டும்... தோணிக்காசுக்கு கொழும்புத்துறைக்கு போவதற்காக யாழ்ப்பாண பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தார். அப்பொழுதுதான் பெருமாளைச் சந்தித்தார்.

அவனுக்கு அப்போது பத்து வயது இருக்கும். கறுத்த மேனி; ஊதி மினுமினுப்புடன் இருந்த வயிறு; சிக்குப்பிடித்த தலை மயிர்; காவி படிந்து முன்னேக்கி



மிதந்து கொண்டிருந்த பற்கள்; பெரிய கண்கள்; பீத்தல் விழுந்த துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டு பஸ்கியூவில் நின்றவர்களிடம் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் சவிரிமுத்துவுக்கு ஆனுசியின் நினைவு வந்தது. வெகுநாட்களாகவே வீட்டுக்கு வேலைக்கு ஒருவன் வேண்டுமென்று நச்சரித்துக் கொண்டிருந்தாள். இவருடைய வலைக்கும் ஆள் பற்ருக்குறையாக இருந்தது.

''தம்பி... இஞ்சாலை உன்னத்தான். இஞ்ச வா...''

பெருமாள் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் என்னதென்று விரித்துரைக்க முடியாத பாவம். அவன் சவிரிமுத்தர் அருகே வந்தான்.

''தம்பி உன்ரை பேரென்ன...''

''பெருமாளுங்க...''

''எந்த ஊர் மோன உனக்கு...''

''பதுளையிங்க''

''அப்ப வாச்சுப் போச்சு'' என்று மனத்திற்குள் நினைத்தபடி சவிரிமுத்தர் தொடர்ந்தார்.

''அப்பா... அம்மா... இல்லையோ...?

''அப்பா செத்துப் போட்டாரு. அம்மா, தங்கச்சி தோட்டத்திலே வேலை செஞ்சிக்கிட்டு இருக்கிருங்க.''

''ஏன் உனக்குத் தோட்டத்திலே வேலை செய்யப் பிடிக்கேல்லையா?''

''...............''

''என்னோட வீட்டுக்கு வாறியா...? உனக்கு சாப்பாடு தந்து உன்ர வீட்டுக்கும் காசு அனுப்பிறன்.''

- தயக்கம்.

''ம்... சொல்லன்''

''சரியிங்க...'' அவன் சம்மதித்துவிட்டான்.

பெருமாள் வீட்டுக்கு வந்தபோது சம்மாட்டி சவிரிமுத்து சாதாரண சவிரிமுத்துவாகத்தான் இருந்தார். பெருமாள் வீட்டில் எடுபிடி வேலைகளைக் கவனித்ததுடன் வலையில் பிடித்து விற்றதுபோக எஞ்சிய மீன்களை கருவாடு போடுதல், ஐஸ் போட்டு வைத்தல் போன்ற வேலைகளையும் கூட இருந்து செய்வான்.

அந்தத் தெருப்பிள்ளைகள் எல்லாரும் அவனுக்குச் சிநேகிதர். அவனுடைய வயதுக்கு மூத்த 'அனுபவ' அறிவும், அதனால் அவன் பேசும் பெரிய விஷயங்களையும் ஆச்சரியத்துடன் கேட்பார்கள், கூட விளையாடும் சிறுவர்கள். எப்போதாவது அவர்களுக்குள் சண்டை மூழும். அவனைப் பார்த்து ''கள்ளத்தோணி'' என்று பட்டம் சொல்லுவார்கள். ஆனால் அவன் அந்த வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவன்போல உண்மையில் அவனுக்குப் புரியாமல் கூட இருக்கலாம் - பேசாமல் இருப்பான். ஆனால் 'கரிக்கோச்சி' என்று மட்டும் அவனை யாரும் பேசிவிட்டால் போதும் கோபம் தலைக்கேற, மூர்க்கத்துடன் - சொன்னவனை வளைத்துப் பிடித்து முதுகில் ஒரு அறை கொடுக்காமல் அடங்கமாட்டான். பற்களை 'நற நற'வெனக் கடித்துக் கொண்டு பெரிய விழிகளைப் பயங்கரமாக உருட்டுவான். வாயில் வந்த தூசண வார்த்தைகளை எல்லாம் கொட்டிக்கொள்வான்.



சிலவேளைகளில் துண்டு பீடிகளைப் பொறுக்கி வீட்டுக் கொல்லைப்புறத்தில் நின்று குடிப்பதைச் சவிரிமுத்தர் கண்டிருந்தாலும் எதுவும் சொல்வதில்லை. ஏதாவது ஏசினால் ஓடிப் போய்விடுவான் என்ற பயம். அவருக்கு அவனது சுறுசுறுப்பும் பிடிந்திருந்தது.

சில நாட்களில் பெருமாள் சவிரிமுத்துவுடன் கடலுக்குப் போகத் தொடங்கிவிட்டான். தோணியில் பெருமாள் கால் வைத்தவேளை 'விடுவலையில்' கயல் மீன் அள்ளிச் சொரிந்தது. சில வருடங்களிலேயே சவிரிமுத்து பல லட்சம் பெறுமதியான 'மிசின்' தோணிகளுக்கும், நைலோன் வலைகளுக்கும் அதிபதியாகி ஊரில் பெரிய சம்மாட்டி ஆகிவிட்டார்.

மலைப்பாறையில் பிறந்து கடல் உவரில் ஊறிய பெருமாளின் உடல் உருண்டு திரண்டு தசைக்கோளங்கள் புடைத்து நிற்கும் பருவத்தை எட்டிவிட்டான் பெருமாள். அவன் உழைத்த பத்து வருடங்களிலும் வயிறு நிறையச் சாப்பாடு, ஒரு நாளைக்கு இரண்டு கட்டு பீடி, ஞாயிற்றுக் கிழமைகளில் சினிமா பார்க்கக் காசு... இவைதான் அவன் உழைப்புக்குக் கிடைத்தவை.

பத்து வருடங்களாக தாய் சகோதரியை காணாமல் மறந்திருந்த பெருமாளுக்கு சில நாட்களுக்கு முன் திடீரென ஏனோ ஊருக்குப் போக வேண்டுமென்று மனம் பேதலித்தது. வேட்கை கொண்ட மனத்தின் விருப்பத்தை சம்மாட்டியாரிடம் வெளியிட்டு, ஐநூறு ரூபா காசு கேட்டான். சுரண்டிப் பிழைத்து சொகுசாக அனுபவித்துப் பழக்கப்பட்டுவிட்ட சவிரிமுத்துவுக்கு இது பேரிடியாகிவிட்டது. பெருமாள் செய்யும் வேலையின் பழு, அவனை இழந்தால்... அவன் திரும்பி வராவிட்டாலும்...? அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. இதனால் பல நாட்களாகக் கடத்தி வந்தார்.

ஒவ்வொரு நாளும் பெருமாளின் ஊமை முணுமுணுப்பு இரைச்சலாகி வெடித்தது. ஒருநாள் ஊதியம் எதுவுமின்றியே வெளியேறி விட்டான்.

அடுத்தநாள் சவிரிமுத்துவின் 'பரம விரோதி' பேதுருவின் 'நைலோன்' வலையில் சேர்ந்து விட்டான், என்ற செய்தியை சவிரிமுத்து அறிந்தபோது அதிர்ந்தே போய்விட்டார்.

- அந்தப் பெருமாள் இப்பொழுது பொலிசில்.

''என்ன சம்மாட்டியார் கனக்க யோசிச்சுக் கொண்டிருக்கிறீங்க''.

அப்பொழுதுதான் வாசல் படியைத் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்த குத்தகைக்காரன் யோணின் உரத்த குரலைக் கேட்டதும் சிந்தனையில் இருந்து சவிரிமுத்து விழித்துக் கொண்டார்.

''ஓ... குத்தகைக்காரரோ... வா வா நீரும் கொஞ்சம் எடும்.'' ஈசிச்சேருக்கு அடியிலிருந்த கள்ளை எடுத்து இன்னொரு கோப்பைக்குள் ஊற்றி அதைக் குத்தகைக்காரரிடம் நீட்டினார்.

''என்ன விஷயம் குத்தகை... இந்த மத்தியான நேரத்தில'' சவிரிமுத்து வினவினார்.

''ஒண்ணுமில்ல சம்மாட்டியார்... நேற்று சுவாமியார் கூப்பிட்டு இந்த முறை பெருநாள் நல்ல முறையில கொண்டாட வேணும் எண்டு சொன்னார்.

''ஓ... அதுக்கென்ன... சிறப்பாகச் செய்வம்...''



சொல்லிக் கொண்டே சவிரிமுத்து கோப்பை முழுவதையும் காலி செய்துவிட்டு, மறுபடியும் கோப்பையை நிரப்பினார்.

குத்தகைக்காரர் மீண்டும் தொடர்ந்தார்.

''இந்தமுறை வழமைபோல் கோயில் சோடினைகள், வெடி, மத்தாப்பு எல்லாம் உங்க பொறுப்பு...'' குத்தகைக்காரர் இப்போது தானே போத்தலை எடுத்து நிரப்பிக் கொண்டார்.

''அதுக்கென்ன இந்தமுறை வாற ஒரு கிழமை உழைப்பை அப்படியே ஒதுக்கிவிடுறன்.''

கோப்பையை நிரப்புவதும் வெறுமையாக்குவதுமாய் சில நிமிடங்கள். சவிரிமுத்துவுக்கு சற்று ஏறி விட்டது. குத்தகைக்காரர் நிதானத்துடன் பேசினார்.

''ஒரு விஷயம் கேள்விப்பட்டியளோ... உங்களை விட்டுப்போட்டு பேதுருவட வலைக்குப்போன அவன் தான்... பெருமாள்.. அவனைக் கள்ளத்தோணியெண்டு பெட்டிசம் போட்டு பொலிசட்டைப் பிடிச்சுக் கொடுத்துப் போட்டாங்களாம் ஆரோ...''

''ஓம் ஓம்... நானும் வழியில பாத்தன். பாவம் பெருமாள். நல்ல பெடியன்.'' சவிரிமுத்து அரை மயக்கத்துடன் அனுதாப வார்த்தைகளைக் கொட்டினார்.

''அப்ப நான் வரப்போறன் சம்மாட்டி'' என்று கூறிக்கொண்டே குத்தகைக்காரர் எழுந்து மெதுவாக நடந்தார்.

சவிரிமுத்து ஒரு நமட்டுச் சிரிப்புடன் அண்ணாந்து பார்த்தார். பருந்துகள் எதையோ தேடிப்பறந்து கொண்டிருந்தன.

# மண் குடிசைகளும் சில மயக்கங்களும்

அவன் தனது குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தவேளை நள்ளிரவைக் கடந்து விடிந்து கொண்டிருந்தது. நிலம் முற்றாக இன்னும் வெளுக்கவில்லை. அணைக்கப்படாத வீதி விளக்குகள் இன்னும் எரிந்து கொண்டுதானிருந்தன.

இரவு பூராவும் 'ரவுண்' முழுவதும் சுற்றித்திரிந்து அவனும் அவனுடைய நண்பர்களும் சுவர்கள், மதில்கள் ஒன்றும் பாக்கியில்லாமல் நாளை வெளிவரவிருக்கும் அவனுடைய அபிமான நடிகனின் புதிய படத்தின் போஸ்டர்களை அப்பொழுதுதான் ஒட்டி முடித்திருந்தார்கள்.

கழிந்துபோன இரவில் இழந்துபோன நித்திரையின் அழுத்தத்தினால் கண்கள் எரிவு காண, கைகால்கள் சோர்ந்துபோய் வலி எடுத்ததுடன், வியர்வையில் ஊறிக் காய்ந்துபோன மேனி பிசு பிசுத்து துர்நாற்றமும் வீசத்தொடங்கிவிட்டது.



அவனுக்கு இவை ஒன்றும் புதியவையல்ல. ஏற்கனவே பழக்கப்பட்டவைதான். தன்னுடைய அபிமானத்திற்குரிய நடிகனின் புகழ் பரப்புவதற்காக இதைவிட இயல்புக்கு மீறிய பல தியாகங்களையும் செய்யத் தயாராக இருந்தான். அதில் அவனுக்கு ஒரு இன்பம், ஆத்ம திருப்தி, அபரிதமிதமான நம்பிக்கை, பக்தி என்று கூடச்சொல்லலாம்.

கஸ்தூரியார் வீதியைத் தாண்டி பஸ் நிலையத்திற்கு வந்துவிட்டான். பஸ் நிலையத்தைத் தாண்டி பண்ணை வீதி வழியாக கிழக்கை நோக்கி கடற்கரையை அண்டிய ஒதுக்குப் புறத்திலுள்ள அவனுடைய குடிசைக்குச் செல்லவேண்டும்.

பஸ் நிலையத்தைச் சுற்றி கனமான வெளிச்சம் வாரி இறைத்துக் கொண்டிருந்தது. பஸ் வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாகப் புறப்படும் உறுமல்கள்.

விடியல் வியாபாரத்துக்காக பல தேநீர்க்கடைகள் வெளிச்சம் போட்டுத் திறந்து கிடந்தன. திறக்கப்படாத கடைகளின் வெளிச்சத்தின் விழுதுகள் படியாத இருள் கனத்துக் கிடந்த விருந்தை மூலைகளிலும், கானோரத்துக் கழிவுகள் கொட்டும் சந்துகளிலும், மூடியும் மூடாத உடல்களைக் கிடத்திப் போட்டுக் கவலையற்றுக் கிடந்த 'எளிய' சனங்களில் சில விழித்துக் கொண்ட நிலையில் தங்களுக்குள் கச...முச என்று பேசிக் கொள்வதும், ;வசவுகளை ஒருவருக்கு ஒருவர் உரத்துப் பரிமாறிக் கொள்வதும் அவனுக்குத் துல்லியமாகக் கேட்டதாகிலும், அவர்கள் பேச்சில் சிதறி விழுந்த பல 'அழுகல்' வார்த்தைகளின் அருவருப்பான அர்த்தங்கள் மனதில் பதிந்ததைத் தவிர வேறு எந்தப் பிரக்ஞையும் அவன் மனதை உறுத்தவில்லை.

சினிமாவில் அவன் அபிமான நடிகன் இதே ஏழைகள் உயர்வுக்காக கனல் தெறிக்க வசனம் பேசும் போதும்... பாட்டுப்பாடும்போதும் உணர்ச்சி வசப்பட்டு உடல் சிலிர்த்து... உற்சாக மிகுதியினால்... கைவிரல்களில் இரண்டை நாக்கின் அடியில் திணித்து ஒலி எழுப்ப ஆரவாரம் செய்யும் அவன் மனம் இப்பொழுது ஏனோ சுரணையற்றுக் கிடந்தது.

பகல் முழுவதும் பரபரப்புடன் யுகம் யுகமாகக் காணமுடியாத எதையோ தேடிச்செல்லும் அவசரத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெரிய பட்டினத்தின் மத்திய பகுதியிலிருந்து செல்லும் பிரதான பாதைகளில் குனிந்து, நிமிர்ந்து வேகமாக பழைய கடுதாசிகளைப் பொறுக்கி சாக்குப் பைகளில் திணித்துக் கொண்டிருக்கும் சில சிறுவர்களைத் தவிர வேறு எதுவித அசுமாத்தமும் இன்றி வெறிச்சோடியே கிடந்தன.

தூரத்தே - புகையிரதத்தின் கூவல்... கட கட..... ஓசைகள்...

இப்பொழுது அவன் தனியனாகத்தான் நடந்து கொண்டிருந்தான். கூட வந்த நண்பர்கள் ஒவ்வொருத்தராகப் பிரிந்து சென்றுவிட்டனர். மீண்டும் பிற்பகலில் சினிமாத் தியேட்டரில் அவர்களுடைய சங்கமம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. பல வேலைகள் அங்கு அவர்களுக்காகக் காத்துக் கிடந்தன.

அவன் 'தேவி விலாஸ்' தேநீர்க்கடை அருகே வந்ததும் பழக்க தோஷத்தில் தொண்டை அரிப்பு எடுத்தது. வரண்டு கிடந்த உதடுகளை சற்று உமிழ் நீரினால் நனைத்துக் கொண்டு சட்டைப் பைக்குள் கையைவிட்டுத் துளாவுகிறான்.



பத்துச் சதம்... ஐந்து சதம்... ஒரு சதக்குத்தி கைகளில் தட்டுப்படுகின்றன. ஏமாற்றத்தின் எதிரொலியாக முகம் சுண்டிக்கொள்ள, ஒரு சக்கரைப் 'பிளேன்ரீ' குடிக்கலாம் என்ற மனத்தவிப்பும் தானே நழுவிக் கொண்டது.

தொண்டை மீண்டும் எரிவெடுத்தது. கண்களிலும் நித்திரையின் கனப்பு. அங்கும் இங்கும் பார்வையை அலையவிட்டான். வீதி ஓரத்தில் அருகே... தண்ணீர்க் குழாய். விரைந்து சென்று குழாயைத் திறந்து, சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருந்த நீர்த்துளிகளை கைகளால் ஏந்தி உறிஞ்சித் தொண்டைக்குள் இறக்கினான். நெஞ்சுக்குள்ளும் ஈரக்கசிவு இறங்கியது. முகத்தையும் அழுத்திக் கழுவிக் கொண்டான்.

மீண்டும் சற்று உற்சாகத்துடன் நடக்கத் தொடங்கினான். எதிரே கந்தசாமிதான் வந்து கொண்டிருந்தான். அவனைப் போலவே கந்தசாமியும் தீவிர அபிமானி. பல தடவைகளில் ஒரே படத்தைப் பார்ப்பதில் பல சாதனைகள் செய்தவன் என்பதால் நண்பர்களிடத்தே அவனுக்கு அதிக மதிப்புண்டு.

''என்ன கந்தசாமி; போஸ்டர் ஒட்ட உம்மைத் தேடினம். இங்காலப் பக்கமே காணயில்ல... எங்க போட்டு வாற.''

''ஓம் மச்சான், அவசர அலுவலாகச் சாவகச்சேரிக்குப் போட்டு இப்ப படம் பாக்க வேணுமெண்டுதான் வாறன். நீ இப்ப போகயில்லையோ.''

''என்னட்ட இப்ப காசில்ல. அடுத்த சோவுக்கு கண்டிப்பா நிப்பன்... ஒருக்கா வீட்ட போட்டு வாறன்.''

''ஆ... ஆ... அப்ப அங்க சந்திக்கிறன்.''

கந்தசாமி அவனைக் கடந்து போனான். 'எப்படி யாவது வீட்டுக்குப்போய் ஒரு இரண்டு ரூவாக் காசு பிரட்டிப் போடவேணும்.''

அவன் உறுதியான தீர்மானத்துடன் எட்டிக் கால்களை வைத்துச் சத்திரச் சந்தியடிக்கு வந்து விட்டான். அங்கே - கால்கள் நிதானித்து நின்றுவிட்டன. அவன் கண்ட காட்சி···

சில மணி நேரத்துக்கு முன் அவனும் அவனுடைய நண்பர்களும் அரும்பாடுபட்டு ஒட்டிப்போட்டுப் போன படப்போஸ்டர்களை வாளிக் கிணற்றுச் சுவரிலிருந்து கிழித்தெடுத்து... பல சிறுவர்கள் சாக்குப் பைக்குள் அவசர அவசரமாகத் திணித்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் கண்கள் கோபத்தினால் சிவந்து வெளுத்தன. உதடுகள் துடித்தன. 'நாய் மூதேசிகள்'... அச் சிறுவர்கள் மேல் படீரெனப் பாய்ந்து முதுகுப்புறம் வேகமாக அறைந்தான். சிறுவர்கள் சாக்குகளை விட்டு விட்டுச் சிதறி நாலாபக்கமும் ஓடினர்.

மனதிற்குள் கறுவிக்கொண்டே விடுவிடென நடந்தான். சாராயத் தவறணை, பெரிய தபாற்கந்தோர், சேமக்காலை, பொலிஸ் குவார்ட்டர்ஸ், அப்பால் அவனுடைய குடிசை தென்படும் ஒதுக்குப்புறம்.

தூரத்தில் வரும்போதே ஒருவித முடை நாற்றம். புதிய உலகத்திற்குள் புகுந்து கொள்வது போன்ற மனச்சுளிப்பு. எல்லாம் ஒரு கணம்தான். பழையபடி பழகிப்போன சுரணைக்கேடு.

பரந்த குப்பை மேட்டைக் கிளறி எறிந்து இரை தேடும் முனைப்பில் கோழிகள் ஒன்றை ஒன்று கொத்தி விரட்ட, அழுகல் ஒன்றைக் கடித்துக் குதறும் சொறி



நாய்களின் உர்... உர்... என்ற உறுமல்கள். ஏற்கனவே காய்ந்து கறுத்துப்போன புழுதி மேனிகள் விளையாட்டுத் திடலாக்கி விட்டிருந்தன.

எங்கு நோக்கினும் சின்னஞ் சிறு குடிசைகள்; மழையில் பாதி கரைந்து போய்விட்ட மண் சுவர்களை மூடிக்கிடந்த பொத்தல் கண்ட கூரைகள். அவற்றைச் சுற்றி கங்குமட்டை அடைப்புக்கள். அவ்வூர் மக்கள் அரும்பாடுபட்டுக் கட்டிய மீனாட்சி அம்மன் கோயில் கோபுரம் மாத்திரம் எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்து நின்றது.

பண்ணை நெஞ்சு நோய் ஆஸ்பத்திரி இருக்கும் மேற்குப் புறத்தில் சரிந்து கிடக்கும் கிடுகு அடைப்புக்குள் தெரிவதுதான் அவனும் அவனுடைய அப்பு சின்னரும், ஆச்சி செல்லாச்சியும் வாழும் சின்னஞ் சிறு உலகம்.

அவன் குடிசையை அண்மித்துவிட்டான். ஒன்றை ஒன்று பார்த்து உறுமிய நாய்கள் அவனைப் பின் தொடர்ந்து குரைத்துக் கொண்டு ஓடி அருகே வந்ததும், சட்டென இனம் கண்டவைபோல வாலையாட்டிக் கொண்டு பின்தங்கிவிட்டன.

படலை என்ற பெயரில் வேலிக்கட்டுடன் தொங்கிக் கொண்டிருக்கும் பழைய 'கார்' கதவுத்துண்டை ஓசைப்படாமல் மெதுவாகத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.

குடிசை முழுவதும் இருள் மண்டிக்கிடந்தது. செல்லாச்சி வேளைக்கே எழுந்து சாணம் பொறுக்க வயல்ப் பக்கம் போயிருந்தாள். சின்னர்க் கிழவரின் கைவண்டியையும் அங்கு காணவில்லை.

திண்ணை மூலையில் கிடந்த அவனுடைய ஓலைத் தடுக்கு அங்கு இல்லை. நித்திரை கண்ணை விழுத்தியது. தட்டியில் சொருகிக் கிடந்த பேப்பரை எடுத்து திண்ணையில் விரித்துப் போட்டுவிட்டு கைகளை தலைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டே அப்படியே சுருண்டு படுத்துக் கொண்டான்.

இப்பொழுது நன்றாக விடிந்து பொழுது உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தது. சூரியனின் சுள்ளென்ற வெளிச்சம் முதுகுப்புறம் தெறித்தும் அவன் எழும்பவில்லை. புரண்டு புரண்டு படுக்கிறான். அவனால் சரியாகத் தூங்கமுடியவில்லை. மனம் புதிதாகத் திரையிடப்பட்டிருந்த படத்தைப் பற்றியும் அதற்குத் தேவையான இரண்டு ரூபா பணத்தைப் பற்றியுமே அலைமோதிக் கொண்டிருந்தது.

படலை திறந்து கொள்ளும் கிறீச் சத்தம். மெதுவாகத் தலையை உயர்த்தி வாசலைப் பார்க்கிறான். அவனுடைய தந்தை சின்னர் அலுப்பாந்தியில் இருந்து வேலை முடிந்ததும் தனது கைவண்டியைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து முற்றத்து வேப்பமரத்தின் கீழ் விட்டுவிட்டு, வியர்வை சிந்தி கறுத்து மினு மினுத்துக் கொண்டிருந்த நைந்துபோன உடலை, தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து துடைத்துக் கொண்டே... ஆயாசத்துடன் உள்ளே வருகிறார்.

அவன் இப்பொழுது எதுவும் அறியாதவன்போல் கண்களை மூடிக்கொண்டு தூங்கும் பாவனையில் நடப்பவற்றைக் கிரகித்துக் கொண்டு கிடந்தான்.

''செல்லாச்சி... செல்லாச்சி...'' சின்னர்க் கிழவன் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தார். விறுந்தையில், விடிந்து பொழுது ஏறியும் நித்திரையில் புரண்டு கொண்டு கிடந்த ராசனைக் கண்டு கொண்டார்.



கோபத்தினாலும் வேதனையினாலும் உடல் கொதித்தது. அவனுடைய பொறுப்பற்ற போக்கினால் வீட்டில் நடந்துவரும் தொல்லைகளை நினைக்கையில் அவனை வெட்டிப்போட்டால்கூடப் பரவாயில்லை என்பதுபோல் சிலவேளை யோசிப்பார்.

''செல்லாச்சி... செல்லாச்சி...'' மீண்டும் குரல் கொடுத்தபடியே முற்றத்திலிருந்த கிணற்று வாளியை எடுத்துக் கொண்டார் சின்னர்க் கிழவன்.

''எப்பன் பொறுங்க... வாறன்...'' குசினிக்குள் தேநீர் வைத்துக் கொண்டிருந்த செல்லாச்சிக் கிழவி குரல் கொடுத்துக் கொண்டே தேத்தண்ணியும் கோப்பையுமாக வெளியே வந்தாள்.

''உவன் ராசன் எப்ப வந்து படுத்தவன்?''

''உப்பதான் வந்து மல்லாந்து கிடக்கிறான்.'' செல்லாச்சிக் கிழவியும் கோபத்துடன் சீறினாள்.

''இரா முழுவதும் ஊர்லாத்திப்போட்டு காவாலிப் பொடியளோட சேர்ந்து படம் பார்க்கிறது. விடிய வந்து படுக்கிறது. வேலையா வெட்டியா... உவனுக்கு படத்துக்கு மாத்திரம் எங்க இருந்து காசு வருதோ... முருகா...''

''இதுதான் இண்டைக்கு உழைப்பு. மத்தியானத்துக்குப் பாணை எண்டாலும் வேண்டுவம்.'' சின்னர்க் கிழவன் மடியில் சுற்றியிருந்த சில்லறைக் காசுகளை பக்குவமாக எடுத்துச் சின்னாச்சிக் கிழவியிடம் கொடுத்துவிட்டு மெதுவாகக் கிணற்றடிப் பக்கம் நகர்ந்தார். ''இதுகள் என்னத்தைக்காணும். நேத்து கனகத்திட்ட வேண்டின கடன்காசு குடுக்கக்கூடக் காணாது.''

சின்னாச்சிக் கிழவி தனக்குள் முணுமுணுத்தபடியே திரும்பிப் பார்க்கிறாள். அவன் இன்னும் புரண்டு கொண்டுதான் கிடக்கிறான்.

''டேய் ராசன் எழும்படா. இந்தா தேத்தண்ணியைக் குடி. விடிஞ்சு இவ்வளவு நேரமாப் போட்டுது, வெக்கம் கெட்ட இளந்தாரி.''

அவன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு விழித்தபடிதான் கிடந்தான். ஆகிலும் அப்பொழுதுதான் தூக்கத்திலிருந்து விடுபட்டவன்போல் அலுப்புடன் எழுந்து பார்த்தான். சின்னாச்சிக்கிழவி புருசன் கொண்டு வந்து கொடுத்த பணத்தை உள் அறையில் கொடியில் கிடந்த சேலைத்தலைப்பில் முடிந்து கொண்டிருந்தாள்.

அவன் கொஞ்சம் கொஞ்சமாகத் தேநீரை உறிஞ்சியபடியே பார்த்துக் கொண்டிருந்தான்.

சில கணங்கள் சென்று மறைந்தன வெளியே தெருவில் சிறுவர்களின் ஆரவாரக்குரல். அதைத் தொடர்ந்து கூட்டுறவுக் கடைகளுக்கு பாண் ஏற்றிச் செல்லும் லொறியின் உறுமல் சத்தம் பெரிதாகக் கேட்டது.

குசினிக்குள் இருந்த சின்னாச்சி பரபரப்புடன் வெளியே வந்து அறைக்குள் நுழைந்தாள். சின்னார்க் கிழவன் பசி மயக்கத்தில் சோர்ந்து போய்ச் சுருண்டு கிடக்கிறார்... முனகல் சத்தமும் பெரிதாகக் கேட்டது.

சின்னாச்சிக் கிழவி, கொடியில் கிடந்த சேலையைப் பார்க்கிறாள். அது அவிழ்ந்து கிடந்தது... அவள் அதிர்ச்சியினாலும், ஆத்திரத்தினாலும் உடல் வெட வெடக்க குடிசைக்கு வெளியே வந்தாள்.



''கோதாரியில... கொள்ளையில போவான். உழைக்காம இருந்து தின்னிறதும் பத்தாம... அந்த மனுசன் பாடுபட்டுக் கொண்டு வாறதையும் கொண்டுபோய்ப் படத்துக்குக் கொட்டுகிறானே...'' அவள் குரல் எடுத்து அழுதாள்.

அவன் எதுவும் கேட்காதவனாய் மறுபடியும் தனது அபிமானத்துக்குரிய நடிகனைத் திரையில் பார்த்துவிடும் தீவிரத்தில் தியேட்டரைத் தேடி நடந்து கொண்டிருந்தான்.

O

# கட்டுகள்

வானொலியில் ஏதோ சினிமாப் பாடல் இரைந்து கொண்டிருந்தது. அந்தப் பாட்டோடுகூட தானும் முணுமுணுத்துக் கொண்டிருந்தாள் தங்கச்சி பத்மா.

''ஏ...பத்மா... கொஞ்சம் குறைச்சுவை ரேடியோவை. அது குளறுகிறது பத்தாம இவ வேற பாடுறா.''

சாப்பிட்டுவிட்டு கைகளைத் துடைத்துக் கொண்டே அடுக்களையிலிருந்து வெளியே வந்தவன் எரிச்சலுடன் சத்தம் போட்டான்.

அவனுடைய உரத்த சத்தம் கேட்டதும் பாட்டு திடீரெனத் தணிந்தது. மழை அடித்து ஓய்ந்த அமைதி. மறுபடியும் மெல்லிய முணுமுணுப்பு.

''விடிஞ்சா பொழுதுபட்டால் ரேடியோவுக்கு பக்கத்திலேதான் படுத்துக்கிடக்கிறாள். வேல வெட்டிக்குச் சொன்னாத்தான் அதுக்க நோகுது...இதுக்க பிடிக்குது என்று சாலம் காட்டுகிறாள். ஒருக்கா இவளை கொஞ்சம் உறுக்கிவை மோன.''



அம்மா அடுக்களைக்குள் இருந்தபடியே முறையிட்டாள். இவன் எதுவும் பேசவில்லை. ''ஹாங்க''ரில் கொழுவிக்கிடந்த சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டான். வாசலில் கிடந்த செருப்பை கால்களில் செருகிக் கொண்டே விருந்தையைவிட்டு இறங்கினான்.

சாப்பாடு வயிற்றுக்குள் இறங்கியதும் உதடுகளில் வழமைபோல் ஏற்படும் அரிப்பு. 'எப்படியாவது ஒரு சிகரட் வாங்கிப் பற்ற வைத்து விடவேண்டும்' என்ற மனத்தவிப்புடன் படலையை நோக்கி நடந்தான்.

''தம்பி! மறுபடியும் மழை வரும்போல இருக்கு. குடையை எடுத்துக் கொண்டு போ மோன...'' உரத்துக் கூறிக்கொண்டே அடுக்களைக்குள் இருந்து எழுந்து வெளியே வந்த அம்மா அவனை நெருங்கி வந்து மெதுவாகக் குசுகுசுத்தாள்.

''...தம்பி...அக்காவிட விஷயமாக ஐயாவாக்கள் பேசப் போயிருக்கினம். இப்ப வந்து விடுவினம். துலைய போகாம சுறுக்கா வந்துவிடு மோன...''

அவன் பதில் எதுவும் சொல்லவில்லை. மௌனமாகப் படலையைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். வீதி முழுவதும் இருண்டு கிடந்தது. சற்று நேரத்துக்கு முன் பெய்து ஓய்ந்த மழையினால் மின்சாரத்தில் எங்கேயோ பழுது ஏற்பட்டிருக்க வேண்டும். வீதி விளக்குகள் முழுவதும் அணைந்திருந்தன. மை இருளில் வெள்ளை இராட்சதர்களாய் விளக்குக்கம்பங்கள் பயமுறுத்தின.

வானத்தை நிமிர்ந்து பார்த்தான். மறுபடியும் மேகங்கள் திரண்டு கொண்டு வந்தன. திடுமென மழை வந்துவிடும்போல பயமுறுத்தின. துமி ஒன்று காதுப் பொருத்தில் விழுந்து ஜில்லிட்டது.

அவன் நடையைத் துரிதப்படுத்தினுன். 'அம்மா சொன்னதுபோல குடையைக் கொண்டு வந்திருக்க லாம். விசர் வேலை பாத்திற்றன். இப்ப மழை வந்திற் ருல் என்ன செய்யிறது...'

ஒரு கணம் மனம் அங்கலாய்த்தது. மறுகணமே அதை நிராகரித்தது. தன்னைத் தானே மறுபரிசீலனை செய்து கொண்டு விட்டதுபோல் வெட்கப்பட்டது.

பெரிய மழை பெய்த போதும்கூட விறுமன்களாட் டம் கோவில் வளவில் நின்று நாள் முழுவதும் கால் பந்து விளையாடிக் கொண்டிருந்த அவன் இந்தத் தூமியைக் கண்டதும் குடையை நினைத்துக் கொண் டதை நினைத்து தனக்குள் ஏற்பட்ட மாற்றத்தை வியந்தான். அதற்குக் காரணமான அந்த வாழ்வை யும் எண்ணிக்கொண்டான்.

அவன் தேகம் புல்லரித்தது. அவன் கொழும்பு பெரிய தபாற்கந்தோரில் ''ரெலிபோனிஸ்ட்'' டாக் உத்தியோகம் ஏற்று ஆறு மாதங்கள்தான் கடந்திருந் தன. அந்த ஆறு மாத காலத்துக்குள் அவனுக்குள் ஏதோவொன்று இருந்து கொண்டு அவனை மாற்று கின்ற அந்தரிப்பு. அதற்கு எதிராக அவன் போராடு வது போன்ற முனைப்பு. அது குடும்பம் முழுவதையும் பரவிப் பாதித்திருந்தது.

இம்முறை ஊருக்கு இரண்டாவது தடவையாக லீவு எடுத்துக்கொண்டு வந்திருந்தான். அதுவும் அவ னுடைய அக்காவின் திருமண விஷயமாகப் பேசி முடிவு செய்ய வேண்டியிருப்பதாக உடன் வரச்சொல்லி ஐயா கடிதம் எழுதியிருந்தார்.

இதில் தன்னிடம் கேட்பதற்கு எதுவும் இருப்ப தாக அவனுக்குத் தெரியவில்லை. அக்கா ஏற்கனவே



விரும்பிய இடம்தான். ஐயாவும் அம்மாவும் சம்மதப் பட்டால் செய்து கொடுக்கவேண்டியதுதான். முன்னம் இப்படியெல்லாம் அவனுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள அவர்கள் முயன்றதில்லை. முன்னுக்கு நின்று சொன்னுலும் வீட்டில் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில்லை.

இப்போது மாத்திரம் ஏன் இந்த நிலைமை? அவன் இப்போது அரசாங்க உத்தியோகஸ்த்தனுகி விட்டதில் புதிதாக எந்தக் கொம்பும் முளைத்துவிடவில்லையே?

அவனுக்கு உடம்பு முழுவதும் பற்றி எரிவது போல் எரிச்சல் எரிச்சலாக இருந்தது.

அந்த வீட்டில் அவனுக்குக் கிடைக்கும் உபசரிப்பு மரியாதை ஊரில் உள்ளவர்களின் திடீர் கவனிப்பு. அடிக்கொருதரம் குசல விசாரிப்பு. ஆறு வருஷங்க ளாக அலைந்து வீதிகளில் வேலையில்லாமல் திரிந்த போது...

அந்த வாழ்க்கை. அதில் அனுபவித்த நரகவேத னைகள். சொந்த வீட்டிலேயே அந்நியனுக, புறக்கணிக் கப்பட்ட நிலை. 'ஓ அந்த நரகம்...அது வரவே வேண் டாம்.

அவன் தனக்குள்ளே பெருமூச்சு விட்டுக்கொண் டான். அவனுக்குள் யாரையோ எதற்காகவோ பழி வாங்க மூண்டெழும் நெருப்பு ..

வீதியில் தண்ணீர் தேங்கி நின்ற குழிக்குள் ஒரு கால் 'சளக்'கென்று இறங்கிவிட்டது. ஒரு கணம் தடு மாறி விழப்போனவன் சமாளித்துக் கொண்டே நீருக் குள் அமிழ்ந்துவிட்ட ஒரு காலை 'அவக்'கென்று எடுத் தான்.

ஒற்றைச் செருப்பு அறுந்துவிட்டது. இரண்டு செருப்புக்களையுமே கழற்றி வேலிக்கு அப்பால் வீசி எறிந்தான். வெறும் கால்களுடனேயே அந்த நனைந்த வீதியில் 'காயாக' நடந்தான்.

கால்களில் செருப்புகள் அணியாமல்தானே இந்த ஊரிலுள்ள கல் ஒழுங்கைகளிலும்... முள்ளுப் புதர்களிலும்... சேற்று நிலங்களிலும் நடந்து திரிந்தவன். இப்போது என்ன வந்துவிட்டது.

சற்று தூரத்தில் அந்த வீதி மிதக்கின்ற சந்தியில் இருக்கும் மணியண்ணரின் கடை திறந்துதான் கிடந்தது. கடைக்கு முன்னால் கொழுவியிருந்த அரிக்கன் லாம்பின் வெளிச்சத்தில் சிலர் சாமான்கள் வாங்கிக் கொண்டு நிற்பது தெரிந்தது ..

அவன் எதிரில் சைக்கிளில் யாரோ இருவர் வந்து கொண்டிருந்தனர். அதில் பின்னால் 'கரியரி'ல் குந்தியிருந்தவன் கேட்டான் ''என்ன நேரம் அண்ணை இருக்கும்?''

இவன் நேரத்தைக் கவனிப்பதாக மணிக்கட்டைப் பார்த்தான். அப்பொழுதுதான் கைக்கடிகாரம் கட்டிக் கொண்டு வராதது நினைவுக்கு வந்தது. அதனால் என்ன ''இப்ப எட்டரை மணி இருக்கும். படம் தொடங்கியிருக்காது. கெரியாப்போனா ரிக்கற் எடுக்கலாம்.''

இவன் அவர்கள் கேட்காத கேள்விக்குப் கூட பதில் அளித்துவிட்டு வெறுமையாகக்கிடந்த மணிக்கட்டில் பதிந்திருந்த கைக்கடிகாரத்தின் வடிவத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

கடைக்கு முன் அவனைக் கண்டதும் மணியம் அண்ணர் காவிப்பற்கள் தெரிய சிரித்தார். சற்று



நேரம் வரை சாமான் வாங்க வந்து நின்றவர்களுடன் சள்...சள் என்று எரிந்து விழுந்து கொண்டிருந்தவர் அவர். ''என்ன தம்பி.. எப்ப கொழும்பால வந்தனி... அங்கேயும் மழை நல்லாப் பெய்யுதோ...?''

அவர் வழமையாகக் கேட்கும் கேள்விதான். அதில் எந்தவித வாஞ்சையும் இல்லை. ஒப்புக்காக ஏதாவது சொல்லி வைக்கவேண்டும் என்று நினைத்தவன் அடுத்த கணம் எதையோ நினைத்துக் கொண்டவனாய் மௌனமாகிவிட்டான்...

சின்ன வயதில் எப்போதோ ஒரு நாள் அரை ருத்தல் பாண் வாங்கிச் செல்ல வந்தபோது ஒரு சதம் குறைந்துவிட்டது என்பதற்காக... வீட்டுக்குத் திருப்பி அனுப்பி.. வீதியில் இருட்டில் கிடந்த நாய்மேல் இடறுப்பட்டு...அதன் கூரிய பற்கள் அவன் தொடையில் பதிய...அம்மா... அம்மா... என்று குளறிக்கொண்டு வீட்டைத் தேடி ஓடிய ஓட்டம்...

''அக்காவுக்கு கல்யாணப் பேச்சு நடக்குதுபோல் இருக்கு...அதுவும் கனகாலமாக வீட்டோட இருக்கு. குமர் காரியத்தை வசதி வரும்போதே செய்துபோட வேணும்...பொடியனும் நல்ல குணமுள்ளவன்.. சோலி சுரட்டுக்குப் போகாத குடும்பம்...தம்பி இந்தச் சம்பந்தத்தை விட்டுடாதீங்க''

மணி அண்ணர் கதைத்துக் கொண்டே தன் அலுவலில் கண்ணாக இருந்தார். அடிக்கொரு தரம் வெற்றிலையைக் கிள்ளி பாக்குச்சீவலை கொடுப்புக்குள் திணித்துக் கொண்டிருந்தார். அது கடைவாயால் வழிந்து கொண்டிருந்ததைக் கண்டதும் அவனுக்கு அருவருப்பாக இருந்தது.

பைக்குள் கிடந்த ஒரு ரூபா குற்றியை எடுத்து மணி அண்ணரிடம் நீட்டிக்கொண்டே ''இரண்டு பிறிஸ்டல் தா அண்ணே'' என்று கேட்டான்.

மணி அண்ணர் அவனை அதிசயமாகப் பார்த்தார். இவன் சிகரட் பற்ற வைத்ததை அவர் ஒருபோதும் கண்டதில்லை. அவர் என்ன, அந்த ஊரிலேயே ஒருவரும் கண்டிருக்கமுடியாது.

மூன்று மாதத்திற்கு முன் "நைற் சிவ்ட்" செய்து கொண்டிருந்தபோது நித்திரை விழிக்க உதவும் அந்த மருந்தைப்பற்றி, கூட வேலை செய்து கொண்டிருந்த நண்பன் வற்புறுத்தியதின் பேரில் அதைத் தொடக்கி வைத்தான்.

"நாலு பேரோடு...நாலு இடத்தில பழகிறனீங்க இது எல்லாம் குடிக்கத்தானே வேணும்...இதில் என்ன குறையிருக்கு தம்பி."

மணி அண்ணர் தனக்குள் எழுந்த கேள்விக்குத் தானே வியாக்கியானத்தைக் கூறிக்கொண்டு இரண்டு சிகரற்றுகளையும் மிகுதிச் சில்லறைகளையும் கொடுத்தார்.

அவன் ஒரு சிகரட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். மேசையில் கிடந்த காகிதத்துண்டை எடுத்துப் பக்கத்தில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கில் பிடித்து மற்ற சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டே வீட்டை நோக்கித் திரும்பி நடந்தான்.

அவன் வீட்டுக்கு நாலு வீடு தள்ளி முன்னுக்கு இருக்கும் அமெரிக்கன் பெஷன் வீடுதான் பெரியதம்பியருடையது. அந்த வீட்டுக்கு முன்வரும்போதெல்லாம் நெஞ்சில் ஒரு படபடப்பு...இதயத்தின் அசைவில் இயந்திர வேகம்...

அன்று ஒரு நாள் இருட்டில் குதிரை உயரத்துக்கு வளர்ந்த அந்த நாயின்மேல் இடறுப்பட்டு...



அந்த சனியன் கேற்றுக்குள் சுருண்டு கிடந்து அவனையே உற்றுப் பார்ப்பதுபோல்...

அவன் இப்போது பயம் கொள்ளவில்லை. தொடையில் அழுத்தமாகப் பதிந்திருந்த அவற்றின் வடுக்களை மாத்திரம் சாரத்துக்கு மேலால் தடவிப் பார்த்துக் கொண்டான்.

தூரத்தில் குள்ளமான ஒருவன் கைகளை உயர்த்தி வீசி தனக்குள் எதையோ உரத்துப் பேசி பாவனை செய்துகொண்டு வந்தான். கையில் வைத்திருந்த சிகரட்டை வாயில் வைத்து ஒரு தடவை தம் பிடித்து இழுத்துவிட்டு விரல் இடுக்கில் ஒளிப் பொட்டு தெரியாமல் மறைத்துக்கொள்ள நினைத்தவன், மறுகணம் தன்னுடைய செய்கைக்காக வெட்கப்பட்டான்.

"எனக்கு நியாயம் என்று படுகிறதை செய்யிறதுக்கு மற்றவங்களுக்காக ஏன் பயப்படவேணும், ஒளிக்கவேணும்?"

தூரத்தில் வந்தவனை இனம் கண்டுகொண்டான். அவனுடைய சிநேகிதன் ஆனந்தன், புதிய நாடகம் ஒன்றின் ஒத்திகையை வீதியிலேயே தனிமையில் செய்து கொள்கிறான். அப்படி ஒரு பழக்கம் அவனுக்கு. அந்த வழக்கத்துக்காக அவனை "பனியன்" என்று ஏளனமாக முதுகுப்புறம் நின்று பலர் நகைப்பதும் அவனுக்குத் தெரியும். அதற்காக அவன் எப்போதுமே கவலைப் பட்டதில்லை. அது தன்னுடைய கலை ஆர்வம் என்று பெருமைப்பட்டுக்கொள்வான். ஊரிலிருந்தபோது இருவரும் சேர்ந்தே பல நாடகங்களை மேடையேற்றியிருக்கின்றனர்.

"என்ன மச்சான் ... புது நாடகத்துக்கு ஒத்திகை நடக்குதோ"

"ஓம்... மச்சான்... இந்த மாதம்... புது நாடகம் அரங்கேத்திறம், சிலம்பு - புதுமையாக இருக்கும்."

இவன் தனக்குள் சிரித்துக்கொண்டான். சிலம்பில் என்ன புதுமை செய்யப்போகிறான்?

இருவரும் சில நிமிடங்கள் தங்கள் பழைய வாழ்க்கைகளைப் பற்றி நினைவு மீட்டுக்கொண்டனர். பல புதிய தகவல்களைப் பரிமாறிக்கொண்டனர். ஆனந்தன் வேலை கிடைக்காததைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டான். இவன் அலுத்துக்கொண்டான்.

"அப்ப போறதுக்கு இடையில வீட்ட வந்திற்றுப் போ மச்சான், அம்மா கூட நீ வீட்ட வருவதில்லை என்று குறை நினைக்கிறா..."

அவன் நண்பனிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டை நோக்கி நடையைத் துரிதப்படுத்தினான்.

அக்கா உள் அறையில் இருந்து பீடி இலை வெட்டிக்கொண்டிருந்தாள். பத்மா வீட்டுக்குள் இருந்து கொண்டு சுற்றியிருந்த சின்னஞ் சிறுசுகளுக்கு தான் சமீபத்தில் பார்த்த தமிழ் சினிமாப் படத்தின் கதையைப் பாவத்துடன் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அம்மா திண்ணையில் தூண் அருகில் குந்திக் கொண்டு வாசலையே பார்த்துக்கொண்டிருந்தாள் ... அம்மா வாசலில் யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் என்பது அங்குள்ள சகலருக்கும் தெரியும்.

ஐயா வீட்டை விட்டு அம்மான் வீட்டுக்குப் போய் ஒரு மணித்தியாலம் கடந்திருக்கும். அவ்வளவு நேரமும் அங்கு என்ன பேசுவதற்கு இருக்கு என்று அவனுக்கு விளங்கவில்லை.



அவன் வரும்போது புகையிரதத்துக்குள் படிப்பதற்காக வாங்கி வைத்திருந்த நாவலை மீண்டும் கையில் எடுத்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான், அது அலுப்புத்தட்டுகிற அழுகுண்ணாணிக் காதல் கதை.

வாழ்க்கையின் சாராம்சத்தை அதன் சிக்கல்களை அவனால் அதில் தரிசிக்க முடியவில்லை.

அவன் எப்போதாவது இப்படிப்பட்ட கதைகளைப் படிக்க நேர்ந்திருக்கிறது. அவற்றையே விழுந்து விழுந்து படிப்பவர்களையும் அவனுக்குத் தெரியும் ...

ரேடியோ இருந்த மேசைக்குப் பின்னாலும், அவை போல் சில புத்தகங்களும் அவன் கண்ணுக்குத் தட்டுப் பட்டன...

அது தங்கச்சியின் வேலையாகத்தான் இருக்கவேண்டும் என்று அவன் ஏற்கனவே ஊகித்துக்கொண்டான். அவன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு வெள்ளைத் தாள் ஒன்றைக் கிழித்து எடுத்து அறை நண்பன் ஏரம்பமூர்த்திக்கும், கந்தோரில் வேலை செய்யம் ரஞ்சினிக்கும் காகிதம் எழுதவேண்டும் என்று நினைத்தவனாக பேனாவைத் தேடினான்.

அவன் சேட் பையில் குத்தியிருந்த பேனாவை யாரோ எடுத்துவிட்டமை அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது.

"சேட் பொக்கற்றில் இருந்த பேனையை யார் எடுத்தது? மரியாதையாகச் சொல்லிப் போடுங்க"

அவன் குளறியது வீடு முழுவதும் அதிர்ந்தது. அம்மா பதறிப்போய் திரும்பிப் பார்த்தாள்.

சின்னவன் பேனாவைக் கையில் வைத்துக்கொண்டு சுவர் அருகே மசிந்திக்கொண்டு நின்றான். செய்யாத குற்றத்திற்காக தண்டனை அனுபவிக்கக் காத்திருக்கும் அப்பாவியின் மிரட்சி.

''ஆரடா...இது எடுத்தது? நீயா எடுத்தனி?''

அவன் இல்லை என்பது போல் தலை அசைத்தான். வாய் எதையோ முணுமுணுத்தது.

''அக்காவா எடுத்தவ?''

''ஆங் ... அண்ண ...''

''என்னட சாமான்களை ஒருத்தரும் தொடக் கூடாது என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறன்''

அவன் சத்தம் போட்டுவிட்டு முதலில் நண்பன் ஏரம்பமூர்த்திக்குக் கடிதம் எழுதத் தொடங்கினான்... மழை திடீரெனப்பலத்தது. யாரோ படலையைத் திறந்து கொண்டு மழையில் நனைந்தபடி உள்ளே வருவது தெரிந்தது...அது ஐயா தான். அம்மா ஆவலுடன் குந்தில் இருந்து எழுந்துகொண்டாள்.

கத்திரிக்கோலுக்கு இடையில் நறுக்... நறுக்... கென்று பீடி இலை அறுபடும் ஓசை நின்றுவிட்டது. அக்காவும் வெளித் திண்ணைக்கு வந்துவிட்டாள். பரீட்சை முடிவை எதிர்பார்த்திருக்கும் மாணவனின் முகத்தில் உள்ள ஏக்கம் அவளுக்கு. முகத்தில் வழிந்து கொண்டிருந்த மழை நீரை வளையில் கிடந்த துண்டி னால் துடைத்துக்கொண்டே உள்ளே வந்தார். அவர் முகத்தில் களை இல்லை. போனபோது இருந்த உசார் எங்கேயோ ஓடி மறைந்துவிட்டது.

ஐயா நினைத்துக்கொண்டு போனதற்கு மாறாக அம்மான் வீட்டில் நடந்திருக்கலாம் என்று மட்டும் அவனுக்குப் புரிந்தது. அவன் இன்னும் அமைதியாக



எழுதிக்கொண்டுதான் இருந்தான் — அங்கு நடக்க இருப்பதைப்பற்றி அவனுக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாதவன் போல் ...

சில நிமிடங்கள் வரை ஐயாவும் அம்மாவும் என் னவோ குசுகுசுத்தார்கள். எந்தவித வாக்கியங்களும் தெளிவாக அவனுக்குக் கேட்கவில்லை. அவனுடைய பெயர் மாத்திரம் அங்கு அடிக்கடி பாவிப்பதை கிரகித் துக்கொண்டான். ஏரம்பமூர்த்திக்குக் கடிதம் எழுதி முடித்துவிட்டு ரஞ்சினிக்கு எழுதத் தொடங்கியபோது தான் அம்மா அருகே வந்து நின்றாள்.

''தம்பி அக்காவட கல்யாணம் குழம்பிப்போயிடும் போல இருக்கு.'' அம்மாவின் குரல் தழுதழுத்தது. அம்மா சின்ன விசயத்திற்கும் மூக்கைச் சீறி அழுபவள் தான்.

''ஏன் அக்காவும் அவரும் ஒருத்தரை ஒருத்தர் கன காலமாக விரும்பி இருந்தவங்கதானே... வீட்டி லும் விருப்பம் தானே... அவையளுக்கு என்ன வந்திற்று சீதனம் ஏதும் கூட எதிர்பார்க்குவினமோ ...,''

''இல்ல மோன, எல்லாத்துக்கும் ஓம் எண்டு தான் இவ்வளவு நாளும் இருந்தவிய. இப்ப...திடீரென பதில் மாப்பிளை தந்தால் தான் செய்வினம் எண்டு நிக்கு வினம்.''

அவன் அதிர்ச்சியுடன் அம்மாவை நிமிர்ந்து பார்த்தான். அவன் முகம் கறுத்து இறுகிக் கிடந்தது. அந்தக் கண்களில் தெரிவது கோபமா ... பரிதாபமா... இன்னதென இனம் கண்டுகொள்ள முடியாத ஏதோ ஓர் உணர்வு. அம்மாவால் தெரிந்துகொள்ள முடிய வில்லை.

"எல்லாம் திட்டம் போட்டுத்தான் என்னைக் கொழும்பில் இருந்து காயிதம் எழுதிக் கூப்பிட்டிருக்குவினம்."

அவன் விறுக்கென்று கதிரையை அரக்கிக்கொண்டு எழுந்தான். வளையைப் பிடித்துக்கொண்டு நின்றபடி இருண்டு கிடந்த சூனியத்தை உற்று நோக்கினான். ஒருகணம் வெறுமை அவன் இதயத்தை அரித்தது. மறுபடியும் கதிரையில் வந்து குந்திகொண்டு மேசையில் முகம் கவிழ்ந்தான். மீண்டும் தலையை நிமிர்த்தி அம்மாவைப் பார்த்தான்.

ஐயா... அக்கா... தம்பி... தங்கைகள் அவன் வாயிலிருந்து விடுதலை பெறப்போகும் வார்த்தைக்காகக் காத்து நிற்கின்றனர்.

"அதுக்கு... இப்ப... நீங்க என்ன செய்யப் போறீங்க..."

"நீ ஓம் எண்டு ஒரு வார்த்தை சொன்னால் சரி தம்பி. உன்னைத்தான் பதில் மாப்பிள்ளையாக கேக்குவினம். அந்தப் புள்ளயும் நல்ல குணமானவள் மோன".

அவன் இப்போது அதிர்ச்சியடையவில்லை. அவனுக்கு அம்மா, ஐயா, அக்கா, தங்கைச்சிமார்... மாமன் மாமி... மாப்பிள்ளை இந்த சமூகம் எல்லாவற்றிலுமே எரிச்சல் எரிச்சலாக வந்தது.

அக்காவுக்கு அவன் பிணை நிற்கவேண்டும். அவனைத் தொடர்ந்து வருகின்ற தங்கைமாருக்கு இவ்வாறு பிணை நிற்க எத்தனை தம்பிமார்கள் தயாராக இருக்கிறார்கள். அவனுக்கு என்று தனிப்பட்ட ஆசைகள் ... விருப்பு வெறுப்புகள் அவன் எதிர்கால வாழ்வு பற்றி ஏன் இருக்கக்கூடாது? அத்தனையும் குடும்ப... உறவுகள் என்ற கட்டுக்குள் அடங்கவேண்டியவை தானா...?



அவன் மௌனமாகத் தலையை மேசையில் கவிழ்த்துப் போட்டுக்கொண்டு கிடந்தான். அம்மாவுக்குப் பொறுமை இல்லை. "தம்பி... என்ன முடிவு மோன சொல்லுற...?"

அவன் மீண்டும் தலையை நிமிர்த்திப் பார்த்தான். அம்மாவைப் பார்க்க அவனுக்கு இப்போது பரிதாபமாகத் தான் இருந்தது. எல்லாத் துயரங்களுமே அவள் முகத்தில் சாசுவதமாகிவிட்ட இறுக்கம்.

அவன் அமைதியாக பதட்டமில்லாமல் சொன்னான்: "அம்மா... இனிமேல் யாருக்கும் கல்யாணம் பேசப்போறதாக இருந்தால் பதில் மாப்பிள்ளை கேட்காத இடமாகப் பார்த்துப் போங்க."

அம்மா அவன் பேச்சைக் கேட்டதும் அப்படியே அலமந்து போய் நின்றாள்.

o

# ஒரு வெறும்மனிதனின் மரணம்

கீழே சலசலத்து ஓடும் வெள்ளம். அதன் வீச்சில் துள்ளித் துவண்டு எங்கேயோ அமிழ்ந்து போகும் செழுத்து மீன் குஞ்சுகள். அவற்றைப் பிடித்துவிடும் எத்தனிப்பில் கரையின் இரு மருங்கிலும் தூண்டில் தடியுடன் காத்திருக்கும் சிறுவர் கூட்டம்.

அந்த மதகுக் கண்களுக்கு மேல் குந்தி இருந்து கொண்டு அவற்றையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான் சின்னவன்.

'களுக்... களுக்...' என ஒரு இழுப்பு. தூண்டிலில் ஏதோ ஒன்றின் கனப்பு. நீரின் சுழிப்பையும் எதிர்த்து 'தங்கூசி' எங்கேயோ நகர்ந்தது. மறுபடியும்' வெடுக்கென ஒரு வெட்டு. தூண்டில் தடிகள் மேல் எழுந்தன. தூண்டிலில் அகப்பட்டுக்கொண்ட மீன் குஞ்சுகள் அந்தரத்தில் உடலைப் போட்டு அடிக்க கரையிலோ... கூய்... கூய்... என ஆரவாரித்தது.

மகிழ்ச்சியில் விரிந்த முகங்கள் மறுபடியும் மறுபடியும் தூண்டில் கயிற்றை அகல எறிய எதுவுமே அகப்படாத சிலர் ஏமாற்றத்துடன் இன்னும்தான் ஒரு இழுப்புக்காகக் காத்து நின்றனர்.



"வீட்ட சாருக்குள்ள ஒழிச்சு வைச்சிருக்கிற தூண்டிலக் கொண்டுவந்து நானும் ஒருக்கா மீன் பிடிச்சா என்ன...''?

எப்போதோ ஒரு நாள்! ''தூண்டிலைக் கையால தொடக்கூடாதடா வடுவா... என்னப்போல நீயும் உப்புத் தண்ணியுக்கை கச்சப்பட்டோட இறங்கப்போற போல இருக்கு...' என்று அப்பன் அடித்த கையோடு அந்த ஆசையை விட்டவன்தான் அவன்.

ஆனாலும் என்ன! நீர் நிறைந்த மீன்கள். ஒன்றின் மேல் நின்று புரள அவனுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. கையில் கனத்துக்கொண்டிருந்த புத்தகங்களை கல் ஒன்றின் மேல் வைத்தான். நனைந்த மண்ணில் புதைந்து கிடந்த சிப்பிகளைத் தேடிக் கிண்டி எடுத்தான்.

'சர்' என்று பறந்தது ஒரு சிப்பி. அப்பொழுது தான் புரண்டு நீரின் மேல் எழுந்து கொண்டிருந்த மீன் குஞ்சின் மேல் விழுந்திருக்கவேண்டும். ஆனாலும் என்ன, ஒரு மீன் தன்னும் செத்து விழவில்லை. அவன் மீண்டும் மீண்டும் சிப்பிகளைக் கையில் எடுத்து எறிந்து கொண்டிருந்தான்.

அந்தச் சூழ்நிலையிலே இழந்துபோனவன், திடீரென விழித்துக்கொண்டவன் போல் நிமிர்ந்து, கண்கள் மிரள விழித்து, நாலு பக்கமும் பார்த்தான். அவன் பார்த்துக்கொண்டிருந்தபோதே அந்தச்செந்நிற வட்டம் வானத்தின் அடிவயிற்றுள் புதைந்தே போனது. 'சடக்' கென ஒளி அழிந்து இருள் முளைத்தது. நீர்நிலைகளின் பழுப்புத் தோல் உரிய மெலிய கருமை இழுத்துப் போர்த்துக்கொண்டது

அங்கு நின்றவர்களில் இப்பொழுது எ[illegible] இல்லை. அவன் அந்த இடத்தைவிட்டு எழுந்துகொ[illegible]

டான். கையில் புஸ்தகங்களை எடுத்துக் கொண்டே வீட்டைத் தேடி நடந்தான்.

அவன் படலையைத் திறந்தபோது முதலில் கண்ணில் பட்டது தகர விளக்கு வெளிச்சத்தில் பாயில் கிடந்த அப்புவும் அவர் அருகே குந்திக்கொண்டிருந்த ஆச்சியும் தான்.

இவன் மெதுவாக உள்ளே வந்தான். இப்பொழுதுதான் முற்றத்தில் நின்று கொண்டிருந்த அப்புவின் சம்மாட்டி தொம்மையனைக் கண்டுகொண்டான். அவன் எதுவுமே பேசாமல் சாருக்குள் இருந்த பக்கீஸ் பெட்டிக்குள் புஸ்தகங்களை வைத்துவிட்டு பைக்குள் கசங்கிப் போயிருந்த படங்களை எடுத்து ஒவ்வொன்றாக அழகழகாக கொப்பியில் ஒட்டத்தொடங்கினான். சிவப்பு, பச்சை, மஞ்சள்... ஊதா... நீலம்... கலர் கலராக ஏதேதோ மலர்கள். அவன் இதுவரை பார்த்திராத மலர்கள். பளபளப்பான காகிதம். இவனுடைய சிநேகிதன் ஏதோ ஓர் புஸ்தகத்தில் கத்தரித்துக்கொண்டு வந்து கொடுத்தவை அவை...

இப்போதுதான் நீண்ட மௌனத்தின் பின் தொம்மையனின் பேச்சுக் கேட்டது. இவன் எப்போதோ இங்கு வந்திருக்கவேண்டும். வெகுநேரமாக பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவனுடைய கரகரத்த குரலில் கனைப்புத் தெரிந்தது.

'இந்தா அன்னம்மா... நான் போறன்... நாளைக் கிடையில ஒரு முடிவு தெரியவேணும். என்ர காசக் கொண்டுவந்து வைக்கவேணும். இல்லாட்டி இவன் சின்னவனையாவது என்னோட கடல விடவேணும். நீங்க படுகிற கஷ்டத்தில இவனுக்கு என்ன படிப்பு வேண்டியிருக்கு...'



தொம்மையரின் காலடி ஓசை விசுக் .. விசுக்... கென்று சென்று தேய்ந்து மறைந்ததும்தான் ஆச்சியின் குரல் கேட்டது.

''சீ, இப்பிடியும் ஒரு மனுசனுக்குப் போய் உழைச்சுக் குடுத்தியே... ஒரு ஆயிரத்தி ஐநூறு ரூபாக் காசுக்கு . நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிற மனுசன் எண்டும் பாக்காமல் வீட்டில வந்து கிடந்திற்றுப் போறானே சீ...இவனும் ஒரு மனுசனா...?

சாருக்குள் இருந்த சின்னவனுக்கு எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தது. 'சரக் சரக்...'கென்று படம் ஒட்டிய பக்கங்களைப் புரட்டினான். அழகாக சிரித்த மலர்களெல்லாம்...வெறும்... கலர் கலரான கோடுகளாக புள்ளிகளாகத் தெரிந்தது. அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

அவனுக்கு நன்றாகவே ஞாபகத்தில் இருந்தது. இப்படித்தான் ஒரு மாலை நேரத்தில் அப்பு விடுவலைக்குப் போய் திரும்பி வந்திருந்தார். ஈக்கிலில கோர்த்தபடி கையில கொண்டு வந்த கொய் மீன்களை அப்படியே திண்ணையில போட்டுவிட்டு ''அலுப்பாயிருக்கு அன்னம்மா ... கொஞ்சம் சுடுதண்ணி வைச்சுத்தா...'' என்று சொல்லிவிட்டுப் படுத்தவர், அதன்பின் எழுந்து கொள்ளவே முடியவில்லை. கைகால்கள் அப்படியே சுரணையற்றுப் போனது. குரலும் நின்றுபோனது.

இதுவரையும் தொழிலுக்குக் கூட்டிப்போக வந்த தொம்மையர் அன்றிலிருந்து கொடுத்த கடனைப் பெற்றுப்போக வந்துகொண்டிருந்தார். தொம்மையருக்குத் தெரியாதா என்ன! இனி அப்புவிடம் உழைப்புச் சக்தி எதுவும் இல்லை, எல்லாமே தேய்ந்துபோனது என்பது.

இவனைக் கண்டுகொள்ளும் போதெல்லாம் சின்னவன் என்ன என்னவெல்லாம் சிந்தித்துப் பார்த்துக்

கொண்டதுண்டு. அந்த வேலிக் கதியாலோடு சாத்தியிருந்த அப்புவின் கறள் பிடித்த 'மண்டா'விஞல் சதை பெருத்த அவன் வயிற்றில் ஓங்கி ஒரு குத்து. எப்போதோ ஒரு நாய் இவன் வீதியில் செல்லும்போது வாகனம் ஒன்றில் அடிபட்டு சதை சிதறிக் கிடந்தது போல் ... ஆசைப்பட்டுப் பார்த்ததோடு சரி. அவனுல் அந்தப் பெரிய 'மண்டாவை' நிமிர்த்தித் தூக்கக்கூட முடியுமோ என்னவோ...?

படக் கொப்பியையும் விறுக்கென்று மூடிவிட்டு அந்த மண் தரையிலேயே விழுந்து படுத்துவிட்டான். தூக்கம் வருவதுபோல் இருந்தது. ஆனுல் தூக்கம் வரவில்லை. கண்களில் நித்திரையின் எரிவு .. இமைகள் கூட மூடத்தான் செய்தது. ஆனுலும் அவன் உறங்கவில்லை.

திடுமென ஒரு சோர்வில் நித்திரை நிஜமாக வந்தபோது யாரோ இவன் தலையைத் தடவிக் கொடுப்பது தெரிந்தது. அந்த ஸ்பரிசசுகம் அவன் பிறந்ததிலிருந்தே சாஸ்வதமாகி எஞ்சி நிற்கும் ஒன்று

''தம்பி சின்னவன் .. எழும்பிச் சாப்பிட்டுப்போட்டு படு மோன...''

''உம்... ஊம்...''

இவன் நினைவு மீளாத நிலையில் ஏதேதோ வாய் புலம்பினுன். மறுபடியும் சுருண்டு படுக்கப் போனுன். அவள் விடவில்லை. தோள்களை அழுத்தி நிறுத்தினுன்.

''எழும்பு மோன ... சாப்பிட்டுப்போட்டுப் படு... இந்தா கொஞ்சம் வாயத் திற ...''

இவன் அரை வாய் திறந்த நிலையில் ஆச்சியின் கையிலிருந்த சோற்றுக் கவளம் உள்ளே சென்றது. இவன் இருமித் திணறினுன். ஆச்சி தலையில் அடித்து செருமிவிட்டுக்கொண்டே தண்ணீரை வாய்க்குள் ஊற்றினுள்.



''தம்பி... ''

''ஊ ... ம்...''

அடுத்த கவளத்தை உருட்டி வாய்க்குள் திணித்தபடியே ஆச்சி கேட்டாள்...

''தம்பி... நீ தொம்மையற்ற விடுவலைக்குப் போறியா...?''

அவனுக்கு மறுபடியும் புரைக்கேறியது மறுபடியும் தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தாள். அவன் குறை பிரக்ஞையிலேயே எல்லாமே நடந்தது.

''அப்புவும் ... இப்பிடியே படுக்கையில விழுந்திற்றேர். இனி எங்களுக்கு உழைக்கிறதுக்கு ஆர் இருக்குவினம் தொம்மையட்ட பட்டகடன ஆர்குடுப்பினம்...''

சின்னவன் இப்போது நன்ருகவே எழுந்து குந்திக் கொண்டு நினைவுடனேயே பேசினுன்.

''அப்புவ ... ஆர் ... கடன் வாங்கச்சொன்னது ...? அவனட்ட... ''

''உங்கட அக்காவுக்கு அவன்ர காசு வந்துதான்ர கலியாணம் நடந்தது... ''

''அதுக்கு... நான் என்ன செய்ய...?''

''நீ தன்னட விடுவலையில் வந்தா... கடன கழிச்சு விடுகிறோம்... ''

''நான் அவனோட கடல போகமாட்டன் ... நான் போகமாட்டன் எண்டால் போகமாட்டன்... ''

சின்னவன் சோற்றை அப்படியே விட்டுவிட்டு திடுமென எழுந்துவிட்டான். செம்பில் நீரை வார்த்து

வாயைக் கழுவிக்கொண்டு மறுபடியும் கிடந்த இடத்திலேயே படுத்துவிட்டான்.

''கொஞ்சம் எழும்பு மோன... பாயப் போட்டு விடுகிறன் ...''

''எனக்குப் பாயும் வேணும்... ஒண்டும் வேணும்... போ... ''

ஆச்சி அதற்குமேல் அங்கிருக்கவில்லை. எழுந்துவிட்டது தெரிந்தது. ஆச்சியின் நீண்ட பெருமூச்சு மாத்திரம் கேட்டது. மறுபடியும் அவன் உறங்கிப் போனான். நிஜமாகவே உறங்கிப்போனான்.

ஏதோ ஓர் கனவின் சோகத்தில் அழுதுகொண்டே திடுமென விழித்துக்கொண்டான் சின்னவன். மெல்லிய முணுமுணுப்பும், அழுகுரல்களுமாய் பக்கத்திலே கேட்டன. அவன் உணர்வுப் பொறிகள் மையத்துள் வருவதற்கு முன்பே அவை பெரிதாக சப்தித்தன.

இவன் எழுந்து குந்திக்கொண்டான். நித்திரை அழுத்தத்தில் முதலில் முன்னே விரிந்து கிடந்த நிகழ்வுகள் இவனைத் தொடவில்லை. சில கணங்கள் ஒலித் திரைக்குள் மைமலான சில சலனங்கள் ... அது மெல்ல மெல்ல ... தெளிவாகி புலனைத் தொட்ட போது ... வெளியே சுள் என்று எறித்தது வெயில். இதற்குள் விடிந்துவிட்டதா!

அப்பு கட்டிலில் நீட்டி நிமிர்ந்து கிடந்தார். அவருடைய இமைகள் இரண்டும் மூடியபடி கிடந்தன. கைகள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னியபடி நெஞ்சில் கிடந்தன. விரல் இடுக்குகளில் பெரிய கறுப்புச் செபமாலை ஒன்று செருகியிருந்தது புது வேஸ்டியும் சால்வையுமாய் அழகான அப்புவை இதற்கு முன்னம் எப்பொழுதோ பார்த்த நினைவு ... பெரிய அக்காவின் திருமணத்தின்போது ...



தலைமாட்டிலும் கால்மாட்டிலுமாய் நான்கு 'கத்திரிசாலில்' பெரிய மெழுகுவர்த்திகள். அப்பால் சற்றுத் தூரத்தில் அதே மங்கலான வெளிச்சத்துடன் அந்த வீட்டின் தகர விளக்கு. அப்புவின் கட்டிலைச் சுற்றி மூத்த அக்கா, சின்ன அக்கா, அண்ணன் பெண்சாதி, மாமி இன்னும் ஊரில் உள்ள என்னென்னவோ உறவு சொல்லிக்கொள்பவர்கள்.

இப்பொழுது அழுகுரல்கள் பலமாகவே கேட்டன. அக்காதான் கீச்சிட்ட குரலில் உச்ச ஸ்தாயியில் தலையை விரித்துப் போட்டு அழுதாள். ஆச்சி நெஞ்சு... நெஞ்சென்று குத்திக்கொண்டு அழுதாள். எங்கிருந்தோ அழுதுகொண்டிருந்த சின்ன அக்கா இவனைப் பார்த்துவிட்டாள். ஓடிவந்து இவனுடைய கழுத்தை அணைத்து இறுகப் பற்றி முகத்தைத் தேய்த்து என்ன என்னமோ சொல்லி அழுதாள். சுருட்டுப் புகையின் நெடியும் மெழுகுவர்த்தியின் கசிவும் அந்தச் சூழ்நிலை அவனுக்கு நினைவு தெரிந்ததிலிருந்து புதுசு தான். யார் யாரோ எல்லாம் பொருத்தமில்லாமல் எதை எதையோ சொல்லி அழுதுகொண்டிருந்தனர். சிலரின் அழுகை இவனுக்கு வேடிக்கையாகக்கூட இருந்தது.

இவனுக்கு அழுகை வரவில்லை. நித்திரையும் கூடத்தான். எங்கேயாவது சப்தம் வராத இடமாகப் படுப்பதற்கு நினைத்துப் பார்த்துக்கொண்டான். முற்றத்தில் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் நிறையவே மனிதர்கள். சுருட்டும் வெற்றிலையுமாய் ...ஏதேதோ... பேச்சு ... சவப்பெட்டி திறந்த நிலையில் எல்லாமே தயாராகிவிட்ட வேளை ... இந்த சந்தடிகள், ஆரவாரம் எதுவும் புலன் தொடாமல் எப்படி இவன் நித்திரையில் இழந்து போயிருக்கிறான்...?

கோவில் சங்கிடுத்தாம் திடுமென பந்தலுக்குள் நுழைந்தபோது சிலர் எழுந்துகொண்டு அவரிடம் வந்தனர். மூத்த அக்காள் புருசன்தான் நெருங்கிக் கேட்டார்:

"சுவாமி என்னவாம்... வருவாராமா...?"

"சுவாமி வரமாட்டேராம். தீர்வக்காசு பல மாசம் கட்டுப்படாமல் நிலுவையாக நிக்குதாம். நிலுவ முழுக்க கட்டி முடிச்சாத்தான் பிரேதம் எடுக்க வருவேராம்..."

"செத்தவற்ற தீர்வக் காச தொம்மையர் ஒவ்வொரு நாளும் உழைப்பில கழிச்சு எடுத்தவர்தானே... பிறகு என்ன நிலுவ...?"

"தொம்மையர் கழிச்ச காசு ஒண்டும் சுவாமியிட்ட கட்டயில்லப் போல இருக்கு..."

"இது ஒரு பெரிய மனுசன் செய்யிற வேலையா... தனக்கு குடுக்குமதிக்கு அந்த மனுசனப்போட்டு எவ்வளவு பாடுபடுத்தினவர்... ஆனா அவரட உழைப்பில கழிச்சத அப்படியே அமத்திப்போட்டாரே..."

பந்தல் சல சலத்தது. பேச்சும் வசவுகளுமாய் சனங்கள் மத்தியிலே ஏதேதோ குரல்கள் தொம்மையரைச் சபித்தன. செத்தவனுக்காக அழுத குரல்கள் அதற்குள் அமுங்கிப் போனது.

"அப்ப என்னதான் செய்யிறது. சுவாமி வராட்டா இப்படியே பிரேதத்தை விடுவதா...? கன காலமாய் பாயும் படுக்கையுமாகச் சீரழிந்த உடம்பு..."

அக்காள் புருசனின் பேச்சைப் பலரும் ஆமோதித்தனர். ஆனாலும் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாமலே பிரேதம் முற்றத்தில் கிடந்தது.



"தூக்குங்கடா பிரேதத்தை... வாறது வரட்டும்... தூக்குங்க..."

யாரோ ஒருவன் முன்னுக்கு வந்து குரல் கொடுத்தான். எல்லோர் புலன்களும் இவனை நோக்கித் திரும்பவும், இவனை யாரென்று பார்ப்பதற்காகவே முதல் முறையாக இருப்பை விட்டு எழுந்து வந்தான் சின்னவன்.

"அப்ப... சுவாமி...? கோவில்...?"

"அது எல்லாம் பிறகு பார்த்து பேசிக்கொள்ளலாம். முதலில் செத்தவனக் கொண்டு போய் மரியாதையா அடக்கம் பண்ணுவம். தூக்குங்கடா..."

சனங்கள் முண்டி அடித்து நெருங்கவும், சின்னவன் எங்கேயோ பின் தள்ளப்பட்டான். அழுகையும் ஒப்பாரியுமாய் பிரேதப்பெட்டி தலைக்குமேல் உயர்ந்து நகர்ந்தது.

o

# நிலைப்பாடு

சுள்ளென்று வெயில் படவும், தலைமுதல் கால்கள் வரை சாரத்தை இழுத்துப் போர்த்தபடி விடிந்த பின்னும் தூங்கும் அந்தச் சுகானுபவத்தை இன்னும் ஒரு தடவை அனுபவித்துப் பார்க்க வேண்டும்போல் இருந்தது இவனுக்கு இப்போதெல்லாம் முடிவதில்லை. வீதிப் போக்குவரத்துச் சந்தடியில், வாகனங்களின் 'ஹார்ண்' ஒலியும், கரத்தை வண்டிகளின் கட கட ஓசையும், தெருவோரத்து அங்காடிகளின் காட்டுக்கத்தலும், முச்சந்தி மூலையில் நின்று தினமும் ஒலிபெருக்கியில் கூப்பாடு போடும் 'தேசிய லொத்தர்' சபை வாகனத்தின் சீட்டு வியாபாரமும், திரும்பின பக்கம் எல்லாம் 'ஓ'வென அலறும் வானொலிப்பாடல்களும் இவனது சின்னச் சின்ன ஆசைகளைக்கூட நிராகரித்தன.

இவன் மெல்ல மெல்ல புதிய சூழலை ஜீரணித்துக் கொண்டான். இன்று ரியூற்றரியில வகுப்பு எதுவும் இல்லை. இன்றைய ஒருநாள் பொழுது எப்படியோ போகவேண்டும் என்று சலித்துக் கொண்டவனுக்கு நேற்று இவனும் விவேகானந்தனும் 'ஹொட்டேல்' ஒன்றிலிருந்து தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோது காலிமுகத்திடலில் கூட்டம் ஒன்றுக்குப் போவது என்று பேசிக்கொண்டது கூடவே நினைவுக்கு வந்தது.



படுக்கையைச் சுருட்டி மூலையில் போட்டுவிட்டு கைகளை உயர்த்தி சோம்பலை முறித்துக் கொண்டே சுவரில் மாட்டியிருந்த கண்ணாடிமுன் வந்து நின்றான். அட்ட கோணத்திலும் முகத்தை அபிநயம் செய்து பார்த்தான். இவனுக்கே இவனுடைய முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. தாடையைக் கைகளால் தடவிப் பார்த்தான். சேவ் செய்து இரண்டு நாட்கள்தான். அதற்குள் மயிர்வேறு சொற சொறவென்று வளர்ந்திருந்தது. இன்று எப்படியாவது சேவ் செய்து போடவேண்டும் என்று நினைத்தவனாக கண்ணாடி ஸ்ராண்டில் இருந்த சேவிங்செட்டை திறந்து பார்த்தான். பெட்டிக்குள் இருந்த பிளேட்டுகளில் ஒன்றுதானும் நல்ல நிலையில் இல்லை என்பது தெரிந்தபோது மீண்டும் சலித்துக்கொண்டான்.

'இதற்கும் மச்சாளிடம்தான் காசு கேக்கவேணும். எனக்கும் ஒரு வேலை இருந்தால் ஏன் இந்தக் கஷ்டம்.'

இவனுடைய அண்ணன் கதிர்காமநாதன் தபால் பகுதியில், உதவி தபால் அதிபராக இருக்கிறான். இவனுக்கு மூன்றுவேளைச் சாப்பாடு போடுகிறான். ரியூற்றரிக்கும் அவன்தான் பணம் கொடுக்கிறான்; சிலவேளைகளில் கையிலிருப்பதையும் செலவுக்காகத் தந்துவிடுவான். கூடப்பிறந்த குற்றத்திற்காக இவனையும் தனது குடும்பத்தோடு சேர்த்து சுமக்கவேண்டிய தலை எழுத்து அவனுக்கு.

வீட்டிலிருந்தபோதுகூட கதிர்காமநாதன் 'காரியகாறன்' என்று பெயர் எடுத்தவன். தன் விசயத்தில் எப்போதும் கருத்தாக இருந்து அதற்காக எப்படியும் வளைந்து கொடுத்துப் போகக்கூடியவன். உத்தியோக முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த அத்தனை 'பரீட்சைகளையும்' சுலபமாக தாண்டி வந்துவிட்டான். கதிர்காமநாதனுக்கு இதனாலேயே குடும்பத்தில் தனி மரியாதை.

நல்லதொரு சந்தர்ப்பமாக வாய்த்தது யூலை 18 வேலை நிறுத்தம். இவனுடைய கந்தோரில் வேலை செய்தோரில் பெரும்பாலோர் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவும் இவனும் இன்னும் சிலரும் மாத்திரம் தப்பித்துக்கொண்டனர்.

இதற்காகவோ என்னவோ முகம் தெரிந்த மனிதர்கள் சிலராலேயே அடுத்தநாள் கந்தோருக்கு வரும் வழியில் தாக்கப்பட்டு மண்டை உடைந்து, உதடுகிழிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டதைத்தவிர வேறு எந்த இழப்பும் இவனுக்கு ஏற்படவில்லை என்று இன்றும் நினைத்துக் கொண்டிருக்கிறுன்.

இவன் வேலையில்லாமல் இருப்பது இவனைவிட இவன் அண்ணனுக்குத்தான் கவலை அதிகம். இவனுடைய சோம்பேறித்தனமும், பிடிவாதமும்தான் இவனுக்கு வேலை கிடைக்காததற்கு காரணம் என்பது அவனுடைய கருத்து. இதை அடிக்கடி சொல்லிக் காட்டுவான். இவன் அப்படி நினைக்கவில்லை. அதற்காக அவனேடு எதிர்வாதம் செய்ய பிரியப்படுவதில்லை. அடங்கிப் போவனன்.

'பாத் ரூமில்' சள சளவென்று நீர் கொட்டும் சத்தம். கதிர்காமநாதன் குளித்துக் கொண்டிருந்தான். சில நாட்களாகவே அவனுடைய முகத்தில் களையில்லை. வீட்டில் எல்லோருடனும் எரிந்து விழுந்து கொண்டிருந்தான். சிவநாதன் இவர்கள்கூட வந்த நாளில் எப்போதாவது அண்ணனும் மச்சாளும் சண்டை பிடித்ததைப் பார்த்திருக்கிறுன்.

இப்போது ஏனே அடிக்கடி நடந்தது. காலையில் கிடப்பதை அவசர அவசரமாக விழுங்கிக் கொண்டு கந்தோருக்குப் போக பஸ்ஸை பிடிக்க ஓடும் இந்த இயந்திர வாழ்க்கையை நினைத்து சிலவேளை இவனே



ஆச்சரியப்பட்டதுண்டு. இப்போது கதிர்காமநாதனிடம் ஏன் இந்த அசமந்தப் போக்கு.

துருத்திக் கொண்டு படிய மறுக்கும் தலைமயிரை அழுத்தி இழுத்துக் கொண்டே மீண்டும் வெளி விருந்தைக்கு வந்தான்.

சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே வானெலிப் பெட்டியை மெல்லத் திருகிவிட்டு ரீப்போவில் கிடந்த பழைய பத்திரிகை ஒன்றைப் புரட்டினன்.

'எலிசபேத் ரெயிலர் ஆருவது தடவையாக திருமணம் செய்து கொண்டார்' தலைப்புச் செய்தி. இவனுக்குச் சிரிப்பு வந்தது. விவேகானந்தனை நினைத்துக் கொண்டான். விவேகானந்தன் இப்படிச் செய்திகள் முக்கியத்துவத்துடன் பிரசுரமாவதைக் கண்டுவிட்டால் பெரிய 'லெக்சரே' அடித்து விடுவான்.

விவேயின் கருத்துக்கள் இவனுக்கு சிலவேளை உடன்படும்; சிலவேளை முரண்படும்; சிலவேளை விளங்குவதில்லை. அவன் புதிய பொருளை புதிய சொற்களில் பேசுவான். அவனுடைய கொள்கை இலட்சியங்கள் பற்றி இவனுக்கு எந்தவித தீர்மானகரமான அபிப்பிராயமும் இதுவரை ஏற்பட்டதில்லை. அதனுல் என்ன? இன்னும் அந்த நட்பின் நெருக்கம் குறைந்துவிடவில்லை.

விவேகானந்தன் இவனேடு கூடப் படித்த காலத்திலிருந்தே அப்படித்தான். வகுப்பில் அரசியல் பேசியதற்காக பலமுறை 'இம்பொசிசன்' எழுதியிருக்கிறுன். ஆசிரியர்களும் இவனிடம் பிரியமில்லை. இவனும் அப்படித்தான்.

தேவி குசினிக்குள் இருந்து வெளியே வந்தாள். ஒருவயதுதான் நிரம்பிய சுரேஸ் அவளுடைய 'சோட்டி' யைப் பிடித்துக்கொண்டு 'உம்...உம்...' என்று சிணுங்கியபடியே பின்னல் இழுபட்டுக்கொண்டு வந்தான்.

சுரேஸின் முகத்திலும் கைகளிலும் ஏதோ வெள்ளை வெள்ளையாக அப்பியிருந்தது.

''தம்பி, இவனக் கொஞ்சம் வச்சிருந்து பராக்குக் காட்டுங்க. நான் தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன்; ஒரு அலுவலுப செய்ய விடுகிறான் இல்லை.

சுரேஸை இவன் தூக்கி மடியில் வைத்துக்கொண்டான். அவன் சிணுங்கி முரண்டு பிடித்தான். பத்திரிகையை எட்டிப்பிடித்து வாய்க்குள் வைத்து கிழித்து விடமுயன்றான்.

குசினிப்பக்கம் இருந்து மூத்தவள் சாந்தினியின் அழுகுரல் திடீரென வெடித்து எழுந்தது தேவி எதற்காகவோ சத்தம் போட்டுத் திட்டிக் கொண்டிருந்தாள்.

கதிர்காமநாதனின் குரல் குளியல் அறைக்குள் இருந்தே கேட்டது. ''ஏ தேவி ஏன் இவள் சாந்தினி அழுகிறாள்? அவள் கேட்கிறதை குடுத்துத்தான் தொலையன். ஸ்கூலுக்கு நேரம் போச்செல்லே''

தேவியும் பதிலுக்கு இரைந்தாள். ''இஞ்ச வந்து பாருங்கோ. நேற்றுத்தான கொம்பாஸ் பெட்டிக்கு காசு வாங்கிக்கொண்டு போனவள். இண்டைக்கு கலர்பெட்டி வாங்கவேணும் என்று நிக்கிறாள்.''

கதிர்காமநாதன் எதுவும் பேசவில்லை குளித்து முடித்துவிட்டு துவாயினால் தலையைத் துவட்டிக் கொண்டே வெளியில் வந்தான். சிவநாதன் சுரேஸை கீழே இறக்கிவிட்டான். அவன் ஓடிப்போய் அப்பாவின் சாரத்தைப் பிடித்து இழுத்து கைகள் இரண்டையும் உயர்த்தி தூக்குமபடியாக அடம்பிடித்தான். சுரேஸைத் தூக்கி வைத்துக்கொண்டே கதிர்காமநாதன் இவன் அருகே வந்தான்.



''இன்றைக்குப் பின்னேரம் எங்கேயாவது போகிறாயா......?''

''விவேகானந்தனிடம் வாறதாகச் சொல்லியிருக்கிறேன்.''

''போறதாக இருந்தால் போயிற்று ஏழு மணிக்குள் வந்துவிடு. இன்றைக்கு உன்னுடைய வேலைவிஷயமாக ஒருவரைப் பார்க்கவேணும். ஸ்ரைக்கில நின்றவங்கட இடத்துக்கு ஆள் எடுக்கப்போறாங்க...வழக்கம் போல எங்கேயாவது கதையோடு நிக்காமல் வேளைக்கே வந்துவிடு.''

சிவநாதன் எதுவும் பேசவில்லை. மௌனமாக எழுந்துபோய் ஸ்ராண்டில் கிடந்த சேட்டுகளையும், ரவுசர்களையும் எடுத்துத் திருப்பித்திருப்பிப் பார்த்தான். அன்று போடுவதற்கு உகந்ததாக எதுவும் இல்லை. ஒரே அழுக்கு. வியர்வை நாற்றம் வேறு. நேற்றே கழுவிப் போடவேண்டும் என்று நினைத்தவன் வேறு வேலைகளில் மறந்தே போய்விட்டான். விவேகானந்தனும் 'நீற்றாக' உடை உடுத்துவதில் சற்று அக்கறை உள்ளவன்தான். அவனுடைய 'றூம்மேற்ஸ்' சிறிவர்த்தனா, சோமபாலா இருவரும்கூட அப்படித்தான். சோமபாலாவைப் பார்க்கும் போதெல்லாம் இவனுக்கு சிங்கள சினிமா நடிகன் ஒருவனின் முகம்தான் நினைவுக்கு வரும்.

அவர்களுடன் சேர்ந்து எப்போதாவது வெளியில் செல்வதுண்டு. அப்போதுதான் தன்னைப்பற்றி அதிகம் கவலைப்படுவான். அடிப்பக்கத்தில் விரிசல்கண்டு இழைப்போட்டிருந்த அந்த கறுப்புநிற ரவுசரும், எப்போதோ ஒரு பரீட்சைக்குப் போவதற்காக எடுத்த வெளிர்நீலநிற 'எயிற்றி ருவ்னரி' சேட்டும் எத்தனை

தடவைதான் போட்டுக் கொண்டு செல்வது? அண்ணனிடம் எப்படி ரவுசர் தைக்க காசு கேட்பது? மச்சாள் ஏதும் நினைத்துக்கொண்டால்?

உடுப்புகளை அள்ளி எடுத்துக் கொண்டு பாத்றூம் பக்கமாக நகரவும் வாசலில் தபால்காரனின் சத்தம் கேட்டது.

பகல் மூன்று மணிக்குமேல் இருக்கும். அப்படியிருந்தும் வெயில் அனலாகக் கொதித்து உடல் வியர்வையில் நனைந்து கொண்டு வந்தது. முதுகுப்புற சேட் வேறு கசமுச வென்றிருந்தது.

இப்பொழுதே பஸ்ஸைப் பிடித்தால்தான் நாலு மணிக்கு முன் விவேகானந்தனின் அறையில் நிற்கலாம். அவனும் வேலை முடிந்துவர நேரம் சரியாக இருக்கும்.

'பஸ் ஹோல்ட்டிங் பிளேசில்' நின்று கொண்டே சிவநாதன் சுற்றிவரப்பார்த்தான். இவன்கூட, இன்னும் யார்யாரோ இவன் போகும் நூற்றிஒன்றுக்காக நின்று கொண்டிருந்தனர்.

நூற்றிஒன்று தவறினால், நூற்றிப்பதினொன்று, நூற்றிப்பதினைந்து. சிவநாதன் மனதிற்குள் இலக்கங்களை நிச்சயப்படுத்திக் கொண்டான். எதிரே இருந்த கட்டிடத்தின் சுவரில் புதிதாக இன்று ஒரு போஸ்டர். ஒரு வேட்பாளர் 'நானும் இம்முறை தேர்தலுக்கு நிற்கிறேன்' என்று கூறி வாக்காளப் பெருமக்களுக்கு வணக்கம் தெரிவிக்கும் பாவனையில் - இன்னும் வெகு உன்னிப்பாக கவனித்ததில்தான் அது புதிதாக ரிலீசாயிருக்கும் தமிழ் சினிமா ஒன்றின் 'போஸ்டர்' என்பது தெரிந்தது.

அதிகாலையில் வெள்ளை மலர்களாய் பூத்துச் சிரித்தபடி 'யூனிபோம்' அணிந்து அணியணியாய் உற்சா



கத்துடன் செல்லும் சிறுவர்கள், மாலையானதும் 'படிப்பில்' சோர்ந்து விழுந்து சுமைகூலிகள் போல் மெல்ல மெல்ல அசைந்து செல்வதைப் பார்க்கையில் இவனுக்கு இரக்கமாயிருந்தது.

தூரத்தில் பஸ் ஒன்று வரும் இரைச்சல். கூர்ந்து இலக்கத்தைக் கவனித்தான். நூற்றிப்பதினைந்து. இந்த பஸ்ஸில் ஏறினால் சந்தியிலிறங்கி சற்றுத்தூரம் நடக்க வேண்டும். பாதகமில்லை, வேலைக்கே போய் விடலாம்.

கூட்டம் 'புட்போட்டில்' நெருங்குண்டது. வாசல் ஹாண்டிலைப் பிடித்துக் கொண்டு முண்டி அடித்துக் கொண்டு ஏற முயல்கையில் இவன் கைக்குள் ஒரு பெண்ணின் பிரஸ்ட்டம் நசுங்குண்ண, அந்த திடீர் ஸ்பரிசத்தின் ஒரு கண அதிர்வில் இவன் கைகளை விலக்கிக் கொண்டான்.

அதற்குள் அந்த பஸ் நகர்ந்துவிட்டது. 'புட்போட்டில்' பலர் வௌவால் தொங்கல். அந்த வித்தையை இவன் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. இதனாலேயே இப்படியாக பல தடவைகள் பஸ்ஸை கோட்டை விட்டிருக்கிறான்.

அந்த பஸ் அடுத்த ஹோல்ட்டில் நிற்கும்வரை பார்த்துக்கொண்டு நின்ற சிவநாதன் சேட் பையில் இரண்டாக மடிந்திருந்த கடிதத்தை எடுத்து மூன்றாவது தடவையாகப் படித்தான்.

அதை இவனுடைய இளையதங்கை சுசீலா ஊரிலிருந்து இவனுக்கு எழுதியிருந்தாள். வழமையான வேண்டுதல்களை விட விசேடமான புதினம் கடைசித் தங்கை மேகலா புத்திக்கு வந்து விட்டாள்; இருபதாம் திகதி தலைக்குத் தண்ணி வார்க்கப்படும் என்பதுதான்.

இரண்டாவது தடவையாக அம்மா ஊரிலிருந்து ஐம்பது ரூபா அனுப்பியிருந்தாள். அதைக்கூட அவள் அனுப்பிவைக்க எவ்வளவு சிரமப்பட்டிருப்பாள் என்பது சிவநாதனுக்குத் தெரியும்.

அவன் அந்த மணிஓடரை தபால் கந்தோரில் மாற்றிக் கொண்டபோது அவன் முதலில் நினைத்துக்கொண்டது விவேகானந்தனைத்தான். இவ்வளவு நாட்களும் சினிமாவுக்கு இவனுக்கும் சேர்த்து விவேகானந்தனே ரிக்கற்றுக்கு பணம் கொடுத்துவிடுவான். ஹொட்டல் பில்களும் அவ்வாறே நடந்தன.

இன்று அவனைக் கொடுக்கவிடுவதில்லை, எங்கேயாவது நல்ல ஹொட்டலில் வயிறு நிறையச் சாப்பிட வேண்டும், அதற்கும் தானே பணம் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

இவனுடைய நினைப்புகளை நினைத்து இவனே சிரித்துக்கொண்டான். முழுசாக தன்னுடையது என்று ஐம்பது ரூபாவைக் கண்டதும் எண்ணங்கள் எல்லாம் எப்படி அலைப்புறுகின்றன.

சிவநாதன் அப்பொழுதுதான் நிமிர்ந்து பார்த்தான். கறுப்புப் பிறேம் மூக்குக்கண்ணாடி, சில மாதங்களாகவே வெட்டப்படாமல் நீண்ட தலைமயிர், சைட் பர்ன்ஸ், தொளதொளவென்ற ரவுசர், குதி உயர்ந்த சப்பாத்து, வலது கையில் சிகரெட் அநாயசமாக ஊதித்தள்ளியபடி இவனையே பார்த்துக்கொண்டு நின்றவனைக் கண்டான். அவனுடைய கையைச் சேர்த்துப் பிடித்தபடி அவன் கூட ஒரு பெண்.

சிவநாதனுக்கு இவன், இவனோடு கூடப்படித்தவன் என்பது மாத்திரம் சட்டென்று நினைவுக்கு வந்தது.



ஆனால் எந்த வகுப்பு? என்ன பெயர் என்பது நினைவில் தட்டுப்படவில்லை.

இவனுடைய தர்மசங்கடத்தைப் புரிந்த அவன் இன்னும் நெருங்கிவந்து தோள்களில் மெதுவாக அழுத்தினான். "நீ சிவநாதன் இல்ல? என்ன தெரியாதது மாதிரி நிக்கிறீர்? அதுக்குள்ள மறந்திற்றீரா?"

சிவநாதனுக்கு இப்போது நினைவுக்கு வந்தது. அவனோடு ஜெ. எஸ். சி வகுப்பில் பி செக்சனில் படித்த ஜெகநாதன். அப்போது மிகவும் ஒடிசலாக சதைவற்றி எலும்புகள் துருத்த இருந்தான். 'சாயிராம்' என்று அவனைக் கேலிசெய்து அழைத்ததுகூட நினைவிலிருந்தது.

'இப்போது என்னமா பருத்துவிட்டான். முகம் உப்பி கன்னங்கள் மொழுமொழுவென்று பொலிஸ்ட்டாக...'

'இவன் நல்ல உத்தியோகத்தில் இருக்கவேண்டும். நிறையச் சம்பளம் வாங்குகிறான். வசதியாக வாழ்கிறான்...' சிவநாதன் அவனுடைய தோற்றத்தைக்கண்டு மனதிற்குள் அசைபோட்டான். "என்ன ஜெகன், இப்படி ஆளே தெரியாமல் கொழுத்துப் போனாய். இப்ப எங்கவேலை செய்கிறாய்?"

சிவநாதன் கூடவந்த பெண்ணை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே கேட்டான். அந்தப்பெண் தனக்கும் இந்த சம்பாஷணைக்கும் எதுவித சம்பந்தமுமில்லாதவள்போல் வீதியில் நெருங்கி அடித்துக் கொண்டு ஒன்றின்பின் ஒன்றாக ஊர்ந்து கொண்டிருந்த வாகனங்களை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜெகநாதன் இதைக் கவனிக்காதவனாக கையில் கருகி முடிந்திருந்த சிகரெட் துண்டைக் காலடியில் போட்டு 'சூவால்' மிதித்துக் கொண்டே இன்னொரு சிகரெற்றை எடுத்து இவனிடம் நீட்டினான். "நோ... தாங்ஸ்" என்றான் இவன்.

''நீஇன்னமும் அப்படியே இருக்கிருய் குட்...வெரி குட். நீ இப்பவும் புட்போல் விளையாடுகிறதுதாஞ அல்லது விட்டிற்றியா...?''

ஜெகநாதன் கேள்விகள் இவன் எதிர்பார்த்தவை தான். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் மூன்று வருஷங்கள் 'பீ'ரீமிலும், இரண்டு வருஷங்கள் 'ஏ'ரீமிலும் விளையாடியவன். பழைய கல்லூரி நண்பர்கள் பலர் இவனை வெகு நாட்கள் கழித்துக் காணும் போது இதை நினைவுபடுத்தத் தவறுவதில்லை.

''விளையாட்டு எல்லாம் இப்போ விட்டாச்சு. வேலை தேடிக்கொண்டிருக்கிறதுதான் இப்ப பெரிய பிரச்சினை. இப்ப அண்ணன்கூட இங்கேதான் இருக்கிறன்.

''நானும் பம்பலப்பிட்டியில்தான். வசதிப்படும் போது அங்காலப்பக்கம் வாரும்.''

ஜெகநாதன் கைகளை அசைத்துக்கொண்டே விடை பெற்ருன். அந்தப் பெண் மீண்டும் அவனுடைய் இடுப்பை வளைத்துக்கொண்டாள். அவனும் தோள்களை அழுத்திப் பிடித்தபடி நடந்தான். அடுத்த வளைவில் நூற்றிப்பதினைந்து உறுமிக்கொண்டு வந்தது.

* * *

விவேகானந்தன் கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்துக் கொண்டே அவசர அவசரமாக அறையைச் சாத்திக் கொண்டு வெளியே வந்தான். சிவநாதனும் அவனைப் பின் தொடர்ந்து இருவருமாக படிவழியே இறங்கி வந்தபோது சிறிவர்த்தனு எதிரே வந்தான்.

அவனுடைய கையில் கந்தோர் 'பைல்'கள். அவன் இவர்களைப் பார்த்து முகம் மலரச் சிரித்தான். இவர்களும் சிரித்தார்கள்.



''சிறிவர்த்தனு நல்ல பையன். புரேக்கிறசிவ்வானவன். சோமபாலா அப்படியல்ல; சற்று கொம்யூனல் மைன்ட்.'' விவேகானந்தன் இவனுக்கு மட்டும் கேட்கும்படியாக மெதுவாகக் கூறினுன். ''இவயளில் யாரை நம்புவது. என்னதான் முற்போக்கு பேசினுலும் அந்த நேரத்தில் துங்கட குணத்த காட்டிப் போடுவாங்க.'' என்ருன் சிவநாதன் சற்றுச்சூடாக.

விவேகானந்தன் லேசாகச் சிரித்துக் கொண்டே தலையை ஆட்டினுன்.

''உண்மைதான் சரியான அரசியல் உணர்வும் வர்க்கபேதமும் பெருவிட்டால் எந்த முற்போக்காளனையும் இந்த உணர்வு லேசாக தட்டி எழுப்பிவிடும்... ஆனுல் எல்லோரையும் அப்படிச் சொல்லிவிட என்ருல் முடியுவில்லை.''

''வழக்கமான பதில்தான்'' என்ருன் சிவநாதன்.

''உண்மையும் அதுதான்'' என்ருன் விவேகானந்தன்.

இருவரும் பேசிக்கொண்டே நடைபாதை வழியே நடக்கத்தொடங்கினுர்கள். சுவர்களில் எல்லாம் சிவப்பு மையில் எழுதப்பட்ட பெரிய போஸ்டர்கள் நிறைய ஒட்டப்பட்டிருந்தன. காலிமுகத்திடலில் நடக்கப்போகும் கூட்டம் பற்றியும் இருந்தன. இவன் கூட்டத்துக்குப் போக முடியாத நிலைமையும் அண்ணர் குறிப்பிட்ட வேலை விஷயத்தையும் விவேகானந்தனிடம் கூறவேண்டும் என்று நினைத்தான். எப்படி அவனிடம்போய் இதைக் கூறுவது?

திடீரென பின்னுலிருந்து இரைச்சல் கேட்டது. அது மெல்லமெல்ல சமீபித்துக்கொண்டு வந்தது.

இருவரும் நின்றார்கள். திரும்பிப் பார்த்தார்கள். குறுக்கு வீதியால் வந்து சந்தியில் ஒரு ஊர்வலம் திரும்பிக்கொண்டிருந்தது. அதன் முன்பாக பொலிசாரின் ஜீப் வண்டிகளும், மோட்டார் சைக்கிள்களும் உறுமிக் கொண்டு ஓடின. அவர்கள் இரு நிரைகளில் அணிவகுத்து வந்து கொண்டிருந்தனர். அதில் கிட்டத்தட்ட ஐயாயிரம் பேர் இருக்கலாம். அவர்கள் கைகளில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதிய சுலோக அட்டைகளை தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் ஆக்ரோஷமாக கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். சிவப்பு நிறக் கொடியில் வெள்ளை எழுத்துக்களில் சுலோகங்கள் பளிச்சிட்டன.

சிவநாதன் கேட்டான்: ''என்ன மச்சான், உங்கட ஆட்கள் போல இருக்கு.'' விவேகானந்தன் லேசாகச் சிரித்தான். எதுவும் பேசவில்லை. ஊர்வலம் இவர்களைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. ஊர்வலத்தில் ஒருவன் இவர்களைப் பார்த்து ஆக்ரோஷத்துடன் கத்தினான். அவனுடைய முகத்தில் தெறித்த குரூரத்தை சிவநாதனால் சகிக்க முடியவில்லை. சிவப்புச் சேலை அணிந்த பெண்கள் அணி ரோசாமலர்க்கூட்டம் நகர்வதுபோல் அழகாக இருந்தார்கள். அவர்களது கீச்சிட்ட குரல்களும் இடையிடையே கேட்டது.

இப்பொழுது தமிழிலும் சில சுலோக அட்டைகள் எழுதப்பட்டிருந்தது சிவநாதனின் கண்களில் பட்டது. அதைக் கண்டதும் இவன் முகத்தில் பூரிப்பு.

''பரவாயில்லை, தமிழிலேயும் எழுதியிருக்கிறாங்க.''

''இது உனக்கு ஆச்சரியமான விஷயந்தான்.'' என்றான் பதிலுக்கு விவேகானந்தன்..

தூரத்தில் ஜீப்பிலிருந்து இறங்கி ஊர்வலத்தை நோக்கி வந்து கொண்டிருந்த பொலீஸ் அதிகாரியின் விறைப்பான நடையைக் கவனித்தான் விவேகானந்தன்.



''அடுத்த வாரத்துக்கு இதுதான் 'சப்ஜக்ட்'. நான் இது பற்றி ஒரு 'ஆட்டிக்கிள்' எழுதியிருக்கிறேன்.

விவேகானந்தன் கூறிக்கொண்டே மீண்டும் நடக்கத் தொடங்கினான். பாதசாரிகள் கடப்பதற்குப் போடப்பட்டிருந்த வெள்ளைக் கோடுகளைக் கடந்து ஊர்வலத்தில் இறுதியில் நின்றவன் போய்க்கொண்டிருந்தான்.

''இவங்கள் எங்கே வேலை செய்யிறாங்கள். என்னத்துக்கு இந்த ஊர்வலம் நடக்குது.'' என்றான் சிவநாதன்.

''யூலை வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டு வேலை இழந்தவர்களுக்கு ஆதரவாகத்தான் இந்த ஆர்ப்பாட்டம். ஜனநாயகத்தின் மடியில் சம்பள உயர்வு கேட்டால் 'வீட்டுக்குப் போ' என்று அனுப்பிவிடுவார்கள். வேலை நிறுத்தம் செய்யும் உரிமைகூட இந்த நாட்டில் மறுக்கப்படுகின்றது. இதுதான் ஜனநாயகம்; தார்மீகம்.''

விவேகானந்தனின் வார்த்தைகள் சற்றுச் சூடாக வெளிவந்தன. பாதசாரிகளுக்காக பச்சை லைற் எரிந்தது சற்று நேரம் நின்று விட்டு வெள்ளைக் கோடுகள் வழியே வீதியைக் கடந்து, பஸ் ஹோல்டிங் பிளேசில் நின்றார்கள்.

விவேகானந்தன் சொன்னான்: ''உன்னைப் போன்ற பலர் வேலை இல்லாமல் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதைவிட இவர்களைப்போல் வேலையிலிருந்தவர்கள் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தவித்துத்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண நிலையிலுள்ள எவருக்குமே வாழ்க்கைக்கான உத்தரவாதம் இல்லை.''

விவேகானந்தன் சொல்லிமுடிக்கவும், சிவநாதன் ஆச்சரியத்துடன் இவனைப் பார்த்தான். இவனோ கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே தூரத்தில் தெரிந்த பஸ்ஸை கவனித்தான்.

"அப்ப நான் வேலை தேடுகிறதுகூட வீண்வேலை என்று சொல்லுகிறீரா?"

விவேகானந்தன் சிரித்துக் கொண்டே கூறினான்: "நான் அப்படிச் சொல்லவில்லை. வேலை கிடைத்தாலும் கூட நீ நினைப்பதுபோல் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடாது. இன்றைய வாழ்க்கைநிலை அப்படி."

சிவநாதனின் முகம் இறுகிவிட்டது. அவன் குழப்பம் அடைந்திருந்தான். இவனுக்கு வரும்போதிருந்த உற்சாகம் இல்லை. இவர்கள் நின்ற ஹோல்டிங் பிளேசின் முன் பஸ் ஒன்று வந்து தரித்தது. அந்த பஸ்ஸில் நின்றுஇறங்கிய ஒருவன் விவேகானந்தனைக் கண்டதும் கையை அசைத்துக் கொண்டே அருகேவந்தான்.

"கூட்டத்துக்கா?" என்றான். "ஆம்" என்பது போல் விவேகானந்தன் தலையசைத்தான்.

"என்ன மச்சான் செய்வது? வேலை பறிபோனதிலிருந்து வீட்டிலிருந்த கோழிகூட முட்டை இட மறுக்குது... ஆனாலும் என்ன, போராடித்தான் பார்க்கப் போறன்..."

விவேகானந்தன் திரும்பி சிவநாதனைப் பார்த்தான். சிவநாதன் பேசிக் கொண்டு நின்றவனின் காய்ந்த முகத்தையும், சோர்வடைந்திருந்த கண்களையும், சொற... சொறவென்று வளர்ந்திருந்த தாடியையும் பார்த்தான்.



"இன்றைய செய்தியோடு வேலை நிறுத்தம் செய்தவர்களில் ஆறுபேர் தற்கொலை செய்திருக்கிறார்கள்." என்றான் விவேகானந்தன்.

"நான் அப்படிச் செய்யப் போவதில்லை." என்று சிரித்துக்கொண்டே கையை அசைத்தபடி விடை பெற்றான் அந்த நண்பன். இவ்வளவு நேரமும் மௌனமாக நின்ற சிவநாதன் சற்றுத்தயக்கத்துடன் பேசினான்.

"ஸ்ரைக்கில் நின்றவர்களின் இடத்திற்கு ஆட்களை எடுக்கப் போகிறார்கள். என்னையும் அண்ணர் ஏழு மணிக்குமுன் வரச் சொல்லியிருக்கிறார். இது சம்பந்தமாக ஒருவரைச் சந்திக்கவேண்டும்.

சிவநாதனின் தயக்கத்தைப் புரிந்துகொண்ட விவேகானந்தன் மீண்டும் சிரித்தான். அந்தச் சிரிப்பு சிவநாதனை என்னவோ செய்தது. இவனது 'ஈகோ'வை ஊடுருவி உருவழித்தது.

"அப்போ நீர் கூட்டத்துக்கு வரப்போவதில்லை."
சிவநாதன் மௌனமாக நின்றான். பஸ் வந்தது. விவேகானந்தன் 'அவக்கென்று' ஏறிக்கொண்டான். சிவநாதனும் அதில் தொற்றிக்கொண்டான். விவேகானந்தன் இவனை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"நானும் கூட்டத்துக்கு வருகிறேன். அண்ணரோடு போகப்போவதில்லை."

சிவநாதன் நறுக்கென்று பதில் அளித்தான். வீட்டுக்குப் போனதும் அவனுடைய அண்ணர், இன்னுமொரு தடவை இவனை 'பொறுப்பில்லாதவன், சோம்பேறி' எனத் திட்டப்போவதை நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

○

# வானம் எப்போதும் இருண்டு கிடப்பதில்லை

மடிக்குள் செருகி வைத்திருந்த கொட்டைப் பெட்டியைத் திறந்து சுருட்டு ஒன்றை எடுத்து பற்ற வைத்துக்கொண்டே ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான் அந்தோணி.

இரவு முழுவதும் சோவாரியாக மழை பெய்திருந்தது. இருந்தும் கருக் கொண்ட மேகங்கள் இன்னும் கலையவில்லை. அங்கும் இங்குமாக திட்டுத் திட்டாக நிலை கொண்டிருந்தன. அடுத்ததொரு நீண்ட தூற்றலுக்கான ஆரவாரிப்பு. அடிவானத்துக்குள்... இடையிடையே ஒளி வெட்டுக்கள். கிழக்குப் புறத்தில் சற்று வெளுப்பு. விடிவெள்ளி அதற்குள்தான் முளைத்திருக்க வேண்டும்.

இருள் கவிந்திருந்த நீர்ப்பரப்பில் கரு...கருவென நிழல்களின் அசைவு. அங்கும் இங்குமாக காவாப்பறவைகளின் பயங்கர அலறல். வெண் சிறகு விரித்து



ஆகாயம் முழுவதும் அலைந்து கொண்டிருந்தன கடற்கொக்குகள். அலைகளைப் பிரித்துச் செல்லும் தோணிகளின் சள...சளவென்ற சத்தம். பலவித மனிதக்குரல்களின் அத்தியந்த சமிக்ஞை ஓசைகள் வேறு. கடல் பரப்பே இருவாளித்துக் கொண்டிருந்தது.

பட்டிவலை இழுப்பு அங்கங்கே தொடங்கிவிட்டன.

கையில் கருகிக் கொண்டிருந்த சுருட்டை ஒரு தடவை தம்பிடித்து இழுத்து ஊவ்...ஊவ்...என்று ஊதிவிட்டு நீருக்குள் வீசி எறிந்தான். சுருட்டின் நுனியில் தெரிந்த ஒளிப்பொட்டு ஙொய்... என்று நீருக்குள் அவிந்து போனது. தோணியின் அணியப்பக்கம் பார்த்தான்.

ஒல்லணிக்குள் படுத்திருந்த இவன் மகன் இன்னும் எழும்பவில்லை. சாக்கினால் உடல் முழுவதையும் இழுத்துப் போர்த்துக் கொண்டு குறண்டிப் போய்க் கிடந்தான். இவனுக்கே உடல் தாளவில்லை. இவனுடைய தளர்ந்துபோன தசை நார்களே குளிரின் கடுகடுப்பில் விறைத்து இறுகியது. எலும்புக் குருத்தில் குத்தி... குத்தி... எடுப்பதுபோல் ஊய்...ஊய்... என இரையும் வாடைக் கச்சான் வேறு.

ஐம்பது வருஷத்துக்கு மேலேயே கடலோடும் காற்றோடும் வாழ்கின்ற அவனுக்கே இந்த நிலை என்றால், சில நாட்களே கடலுக்குள் கால் வைத்த அவன் மகனுக்கு எப்படி இருக்கும்?

அவனுக்கு மகனை அழைத்து வந்ததில் வருத்தம் தான். ஒருநாள் முழுவதும் கடலோடு கிடந்து உழைத்தாலும் ஒரு பொழுது போவதே பெரும்பாடு. அதற்குள் இவனுடைய படிப்பையும் இடை நடுவில் நிறுத்திவிட்டு இந்தக் குளிருக்குள் இறக்கி வாட்டி எடுப்பது

அவனுக்கு வருத்தம்தான். ஆனாலும் அவன் என்ன செய்வான்...?

ஒவ்வொரு அதிகாலையும் புதிதாகப் புலரும் போதும் கிழக்குப் புறத்தை நோக்கும் அவன் கண்கள் எங்கேயாவது ஒரு நம்பிக்கைக கீற்று வாழ்வின் பற்றுக்கோடாய் முளைத்து எழுந்து வராதா? அந்த நம்பிக்கை அந்த மாலையில் இருளோடு புதைந்து போகும்.

ஒவ்வொரு நாளும் புதிய அதிகாலை... பொழுதோடு புதைந்து போகும் அந்திமாலை.

''என்ன அந்தோனி அண்ணே, இன்னும் வலை இழுக்கயில்லியா...? நல்லா பொழுது ஏறியிற்றே... எங்க மகனக் காணயில்ல...''

பக்கத்துப் பாட்டிலே நின்று வலையை இழுத்துக் கொண்டிருந்தவனின் குரல் காற்றின் இரைச்சலையும் மீறிக்கேட்டது. இவனும் பதிலுக்கு இரைந்தான்.

''ஓம்...... ஓம்...... நல்லா பொழுது ஏறித்தான் போச்சு மழை மூட்டத்தக்கு ஒண்ணுமே தெரியயில்ல...''

கடையால் பக்கம் நின்றவன் மெதுவாக நகர்ந்து ஒல்லணியைத் தேடி வந்தான். அலை எறிப்புக்கு ஏற்ற விதத்தில் தோணி எம்மி எம்மிக் குதிபோட்டது. கட்டை அவிழ்த்துக் கொண்டு பாய்ந்துவிடும் முனைப்பு.

''தம்பி சேவியர்... எழும்பு மோன... நல்லா விடிஞ்சு போச்சு. அங்காலப் பக்கம் எல்லாரும் வல இழுத்துப்போட்டு வெளிக்கிடுகிருங்க...''

அவன் மகனின் உடலில் மெதுவாகத் தட்டினான். சற்று அசைந்து கொடுத்தது உடல். மெல்லிய முனகல் வேறு. தேகம் முழுவதும் போர்த்திருந்த சாக்கு மாத்திரம் விலகவில்லை. இன்னும் இன்னும் வெளியே தெரிந்த காலின் பாதங்களையும் இழுத்துப் போர்த்துக் கொள்ள எத்தனித்தான். இவன விடவில்லை அவன் புறுபுறுத்துக் கொண்டே எழுந்து கொண்டான். திடுமென அவன் எழுந்த வேகத்தில் தோணி ஒரு பககம் சரிந்தது. ஒருகணம் தடுமாறியவன் டக்கென்று பயத்தில் தோணிக்குள் குந்திக் கொண்டான். சள.. சள வென்று இரு பக்கமும நீரை அடித்துக் கொண்ட தோணி சமநிலைக்கு வந்தது.



அந்தோனிக்கு சிரிப்புச் சிரிப்பாக வந்தது. மகன் ஒருகணம் பட்டபாடு. இன்னும்தான் இவனுககு பயம் தெளியவிலலை

ஒல்லணியை அவிழ்த்து சுற்றிச் கடையாலுக்குள் வைத்தான். அணியப் பலகைக்குள் செருகியிருந்த கம்பை இழுத்து வெளியே எடுத்தான். படுக்கைக்கு விரித்திருந்த கடிப்பு வலையை உதறிச் சுற்றி மெதுவாகக் கடலுக்குள் இறக்கினான். உடுத்தியிருந்த சாரத்தை அவிழ்த்து தலையில் கட்டிக் கொண்டு கமிசாலைததுடன குனிந்து கடல் நீரைத்தொட்டு நெற்றியில் சிலுவைக் குறி இட்டான். ''யேசுவே மாதாவே...'' எனறு மனதுக்குள் முணுமுணுத்தபடி மெதுவாக நீருக்குள் இறங்கினான்.

அன்று நன்றாகவே வெள்ளம் போட்டிருந்தது. மழை நீர் வேறு முட்டிக்கொண்டிருந்தது. வழமைக்கு மார்பளவு நிற்கும் நீர், இன்று கழுத்தளவு உயர்ந்து நின்றது இவ்வளவு இவன் மகன் இன்னும் வளரவில்லை. இவனுக்கு மீண்டும அந்த நினைப்பு இப்போது வந்தது. தோணியில் நின்றவனைப் பார்த்தான்.

அவன் வலைக்குள் தெரிந்த கடலின் அடிவயிற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். நீரில் இன்னும் வெளுப்புத் தெரியவில்லை. மினுக்...மினுக்கென்று ஒளியுடன மீன்கள் அங்குமிங்குமாக ஓடித் திரிவது நன்றாகத் தெரிந்தது. இவற்றைப் பார்க்க சேவியருக்குச் சந்தோசமாகத்தான் இருந்தது. எவ்வளவு நேரம்தான் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? இவன் நிமிர்ந்து பார்த்தான். அப்பு இவனையே பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

சேட்டைக்கழற்றி வைத்துவிட்டு இவனும் சாரத்தை அவிழ்த்து தலையில் கட்டிக்கொண்டான். அப்பு பார்த்துக் கொண்டிருந்தபோதே இவன் 'தொழக்'கென்று நீருக்குள் இறங்கியவன் ஒருகணம் மூழ்கிப் போனான். மறுகணம் திணறிக்கொண்டு மேலே வந்து வலைக்கம்பில் பிடித்துக் கொண்டான்.

அந்தோனிக்கு மகன் இறங்கிய தோறணை சரியாகப்படவில்லை. கோபம் கூட இருந்தது. எத்தனை தடவைதான் இவனுக்குச் சொல்லிக் கொடுப்பது?

அந்தோனி அந்த ஊரிலேயே களங்கட்டித் தொழிலில் பேர் எடுத்தவன். நீர் நிலை பார்த்து பாடு பிடித்துப் பாய்ந்தால் அதன் சீரே வேறுதான் எனப் பலரும் அவன் முன்னிலையிலேயே பேசிக்கொள்வார்கள் இதில் இவனுக்கும் தலை கனத்த பெருமைதான். பத்து வயதிலேயே பேரக்கிழவனுடன் பட்டிவலை இழுக்கத் தொடங்கிவிட்ட அனுபவம் சும்மா லேசானதா ?

ஆனாலும் என்ன! அவன் தனக்கென ஒரு தோணியைக்கூட இன்னும் சப்பாதித்துக் கொள்ளவில்லை.

ஒரு சனிக்கிழமை அதிகாலையில் கடலிலிருந்து திரும்பியிருந்தபோது மூத்த மகள் மெக்டலீன் அழுதபடி



வீட்டு மூலையிலிருந்தாள். மணமுடித்து மூன்று மாதம் கூட முழுதாக ஆகாமல் இருக்க, இவள் ஏன் புருஷன் வீட்டிலிருந்து உடுத்த துணியோடு வந்திருக்கிறாள்...?

விசாரித்ததில் புருஷன், பேசி வைத்த சீதனத்தோடு வரும்படி அனுப்பி வைத்திருந்தான் என்பது தெரிய வந்தது. அன்று மாத்திரமதான் அப்படி நடந்தது. அதற்கு முனபே பல நாட்கள் 'அரியண்டங்கள்' தொடர்ந்து வந்திருப்பதையும் அறிந்து கொண்டான்.

அவனுக்கு அதைக் கேட்டதும் கோபம் உச்சியில் அடித்தது என்னவோ உண்மைதான். பக்குவமாய்ச் சிந்தித்துப் பார்க்கையில் அவனுடைய இயலாமை அவனுக்கே புரிய வந்தபோது தன்னையே நிந்தித்துக் கொண்டான்.

மரியம்மா கொண்டு வந்த அரைப்பரப்புத் துண்டுக் காணியும், அரைச் சுவர் கட்டிய ஒரு ஓலைக்கொட்டிலும் இவனுக்கு என்று சொல்ல இருந்தது. அதுவும் இவன் பெண்ணின் கல்யாணச் செலவுக்கென வாங்கிய இரண்டாயிரத்துக்கும் ஈட்டில் இருந்தது. அதற்கென வட்டி வேறு வளர்ந்தது.

மூத்தவள் ஒருத்திதானா... அடுத்து அடுத்து இன்னும் இரண்டு வீட்டில் குந்திக் கொண்டிருந்து பயமுறுத்திக் கொண்டிருக்க... இன்றோ... நாளையோ என்று இன்னும் மூன்று... பின் முன்னாக...

நீண்ட நாள் வீட்டில் இருந்தவள் ஏதோ ஆசைப்பட்டுவிட்டாள் என்பதற்காக தனது இயல்புக்கு மீறிய வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டதன் பலன் இவனுக்கு இப்போதுதான் புரிய வந்தது.

கோவில் சபை வரை சென்று, கட்டளைக் குருவின் சந்நிதானம் வரை வழக்காடிப் பார்த்து விட்டான். தீர்ப்பு இவனுக்குச் சாதகமாக இருக்கவில்லை. இன்னும் இன்னும் அவமானங்கள் பூதாகரமாக எதிரே திரண்டு எழுந்தன. இவன் கலங்கிப்போய் மௌனமாகி விட்டான்.

தலைக்கு மேலால் காவா ஒன்று பயங்கரமாக அலறிச் சென்றது. வலைக்குள் அடைந்து கிடந்த சாதாளைகளை அள்ளி வெளியே எறிந்து கொண்டிருந்தவன், ஒரு கணம் துணுக்குற்றுவிட்டான். என்ன பயங்கரமான சத்தம் இந்தப் பறவைக்கு.

சேவியர் வலைக் கம்புகளைப் பிடித்துக் கொண்டே வாசல் வழியே 'வில்லுக்'குள் வந்துவிட்டான். அலை எழுந்தபோது வாய்க்குள் புகுந்த உவர்நீர் அவனுக்கு தொண்டைக்குள் கரித்தது.

இருவரும் வலையை இழுத்தனர். 'வில்லு'க்குள் ஒரு மச்சச்சாதியும் பிடிபடவில்லை. 'பட்டி'க்குள் மாத்திரம் சில முரல் குஞ்சுகள், ஐந்தாறு திரளி மீன்கள், சில வெள்ளை இருல்கள் தெறித்தன. வலையில் ஊர்ந்து வெளியேறிக் கொண்டிருந்த நண்டுக் குழுவான் ஒன்றை அப்பு பக்குவமாக கையினுல் பொத்திப் பிடித்ததை சேவியர் ஆச்சரியமாகப் பார்த்தான்.

இவர்கள் வலையை இழுத்துக் கொண்டு தோணியில் ஏறியபோது பொழுது நன்ருகவே வெளுத்து விட்டது. குளிரின் கடு...கடுப்பும் குறைந்து கொண்டு வந்ததாயினும் மழைக்கான மூட்டத்தின் அறிகுறி இன்னும் இருந்து கொண்டுதானிருந்தது.

o o o



தோணி களத்துக்கு வந்துவிட்டது. சாதாளைகள் வேறு தோணியின் முதுகுப்புறத்தை உரசின. மனிதக் காலடிகள் பட்டுச் சிதம்பிய சேற்றின் நாற்றம் மூக்கில் 'பக்'கென்று அடித்தது.

கரைக்கு வந்த தோணிகளிலிருந்து பலர் மீன்களைத் தெரிந்து கொண்டிருந்தனர். தோணிகளைச் சுற்றி பல சிறுவர்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர். கடைவாயில் எச்சில் காய்ந்து கண்களில் பீளை தள்ள அழுக்குத் துண்டுகளை இடுப்பில் சுற்றிக்கொண்டு கிழிந்து போன உமலகளுடன் தங்களுக்கும் அதில் எஞ்சாதா? என்னும் ஏக்கம் அவர்கள் கண்களில்...

அந்தோனியின் தோணியைக் கண்டதும் இவர்களில் சிலர் முண்டி அடித்துக் கொண்டு அருகே வந்தனர். பிடிக்கப்பட்ட சொற்ப மீன்களும் ஏற்கனவே பொறுக்கிப்பறிக்குள் போடப்பட்டுவிட்டன. வெறும் தோணிதான் அவர்கள் பார்வையில் பட்டது ஏமாற்றத்துடன் அடுத்த தோணிக்கு நகர்ந்தனர்.

அந்தோனி தலைக்குக் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து காய்ந்து சொர சொரவென்றிருந்த முகத்தை அழுத்தித் துடைத்தான். அதையே சமிசாணத்துக்கு மேலால் சுற்றிக்கொண்டான்.

"தம்பி... நீ...வள்ளத்தக் கழுவிப்போட்டு...கடிப்பு வலைய அலசிவை... நான் மீன் வித்துப்போட்டு சுறுக்காவாறன்... நல்லா நேரம் போச்சு. சந்த குலயப் போவுது..."

அந்தோனி பறியையும் மீனையும் காவிக்கொண்டு சந்தையைத் தேடி நடந்தான். சேவியருக்கோ வீதிக்கரையில் நின்று மொய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் மத்தியில் நின்று சுறுசுறுப்பாய் பாயாசக் குஞ்சி விற்றுக் கொண்டிருந்த சித்தி சாக்காவிலேயே கண் விழுந்து கொண்டிருந்தது.

ஆனாசி தூரத்தில் வரும்போதே பறியின் சனப்பில் கணக்கெடுத்துக் கொண்டாள். அந்தோனிக்கு இன்று வாய்க்கவில்லை. ஆனாசியின் முகம் 'சுருக்'கென்று இழுத்துக் கொண்டது. உழைப்புக் குறைந்துவிட்டால் 'கூறியான்' வருவாயும் இவளுக்குக் குறைந்து விடும் என்பது அவளுக்குத் தெரியும்.

அவன் அவளுடைய சுளகில் மீன்களைக் கொட்டி விட்டு மற்றவர்களுக்குக் கிடைத்த உழைப்பையும் அவதானித்தான். சுற்றி நின்றவர்களின் முகத்திலும் 'தெம்பு' இல்லை.

''ஆச்சி...இது என்ன கேக்குவினம்...'' சைக்கிள் வியாபார மணியத்தின் குரல்தான் வழமைபோல் முந்திக்கொண்டது. பருமனான மீன்களைத் தட்டி மேலே பரப்பிக் கொண்டிருந்த ஆனாசி நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. குரலில் சூடு பறந்தது.

''இப்பதான் நவாலி மேரி ஐஞ்சு ரூபா கேட்டுப் போட்டுப் போறாள். ஆரெண்டாலும் ஏழு ரூபாக்காறர் தூக்குங்கோ... இந்தக் காத்துக்கையும் மழைக்கையும் கிடைச்ச உழைப்பு இதுதான்...''

கோவில் குத்தகைச் சிலுவைமுத்து தனக்குச் சேர வேண்டிய பத்தில் ஒன்றை பிடுங்கிக்கொள்ளும் முனைப்பில் கணக்கு எழுதும் கொப்பியுடன் அருகே வந்து நின்றான். இயந்திர கதியில் 'மீன் சுளகுகள்' கை மாறிக்கொண்டிருக்கும் அந்த வியாபார ஸ்தலத்தில், பல தொழிலாளர்களின் விற்பனைக் கணக்குகளை பிசகாமல் பதிந்து கொள்வதுடன், இடையிடையே 'தரகாக' நின்று மீன்களின் விலைகளையும் நிர்ணயித்து வைக்கின்றவன். இந்த இடத்தில் அவனுக்கென்றே சில அதிகாரங்கள்.

''என்ன கேக்குவினம் ஆனாசி.. இந்தக் கூற...''



''நான் நாலு கேக்கிறன் ஆரெண்டாலும். கூட வைச்சு எடுங்க.''

''சரி ஆரெண்டாலும் ஐஞ்சுக்காறர் தூக்குங்க ''

குத்தகையின் உரத்த குரல் அதிகாரத்துடன் பிறந்தது. 'சைக்கிள்' மணியமும், நவாலி மேரியும் ஏக காலத்தில் மீன சுளகை கைப்பற்ற முனைந்தனர். சில நிமிடங்கள் வரை இருவருக்குள்ளும் இழுபறி. மேரி சற்று சளைத்து விட்டாள். ஆற்றாமையினால் தூசணித்துக்கொண்டே தனது கொழுத்த செழுத்து மீன் போன்ற பருத்த உடலை மெல்ல அசைத்து அசைத்து அடுத்த சுவருக்கு நகர்ந்தாள். மணியமும் விட்டுவிடவில்லை. குமரியின் மிதமிஞ்சிய தசை வாகுவைப் பற்றி இவன் சொன்ன விரசமான வார்த்தைகள் எல்லோரையும் விழுந்து விழுந்து சிரிக்க வைத்தது.

அந்தோனிக்கோ மீனுக்கு விலை போதாது என்ற வருத்தம். இன்னும் ஒரு ரூபாவது கூட விற்றிருக்கலாம் என்று நினைத்தான். இன்னும் சற்று நேரம் வைத்திருந்துகூடப் பார்த்திருக்கலாம் போல் அவனது மனது சகுப்பட்டது. ஆனாலும் அவன் என்ன செய்ய முடியும், குத்தகையே சொன்னதற்குப் பிறகு?

சிலுவைமுத்தர் பணத்தை வாங்கி எண்ணி தனது 'கணக்கை' முடித்துக் கொண்டு மிகுதியைக் கொடுத்தார். இவன் மௌனமாக அதை வாங்கி மடியுக்குள் செருகிக்கொள்ளப் போனவன், கூறியான ஆனாசியின் பார்வையைக் கண்டு கொண்டவனாய் ஒரு ஐம்பது சதக் குத்தியை சுளகில் போட்டான்.

''களவு போன வலை இன்னும் கிடைக்கயில்லியா அந்தோனி. கரையூர் சங்கத்தில போய் ஒருக்கா அறிவித்துப்போட்டு வாவன் ... எத்தின நாளைக்கித்தான் இப்படி ஒத்த வலையோட அலமாரடிக்கப் போற.''

குத்தகை எப்போதும் இப்படித்தான். ஏதோ தொழிலாளர்களில் அதிக அக்கறை உள்ளவர்போல பிசங்கிக் கொள்வார். அது இவனுக்கு மட்டும் தெரியாமல் என்ன... இவனே மறந்துபோன விஷயம்.

"எல்லா இடமும் பாத்தாச்சு குத்தக. ஒருடமும் வரேயில்ல யெண்டிற்றுங்க. இது உள்ளாளும் கள்ளாளும்தான் விளையாடியிருக்கிறுங்க போல எனக்குப் படுகுது."

அந்தோனி வெறும் பறியைத் தூக்கிக்கொண்டு நிமிர்ந்து பார்த்தான். வீதிக் கரையோரம் சித்தி காக்காவின் பாயாசக்கஞ்சிக் கூட்டம் இன்னும் அதிகரித்திருந்தது. இவனுடைய சேவியரின் தலையும் இடையே தெரிந்தது.

இவனுக்கும் வயிற்றைக் கிள்ளியது. சின்னத்தம்பியரின் பெட்டிக்கடையில் இரண்டு தோசையாவது வாங்கிச் சாப்பிட்டால்தான் அந்த வயிற்றுக்குள் எரிவது தணியும்போல் இருந்தது. ஒரு தடவை கடைக்குள் புகுந்து வெளியே வந்துவிட்டால் வீட்டுக்கு கொண்டு செல்ல காசு எதுவும் மிச்சமா இருக்குமோ? வீட்டுக்குப் போய் ஏதாவது பார்த்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில் தோணியைத் தேடி நடந்தான்.

பின்னுல் இருந்து யாரோ ஒருவன் உரத்து அழைத்தான். இவன் திரும்பிப் பார்த்தான். கடைக் குத்தகைக்காரர் செல்லத்துரையர்தான் பின்னுல் வந்து கொண்டிருந்தார். இப்பொழுதுதான் இவனுக்கு கடைக் காசு கொடுக்கவில்லை என்பது நினைவுக்கு வந்தது. இவன் மடியைப் பிரித்து காசை எண்ணி எடுப்பதற்குள்ளேயே செல்லத்துரையர் முந்திக்கொண்டார்.

"என்ன காணும் பேசாமல் பறயாமல் நழுவப் பார்க்கிறீர். கடைக்காசு குடுக்கிறது மறந்து போச்சோ



நாங்க இவ்வளவு பணத்தை வீ. சி. க்கு அள்ளிக் குடுத்திற்று ஒரு ரூபா மசிர்க்காசுக்காக உங்களுக்குப் புறத்தால திரியவேண்டியிருக்கு."

அந்தோனி ஒரு கணம் குறுகிப்போனுன். திருடி விட்டுப் பிடிபட்டவனைபோல சுற்றி நின்றவர்கள் இவனைப் பார்த்த பார்வை... இந்த வயதிலும் இப்படி ஒரு அவமானம்.

"தம்பி செல்லத்துரை கொஞ்சம் வயசுக்கெண்டாலும் மரியாதையாய்ப் பேசும். உம்மட காசு நாய் தின்னுக் காசு ஏதோ வேணுமெண்டு செய்ததுமாதிரி துள்ளிக் குதிக்கிறீர்."

அந்தோனி வேகத்தில் எறிந்த ஒரு ரூபாக்குத்தி அவனுடைய மூஞ்சியில் அடித்துவிட்டது போல் அவன் காலடியில் 'தொப்'பென்று விழுந்து உருண்டு மணலுக்குள் புதைந்து போனது புதைந்துபோன காசைப்பெருவிரலால் தோண்டி எடுதது மண்ணை ஊதி மடியுக்குள் செருகிக் கொண்ட செல்லத்துரையன் பக்கத்தில் நின்றவனுக்குச் சொன்னுன்:

"ஒரு பொம்புளப் பிள்ளைக்கு சீதனம் கொடுத்து கரை சேர்க்க ஏலாத பொறுக்கியள்... ரோசம் மட்டும் மூக்கு நீளத்திலை..."

O O O

கடலில் இருந்து திரும்பியவன் உடலைக் கூடக் கழுவிக் கொள்ளவில்லை. அப்படியே திண்ணையில் குவித்துக் கிடந்த கிழிந்த வலைக் குவியல்களுக்குமேல் சாய்ந்து விட்டான். அடித்துப் போட்டது போன்ற உடல் சோர்வு. இப்பொழுதெல்லாம் அது அதிகமாகவே ஏற்படுவது அவனுக்கும் தெரிந்துதான் இருந்தது.

"அப்பு எழும்பண. இதத் திண்டு போட்டுப் படண..."

அந்தோனி தலையை நிமிர்த்திப் பார்த்தான். மூத்தவள் மெக்டலின் இரண்டு முறி அவித்த கிழங்கும் அரைத்த மிளகாய்ச் சம்பலையும தட்டில வைத்துக் கொண்டு நின்றாள்.

''புள்ள, ஆச்சி எங்க போனவ...?''

''கோயிலுக்குப் போயிருக்கிறு...''

''நீ போகேல்லியா...?''

அவள் மௌனமாகத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். புருஷன் வீட்டில் இருந்து வந்ததிலிருந்து அவள் ஊருக்குள் முகம் காட்ட அப்படி ஒரு தயக்கம்.

''தேகமெல்லாம் ஒரே அலுப்பா இருக்கு மோன... கொஞ்சம் சுடுதண்ணி வைச்சுத்தா...''

மெக்டலின் கிழங்குத் தட்டை அப்படியே வைத்து விட்டு தண்ணீர் சுட வைப்பதற்காக குசினிக்குள் புகுந்து கொண்டாள்.

குஞ்சுங் குருமனுமாக வீடு நிறைந்து கிடக்கும் அந்தோனியின் பிள்ளைகள் ஒன்றையுங் காணவில்லை.

''அவங்களும் பூசைக்காக கோயிலுக்காக போயிருக்க வேணும அவங்களும் தான் பூச பிரார்த்தின எண்டு நாள் தவருமல் போய் வருவினம். அந்தத் 'தேவன்'தான் இன்னும இரங்கக் காணயில்ல...''

அந்தோனி மறுபடியும் வலைக்குவியலுக்கு மேல் சரிந்து கொண்டான். அவனுடைய சிந்தனை எல்லாம் தோணிக்கான கூலிக்காசும் கொடுத்த பின் மிஞ்சப் போகும நாலோ ஐந்து ரூபாவில் எப்படி இன்றைய பொழுதைப் போக்குவது என்பதிலேயே தீவிரமாக இருந்தது.



# இழப்பு

கருக்கலின் மென் இருட்டு. கனத்த மௌனத்தைக் கிழித்துக் கொண்டு காகக்கூட்டங்கள் கத்தின. தெருநாய்கள் ஊளையிட்டன. எங்கேயோ பட்டமரப் பொந்திலிருந்து கிளிக்குஞ்சு ஒன்று எதையோ பார்த்துப் பயந்து கீச்சிட்டுக் கத்தியது.

சரசுவுக்கு விழிப்புக் கண்டது. கண்ணுக்குள் என்னவோ உருளுவதுபோல் கச...முசவென்று எரிந்தது. தேகம் முழுவதும் அடித்துப்போட்ட சோர்வு. கிடுகு வரிச்சுக்குள்ளால் பகல் உள்ளே வந்தது.

''அதுக்குள்ள விடிஞ்சு போச்சா...''

அவள் அலுத்துக்கொண்டாள். எப்போதும் அவளுக்கு அப்படித்தான், தூக்கத்திலிருந்து எழுந்துகொள்வதே பெரும் சுமைபோல. நேற்று அம்மன் கோயில் கடைசித் திருவிழா. ஸ்பீக்கரும் சினிமாப் பாட்டுமாய் அந்த அயல் முழுவதும் கலகலத்துப்போயிருந்தது. இரவு வழமைபோல் குட்டித்தம்பியரின் சங்கிலியன்

கூத்து. திருவிழாவின் உச்சம். இரவு முழுவதும் வெற்றிலையைப் போட்டு அரைத்துக் கொண்டே கொட்டக் கொட்ட விழித்திருந்து பார்த்துவிட்டு சற்று நேரத்துக்கு முன்தான் தனது பரிவாரங்களுடன் வந்து படுக்கையில் சரிந்திருந்தாள் சரசு.

குட்டித்தம்பியரின் பாட்டு இப்பொழுதும் காற்றில் கிணு...கிணுத்தது. முகம்கூட முன்னுக்கு வந்து கண்ணுக்குள் நின்றது. சரசுவுக்கு அப்படி ஒரு பிரியம் அவன் பாட்டில். பாட்டில் மட்டுந்தானா?

அவள் எதையோ நினைத்தாள். எதற்காகவோ சிரித்தாள்.

''ஊரில் உள்ளவள்களெல்லாம் என்னமோ... என்னமோ... எல்லாந்தான். வாயிலே வச்சுப் பேசுருங்க. அது என்ன இழவோ... அப்படி ஒரு புறியம் எனக்கு... என்ர புருசனில் வச்சிருந்தமாதிரி.''

பக்கத்திலே குழந்தை முலைக்காம்பைச் சப்பியபடி உறங்கிப்போயிருந்தது. அதன் கடைவாயைத் துடைத்துவிட்டு சட்டையை இழுத்துச் சரிசெய்து கொண்டே எழுந்தாள். குழந்தையின் மூத்திரத்தால் சேலை நனைந்திருந்தது. பிழிந்துவிட்டுக் கொண்டாள். கிழியல் இல்லாத பக்கமாக புரட்டிப் பார்த்து சீராக உடுத்துக் கொண்டாள்.

''எடி... பொன்னு... எழும்படி .. நல்லா நேரம் போட்டுது......''

பொன்னுவை எழுப்பினாள். அவள் என்னென்னவோ முணுமுணுத்தாள். பக்கத்தில் கிடந்த சின்னவி தலையை நிமிர்த்திப் பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பி சரிந்து கொண்டான். நாகராசா, சின்னராணி மூலைக்கு ஒருத்தராய் முறுகிப்போய்க் கிடந்தனர்.



''எடீ, எழும்படியெண்டால்... அங்கால பார் எல்லாரும் அவதிப்பட்டு ஓடுகினம். எழும்பு புள்ள...''

''போண... நான் இண்டைக்குப் போகன்...உம்... உம்......''

''ஏனடி புள்ள. திங்கக்கிழமயும் அதுவுமா...பிழைப்புக் கிடைக்கிற நாளில்... சுறுக்கா எழும்பி வெளிக்கிடு......''

''ஒரே அலுப்பா இருக்குதண. இராவுக்கும் ஒண்டும் தரேல்ல. எனக்குச் சரியாகப் பசிக்குது.''

பொன்னு அழுதுவிடுவாள்போலிருந்தது. சரசுவுக்கு நினைவு இருந்தது. மத்தியானம் பாண் வாங்கிக் கொடுத்தது. அதற்குப் பின் இரவு! இரவு என்ன? முடிச்சில் கூத்துச்செலவுக்கு என்றே பிடித்து வைத்திருந்த ஒரு ரூபாக்குத்தி. அது கடலை வாங்கிக்கொடுத்ததோடு சரி. கூத்து ரசிப்பில் எல்லாவற்றையும்தான் மறந்து விட்டாள்.

''என்ர குஞ்செல்ல... நீ போனால்தானடி நான் அடுப்புப் பத்த வைப்பன்... நான் புள்ளைக்கு விசாலாச்சிக் கிழவி வந்தோடன கிளங்கும் சம்பலும் வாங்கி ஒருத்தருக்கும் குடுக்காம ஒழிச்சு வைப்பன்...''

''...உம் உப்புடித்தான் நேத்துக் காலம்புறமும் சொன்னனி''

''என்ர வைரவரானை வேண்டி வைப்பன்''

சரசு தலையில் தொட்டு வைத்தாள். பொன்னு மறுபடியும் அம்மாவை நம்பினாள். எழுந்து பாயில் குந்திக்கொண்டாள். சிக்குப்பிடித்த தலையை பற..பற ...வென்று சொறிந்தாள். மறுபடியும் கண்களைமூடினாள். மீண்டும் விழித்தாள்.

சரசு குடிசை வாசலுக்கு வந்தாள். சோளகம் பிய்த்து வாங்கியது. முகட்டுக் கிடுகுகள் வரிசைவிட்டு எம்பி...எம்பிக்குதித்தன. அப்படி ஒரு வேகம்; இப்படித் தான் ஒரு நாள் சோளகம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தபோது கணபதி இவளைத் திட்டிக்கொண்டே வடக்குப் பக்கமாகப் போனான். காற்றில் இரைச்சலுக்குள் அப்படியே அமுங்கிப் போனதில் இவளுக்கு எதுவும் கேட்கவில்லை.

அவன் அதற்குப்பின் இந்தப்பக்கமே வரவில்லை. கணபதி 'வகுப்புத்தொழில்' தான் செய்து வந்தவன். அலுப்பாந்திக்கு வரும் வத்தைகளிலிருந்து மூடைகளை இறக்கி ஏதோ நாலு காசு சம்பாதிக்கச் செய்தான். மாட்டுடன் வண்டில் ஒன்றை வாங்கினான். அதற்குப் பின் தான் ஏனோ நிறையக் குடிக்கத் தொடங்கினான்.

இரவில் வருவான். நிறைவெறியில் மூர்க்கத்தனமாக சரசுவை அடிப்பான். அவளும் ஏதாவது கையில் கிடைத்ததால் எறிந்து தனது இயலாமை, ஆத்திரம் எல்லாவற்றையுமே தீர்த்துக்கொள்வாள். பிள்ளைகள் கூக்குரல் வைக்கும். கணபதியை அறிந்த அயலவர்கள் ஏன் வரப்போகிறார்கள்?

அடுத்த நாளும்... அதற்கு அடுத்த நாளும்... தாக்குதல்கள், தற்காப்புத் தாக்குதல்கள்... கூக்குரல்கள் தொடரும்.

''போடா வேசயடமோனே... விட்டுவிட்டுப்... போடா குடிகார தூமமோன்...... போடா...'' இது சரசுவின் வாய்ப்பாடு.

கணபதி பலமுறை விட்டுவிட்டுப் போனவன்தான். தொடர்ந்து இரு இரவுகள் எப்படியோ எங்கேயோ கழித்துவிடுவான். அப்புறமாக எப்படியோ சமரசம்



நடந்து கொள்ளும். இவ்வளவு அமளிக்குள்ளும் சரசு நசுக்கிடாமல் ஐந்தைப் பெற்றுப்போட்டு விட்டாள்...

இந்தமுறை கணபதி திரும்பவில்லை. ஒருநாள், இரண்டுநாள், ஒரு வாரம்... ஒரு மாதம், ஒரு வருஷம்... அவன் திரும்பவேயில்லை. இது சரசுவிற்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவனுடைய 'சரீரபலவீனத்தை'' அறிந்து வைத்திருந்த அவளுக்கு அவனுடைய வைராக்கியம் ஒருவிதத்தில் அதிர்ச்சியாகக்கூட இருந்தது.

அவளுக்கும் அப்படித்தான். ஒருநாள்... இரண்டு நாள் ஒரு வாரம்... ஒரு மாதம்... ஒரு வருஷம்... அப்புறம் கணபதி என்ற 'மனிதனை' மறந்தே போய் விட்டாள். அதற்காக துக்கப்படுவதையும் நிறுத்திக் கொண்டாள்.

சில நாட்களுக்கு முன்தான் குட்டித்தம்பியர் கதைவாக்கில் சொல்லி வைத்தார். கணபதி காங்கேசன் துறைக்கு வரும் கப்பல்களிலிருந்து மூடை இறக்குகிறானாம். அங்கேயே குடியும் குடித்தனமும் மறுபடியும் ஆகிப் போய்விட்டதாம்.

காற்று ஒருகணம் சுழன்றது. பக்கென்று மண்ணைத் தூவி முகத்தில் அடித்தது. சரசு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தூரத்தில் வயல் வெளி தெரிந்தது, கூத்துக் கொட்டகையை நின்று சிலர் பிரித்துக் கட்டிக்கொண்டிருந்தனர். குட்டித்தம்பியரும் சிலவேளை அங்குதான் நிற்பார்.

குட்டித்தம்பியர் கலையானவர், காசு உள்ளவர், வெற்றிலையும் வாயுமாய் எல்லோருடனும் சிரிக்கச்

சிரிக்கப் பேசுவார். ராசகூத்துக்கு குட்டித்தம்பியரை அசைக்கவே முடியாது. பாட்டு அப்படி. வேஷப்பொருத்தம் அப்படி. அவருடைய இளைய பெண்ணுக்கு மூன்று பிள்ளைகள். இப்படி எல்லாம் இருந்து கொண்டும்தான் சரசுவிடம் வந்து போய்க் கொண்டிருந்தார் குட்டித்தம்பியர்.

பக்கத்துக் குடிசைகளிலும் உரத்த பேச்சுக்குரல். கடற்கரைக்குப் போவதற்கு பலர் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

பொன்னு வேலி மூலைக்குள் 'ஒண்டுக்கு' குந்திக் கொண்டிருந்தாள். சரசு கூரைக்கு மேல் காயப்போட்டிருந்த உமலை எடுத்தாள். ஏற்கனவே கிழிந்துபோயிருந்த மூலைகள் இன்னும் பெரிதாகியிருந்தன. ஓலை எடுத்து கிழிவுகளைப் பொத்திப் போடவேண்டும் என்று நேற்று நினைத்திருந்தவள், திருவிழாச்சந்தடியில்மறந்தே போய்விட்டாள்.

உமலை விரித்துப்பார்த்தாள். செதிள்களும் செத்த குஞ்சுமீன்களுமாய் வெடில் பக்கென்று மூஞ்சியில் அடித்தது. வயிற்றைக் குமட்டுவதுபோல்.

பொன்னு இப்போ பானையைத் துளாவிக் கொண்டிருந்தாள். ஏதோ சொட்டு நீர் கைகளை நனைத்தது. முகத்தில் தடவிக்கொண்டாள். கண் பீளையையும், எச்சில் காய்ந்திருந்த கடைவாயையும் பாவாடையால் துடைத்துக் கொண்டாள்.

அந்தப் பாவாடை எப்படியெல்லாமோ கிழிந்து போயிருந்தது. மேல் உடம்பில் அம்மாவின் பெரிா சட்டை தொள தொளவென்றிருந்ததை இறுக்கி, வயிற்றுடன் முடிந்திருந்தாள்.



சரசு அவளுடைய தலையைக் கையால் நீவிவிட்டாள். அழுக்குத்துண்டு ஒன்றினால் மயிரைச் சேர்த்து சிலும்பாமல் கட்டிவிட்டாள்.

''அம்மா எனக்கு...ஒரு சட்டை தைச்சு தாவனணை... இதத்தானே நெடுகிலும் போடுறன். கடக்கரைக்கு வாறபொடியள் எல்லாம் எனக்கு நொட்டை சொல்லிகினம்...''

''பொறு புள்ள, சின்னாச்சி அக்காவோட நான் சீட்டு பிடிச்சிருக்கிறன். விழுந்தோடன உனக்கு சீத்தையில ஒருகவுண் தச்சுத்தருவன்...''

பொன்னு உமலைத் தூக்கிக்கொண்டாள். எப்போதாவது இவளோட கூடிப்போற சின்னவியும் எழுந்து வந்துவிட்டான்.

''கவனம் புள்ள... காத்துக்குள்ள... கார் வாறது கூடக்கேக்காது...சின்னவிய கவனமாக கையில புடிச்சுக் கூட்டிக்கொண்டு போ...''

அவர்கள் போய்விட்டார்கள். இவள் பெருமூச்சு விட்டுக்கொண்டே உள்ளே வந்தாள். குழந்தை அழுது கொண்டிருந்தது.

மூலையில் விளக்கு சரிந்து கிடந்தது. அதை எடுத்து நிமிர்த்தி வைத்தாள். தீப்பெட்டியை உரசிக் கொளுத்தினாள். சடக்கென்று ஒளி நிமிர்ந்தது. அத்துடன் பக்கென்று மறுபடியும் அணைந்தது.

இப்போது குழந்தை இன்னும் வீறிட்டது. தேநீராவது வைக்கலாம் என்று நினைத்தவள், புஷ்பராணியைத் தேடினாள். அங்கு ஒருவருமே இல்லை. அந்த விடிகாலையிலேயே... எங்கேயோ ஓடிவிட்டனர். எங்கே

போவார்கள். கடற்கரை குப்பை மேட்டில் எதையா வது பொறுக்கிக் கொண்டிருப்பார்கள்.

அவள் வெளியில் வந்து குரல் கொடுத்தாள்.

''எடி புஷ்பராணி... இங்க வந்து புள்ளயைத் தூக்கி வைச்சிரடி...''

வெகு அண்மையில் ஏதோ பாட்டின் முணுமுணுப்பு கேட்டது. குட்டித்தம்பியர்தான் வந்து கொண்டிருந் தார்.

சரசு தேநீர் வைப்பதற்காக குசினிக்குள் புகுந்து விட்டாள்.

அவர் வரும்வேளைகளில் அவளுக்கு சந்தோஷந் தான். இருந்தாலும் அடிமனக்கிடக்கையில் ஏதோ துரு...துருவென்று முடக்குவாதம் செய்தது. புரியாத என்னவோ ஒன்று.

''என்ன.. சரசு.. தேத்தண்ணி வைக்கிறியா...எனக் கும் கொஞ்சம் கொண்டா சுடச்சுட.''

குட்டித்தம்பியர் வழமையாக உட்காரும் மரப்பெட் டியில் குந்திக்கொண்டார். தலைக்கு மேல் பூவரசுநிழல் விழுந்திருந்தது. வெயில் சற்று எட்டித்தான் நின்று கொண்டிருந்தது. இன்னும் அரைமணி நேரத்திற்கா வது அதில் இருக்கலாம். அப்புறம் அந்த இடத்தில் இருக்க இயலாது. உள்ளே போகவேண்டும் அல்லது வெளியே போகவேண்டும்.

சரசு தேநீர்க் கோப்பையையும் சர்க்கரைக் குறுகலை யும் கொண்டு வந்து வைத்தாள். குட்டித்தம்பியர் செழுமையான அவள் உடலை ஒரு தடவை கண்களால் ஸ்பரிசித்தார். அவளும் கவனிக்காமல் என்ன...உதட் டைப் பிதுக்கிக்கொண்டு ஒருக்களித்துப் பார்த்தாள்.



கொடுப்புக்குள் வைத்திருந்த வெற்றிலைச் சப்பலை தூ...தூவென்று துப்பிவிட்டு செம்பிலிருந்த நீரினால் நன்ருகக் கொப்பளித்துக் கொண்டார். இதற்காகவே வந்தவர்போல் தேநீரை ருசித்துக்குடித்தார்.

அவருடைய முகத்தில் இரவு பூசிய பூச்சு இன்னும் அழியவில்லை. மழுங்க வழித்திருந்த முகத்தில் மீசையி ருந்த இடத்தில் ஏதோ அழிந்துபோன கறுப்புக்கோட் டின் மெல்லிய தழும்பு. கண்களில் நித்திரையின் கனப்பு. அந்தக் கோலத்தில் அவரைப் பார்க்க சற்று வேடிக்கையாகத்தான் இருந்தது. இவரா இரவு சங்கி லியனுக வீரத்தோடு பெரிய மீசையைத் திருகிக் கொண்டு வந்தவர்?

''என்ன புள்ள, இரவு கூத்துப்பாத்தியா... எப்படி இருந்தது...?''

''என்ன...ஏதோ... காணுத ஆளாட்டம். முன்னுக் குத்தானே இருந்தனுன்... பாத்துப் பாத்து பல்லைக் காட்டிப்போட்டு...''

குட்டித்தம்பியர் விநயமாகச் சிரித்தார். அவரது சின்னத் தொந்தி சற்றுக் குலுங்கியது.

''அது கிடக்கட்டும் புள்ள..என்ர படிப்பு எப்படி...?''

''பின்கூத்து நீங்க வந்த பிறகுதான் வலு எழுப்ப மாக இருந்தது எண்டு எல்லோரும் பறஞ்சு கொண்டு வந்தினம்...''

குட்டித்தம்பியருக்கு வலு சந்தோசம். தேநீர் முழு வதையும் ஒரே முச்சில் உறிஞ்சிவிட்டு கோப்பையை வைத்தார். மடிக்குள் செருகி வைத்துக்கொண்டு வந்த சிறிய 'பார்சல்' ஒன்றை அவளிடம் நீட்டிக் கொடுத் தார்.

அவள் பவிசாகச் சிரித்துக்கொண்டே வாங்கி விரித்துப் பார்த்தாள். அது பூ விழுந்த சட்டைத்துண்டு அந்தக் கணத்தில் பொன்னுவைத்தான் நினைத்துக் கொண்டாள் சரசு. இன்னும் அவளுக்கு சந்தோசமாக இருந்தது. அவர் எப்போதாவது இப்படித் தருவது தான். ஆனாலும் அதற்காக ஏங்கி இருந்தவளல்ல...

இருவருமாக என்னவோ எல்லாம் பேசினர். வெளியில் யாரோ வரும் சத்தம் கேட்டது. இருவருமே ஏக காலத்தில் திரும்பிப் பார்த்தனர். பொன்னு நன்றாக நனைந்துபோய் வந்து கொண்டிருந்தான். அவன் முகத்திலும் கைகால்களிலும் சேறு அப்பியிருந்தது. அவன் அழுதிருக்கவேண்டும். முகம் வேறு வீங்கியிருந்தது. பக்கத்தில் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு வடக்குத் தெருக்கிழவி மேரி. அவள் தலையில் மீன் விற்கும் கடகமும், சுளகும். பின்னால் சின்னவி, கேவி...கேவி... இன்னும் அழுது கொண்டுதான் வந்தான்.

சரசு ஒருகணம் அப்படியே திகைத்து நின்றாள். அடுத்த கணம் குரல் எடுத்து எட்டு வீட்டுக்கு கேட்க கத்தினாள்.

''என்ன... நடந்தது...? என்ர புள்ளைக்கு என்ன நடந்தது...?''

சின்னவி அடக்கி வைத்திருந்தது வெடித்துச் சிதறியதுபோல் பெரும் குரல் எடுத்து அழுதான்...கேவிக் கேவி... அழுதான்.

''அக்கா, புறக்கி வைச்சிருந்த மீன அந்த ஆனக் கொட்டப் பொடியன் களவெடுத்துப் போட்டான்... அக்கா... அவன அடிச்சா... அவன் அக்காவ கடலுக்க தள்ளிப்போட்டான்... உம்... உம்...''



மேரிக் கிழவி அப்பொழுதுதான் குட்டித்தம்பியர் முற்றத்தில் இருப்பதைக் கவனித்தாள். அவள் முகம் சுறுக்கென்று உள் இழுத்துக்கொண்டது. வெறுப்புடன் விசுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

''இந்தா...சரசு... புள்ளயக் கூட்டிக்கொண்டு முதலில உள்ள போ... எல்லாத்தையும் நான் சொல்லுறன்.''

சரசுவுக்கு விளங்கி விட்டது. பொன்னுவை மெதுவாக அழைத்துக் கொண்டு உள்ளே போனாள். மேரிக் கிழவியும் தொடர்ந்து போனாள். உள்ளே கிழவியின் மெல்லிய குரல் வெகுநேரம் கேட்டது.

''இந்தா...சரசு... நான் சொல்லுறத கவனிச்சிக் கேள். விலபோகிற குமர் வீட்டுக்கு வந்திருக்கு...இனி எண்டாலும் இந்த அறுதலிமோன அண்டப் பிடிக்காத...''

மேரிக் கிழவி வெளியே வந்தாள். இறக்கி வைத்திருந்த கடகம் சுளகைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாள். குட்டித்தம்பியர் இருப்பதையே கவனியாதவளாய்... விடு...விடுவென நடந்தாள்.

குட்டித்தம்பியர் எதுவும் புரியாதவராய் முற்றத்து மரப்பெட்டியில் இன்னமும்தான் இருந்தார். வெயில் மரப்பெட்டிக்கு அருகே வந்துவிட்டது. இனி அதில் இருக்க இயலாது. கண்கள் வேறு சுழற்றி அடித்தது ஒரு கண் நித்திரை கொண்டுதான் தீர்க்கவேண்டும். சரசுவைப் பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று நினைத்தார். வெகுநேரம் சரசு வெளியில் வரவே இல்லை... சரசு ஏன் வெளியில் வரவில்லை...?

''சரசு... நான் அப்ப... போட்டுவாறன்...''

அவர் எழுந்து கொண்டார். தோளில் கிடந்த துண்டினால் முகத்தை அழுத்தித் துடைத்தார். வீட்டை நோக்கி விளங்காத தீவிரத்துடன் நடக்கத் தொடங்கினார்.

சரசு வெளியில் வந்தாள். குட்டித்தம்பியர் கொண்டு வந்த துணிப்'பார்சல்' விரித்தபடிதான் முற்றத்தில் கிடந்தது.

''குட்டித்தம்பியரும் கிழவி சொன்னதக் கேட்டிருப்பாரோ...''

அவள் மறுபடியும் கணபதியை நினைத்துக்கொண்டாள். அவள் நெஞ்சுக்குள் ஏதோ வந்து அடைத்தது. பொன்னு இனி மீன் பொறுக்க வெளியில் போகமாட்டாள். குட்டித்தம்பியரும் இனி வரமாட்டார். அப்படித்தான் அவள் நினைத்தாள். அவ்வாறே நடக்கவேண்டும் என்றும் விரும்பினாள்.

அவள் எல்லோரையும் இழந்துதான் விட்டாள். ஆனாலும் என்ன? எதையும் இழந்துவிடாத நெஞ்சுறுதி. அவளுக்கு அப்படி ஒரு மனப்பயிற்சி எப்படியோ ஏற்பட்டு விட்டது.

# வலை

நிலம் முற்றாக இன்னும் வெளுக்கவில்லை. அந்த வெள்ளாப்பிலேயே நேற்று பொழுது சாயும் மைம்மல் இருட்டில் கடற்கரையில் நடந்தவிட்ட அந்தச் சம்பவம் ஊர் முழுவதும் பரவி ஒருவித பதட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

எப்பொழுதுமே அவ்வேளையில் ஊமை அமைதியுடன், கடலை அண்டிப் பரந்து கிடந்த வளவில் நீண்டு நெடுப்பாக வளர்ந்து நிற்கும் தென்னை மரங்களிடையே தனித்து நிற்கும் பூவரச மரத்தடியில் நின்று கொண்டு, பலர் நடந்துபோன அந்தச் சம்பவத்தைப் பற்றி ஆவேசமாகவும், உரத்த தொனியிலும் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டு நின்றனர்.

வாடை அன்று பெயர்ந்தது. வேகமாக அள்ளுண்டு வந்த காற்றில் தென்னங்கீற்றுக்கள் வெறி பிடித்து ஆடின. கடல் கறுத்துக் குழம்பிக் கிடந்தது. வடுமாறி வெள்ளம் நுரைக்கத் தொடங்கியது.

கடல் முழுவதும் மிதந்து கொண்டிருந்த தோணிகளின் ''சள சள'' ஓசையின் சலனங்களினால் 'களங்

கண்டி' வலைகள் பாய்ந்திருந்த தடிகளில் குந்தியிருந்த வெண்கொக்குகள் நீலவானத்தில் எழுந்து பறந்து செல்வதும் நிலை கொள்ளாமல் மீண்டும் நீர்ப் பரப்பில் இறங்கி கூரிய அலகுகளினால் எதையோ கொத்திச் செல்லும் முனைப்பில் போராடிக் கொண்டிருந்தன.

கடலை அண்டிய காரைதீவு வீதியில் ஆனைக்கோட்டைக்கு அப்பாலிருந்து அங்கு வரும் இழுப்பு வலைக் காரர் இழுத்து வந்த மீன்களையும், இறால் வலைகளையும் வீதியில் பரத்திப் போட்டுக் கடற்பாசிகளிலும், தாழைகளிலும் இருந்து அவற்றைப் பிரித்து எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களும் அவ்விடத்தைவிட்டு விரைவில் சென்றுவிட வேண்டுமென்று பரபரத்தாலும், சுற்றி நின்று காது செவிடுபடக் கத்திக்கொண்டிருந்த காக்கைக்கூட்டங்கள் அவர்களை விடுவதாயில்லை.

வில்லூன்றிச் சுடலையைத் தாண்டி வடக்கால் காக்கைதீவுச் சந்தையை நோக்கி ஓடிக்கொண்டிருந்த தோணியின் அணியத்தில் நின்ற சைமன் தூரத்தில் வரும்போதே கடற்கரை வளவில் பெரும் கூட்டம் ஆரவாரப்பட்டுக் கொண்டு நிற்பதைக் கண்டு கொண்டான்.

அற்ப சம்பவங்களைக்கூட பெரிதுபடுத்தி உணர்ச்சி வசப்பட்டவர்களாய் உரத்து விவாதிப்பதும் விவாதம் முற்றி கைகலப்பாக மாறி தங்களுக்குள்ளே அடிபட்டுக் கொள்வதும் அந்த ஊர் மக்களுக்கு பரிச்சயமாகிப் போன ஒன்று என்பது பிரசித்தம்.

சைமன் ஒரு தினுசானவன். ஊர்ச்சோலிகள் எதுவானாலும் கண்டுக்காமல் இருக்கமாட்டான், அதிலும் தொழிலாளிகள் விஷயம் என்றால் உரத்தே குரல் எழுப்புவான். இவனைப் பற்றி வேறு மாதிரியான கதை ஊரில் இருந்தாலும் ஊர் விஷயங்களில் இவன் கொள்ளுகின்ற அபிப்பிராயங்கள் பற்றி சனங்களுக்கு மதிப்பு இருந்தது.



''டேய் சவிரி, அங்க கவனியடா, வளவில் ஒரே சனக்கூட்டமா இருக்குது. ஊரில் ஏதாவது நடந்து போச்சுதோ...''

தோணியின் நடுத்தளத்திலிருந்து மீன்களைத் தெரிந்து பறிக்குள் போட்டுக்கொண்டிருந்த சவிரியும், சைமன் சுட்டிக்காட்டிய பக்கம் தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

''ஓம் அண்ண, ஏதோ நடந்துதான் போச்சுது போல இருக்கு. நேற்று இவன் பொன்ராசாதான் தண்ணியைப் போட்டுவிட்டு மச்சினனோட கொழுவிக் கொண்டு நின்றான்.''

''நான் நினைக்கயில அப்படியிருக்குமெண்டு. கூட்டத்தைப் பார்த்தால் விஷயம் வேறபோல கிடக்கு. கொஞ்சம் கரையைத் தள்ளிப் பார்த்துப் போட்டுப் போவம்.''

சைமன் தாங்கிக் கொண்டிருந்த மரக்கோலை தோணியின் இடப்புறம் போட்டு வேகத்தைக் கட்டுப் படுத்தினான்.

சவிரி காக்கைதீவுச் சந்தையைப் பார்த்தான். பொழுது நல்லா ஏறிவிட்டது. கூட்டம் குலைந்து கொண்டிருந்தது.

''அண்ண, சந்த குலையுது. நேரஞ் சென்டா அவளவை நாறல் மீனைக்கேக்கிற விலைக்கு கேப்பாளவயள்''

சைமன் மீண்டும் மரக்கோலை வலப்புறம் போட்டுக் கரையை நோக்கித் திருப்பினான்.

''சவிரி வல இழுக்கயுக்கேயே வெள்ளாப்பா போயிற்று. இண்டைக்கு நம்மட சந்தையில விப்பம். மீனும் அவ்வளவு இல்லத்தானே...''

சவிரி மீண்டும் மீன்களைப் பொறுக்குவதில் மௌனமாகி விட்டான். சைமன் கரையை நோக்கி வேகமாகத் தோணியைத் தாங்கினான். தோணி நீரைப் பிளந்து கொண்டு சீறிப்பாய்ந்து கரையை அடைந்தது.

''சவிரி, தோணியைக் கட்டிப்போட்டு மீன்களைச் சந்தைக்குக் கொண்டுபோ. நான் என்னெண்டு கேட்டுப்போட்டு வாறன்.''

சைமன் தோணியிலிருந்து மெதுவாக இறங்கினான். தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து கடல் உவர்ப்பில் காய்ந்து போயிருந்த 'சொறசொற'த்த முகத்தையும், மீன் செதில்கள் ஒட்டிக்கிடந்த உடலையும் துடைத்துவிட்டு, இடுப்பில் கட்டியிருந்த கச்சையை அவிழ்த்துப் போட்டுவிட்டு துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டான்.

வளவில் நின்று முகம் சிவந்துபோக உதடுகள் துடிக்க முகத்தில் விழுந்து புரண்டு கொண்டிருந்த செம்பட்டையான சுருட்டை மயிர்களை ஒரு கையால் ஒதுக்கியபடி மறுகையை அடிக்கடி உயர்த்தியபடி நியாயம் கதைத்துக் கொண்டிருந்தான் மரியதாஸன். மண் மேட்டிலேறி வளவை நோக்கி வந்து கொண்டிருந்த சைமனும் இவனைக் கண்டு கொண்டான்.

கூடி நின்றவர்கள் எல்லோர் பார்வையும் வளவைத் தேடி வந்து கொண்டிருந்த சைமன் பக்கம் திரும்பியது.



''என்னடாப்பா, ஏன் இப்பிடி விடியயுக்கு முன்னமே கூட்டம் கூடி கத்திக்கொண்டு நிக்கிறீங்க?''

சற்று எரிச்சலுடன் வெளிவந்த சைமனின் வார்த்தைகளைக் கேட்டதும், நடந்துபோன சம்பவத்தை இன்னும் அவன் அறியவில்லையென்பதைக் கூடி நின்றவர்கள் ஊகித்துக்கொண்டார்கள்.

''என்னண்ணை உங்களுக்கு விஷயம் தெரியாதா? நம்மட சூசைக்கிழவனுக்கு அவன் யோணும் அவன்ர ஆக்களும் அடிச்சு மண்டையை உடைச்சுப் போட்டாங்க. மனுசனுக்கு இழுக்குது.'' சைமன் இதைக் கேட்டதும் சற்று நேரம் மௌனமாக நின்றான்.

''ஏன் கிழவனுக்கு அடிச்சவங்க...?''

''கிழவன் விடுவலைக்கு வாறன் எண்டுபோட்டு யோணட்ட ஆயிரம் ருபா முற்காசு வேண்டினவராம். சுகமில்லாமல் திருக்க முள்ளு அடிச்சுக் கிடந்ததினால் இனிமேல் தொழிலுக்கு வர ஏலாதெண்டு சொல்லிப் போட்டாராம் கிழவன். காச உடன வைக்கச் சொல்லித்தான் இந்தச் சண்டித்தனம்.'' மரியதாசன் உணர்ச்சிவசப்பட்டவனாக மீண்டும் உரத்துக்கத்தினான்.

''சம்மாட்டிமாரட்ட முற்காசு வாங்கிப் போட்டு தொழிலுக்கு வாறன் எண்டு சம்மதிச்சுப் போட்டா தொழிலுக்கு போகவேணும். இல்லாட்டியா அவங்கட காச திருப்பிக் கொடுக்கவேணும். இதுதானே ஊர் வழக்கம். யோணும் பலமுறை காசக் கேட்டுப்பார்த்தார். குடுக்காமல் கிழவனும் வெறியில அவங்களைப் பேசிப்போட்டேர்.''

யோணின் விடுவலையில் மன்றாடியாக தொழில் நடத்திச் செல்லும் சற்று வயதான சந்தியோ மீண்டும்

சம்மாட்டியின் பக்கம் பரிந்து பேசியதைக் கண்ட மரியதாசனும் அவனோடு கூட நின்ற யேசுராசனும் கொதித்தனர். அவர்களும் யோண் வலையில் தொழிலுக்குப் போகிறவர்களாக இருப்பினும் யோணும் அவனுடைய ஆட்களும் செய்தது அநீதி என்பது அவர்களுடைய திடமான நம்பிக்கை.

''சந்தியோ அண்ணைக்கு சம்மாட்டிமாரட்ட நக்கிற புத்தி இன்னும் போகயில்ல.'' மரியதாசன் திடீரென வீசியெறிந்த சுடு சொல்லை எதிர்பாராத சந்தியோ அதிர்ந்து போனார்.

''தம்பி மரியாதையாகப் பேசும், இல்லாட்டி...''

''இல்லாட்டி... என்ன செய்து போடுவீங்க.'' மரியதாசன் முஷ்டியை உயர்த்திக்கொண்டு சந்தியோவை நோக்கி நெருங்கினான். இவ்வளவு நேரமும் அமைதியாக அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு நின்ற சைமன் நடந்துபோனவற்றை ஒருவாறு ஊகித்துக் கொண்டாலும் விவாதம் இப்போது வேறு திசையில் திரும்புவதைக் கண்டதும் நிலைமையைச் சமாளிக்க நினைத்தான்.

''இஞ்ச பாருங்க, நீங்களேன் உங்களுக்குள்ள சண்டை பிடிக்கிறீங்க. பின்னேரம் சனங்களைக் கூப்பிடுவம். சம்பந்தப்பட்டவர்களையும் கூப்பிடுவம். அதுக்குப் பிறகு பாப்பம். இப்ப எல்லாரும் பேசாமப் போங்க.''

கூடி நின்ற எல்லோரும் முணுமுணுத்தபடி மெல்ல மெல்ல அவ்விடத்தை விட்டு நகரத்தொடங்கினர்.

மரியதாசனும் யேசுராசனும் மாத்திரம் உரத்துப் பேசிச் செல்வது சைமனின் காதுகளுக்குக் கேட்டது, ''சம்மாட்டி மாற்றை கொழுப்பை இதோட அடக்க வேணும்.''



சைமனின் இதயத்திலும் இனம் தெரியாத துடிப்பு. பல தலைமுறையாக ஏதோ ஓர் அடிமை முறையில் இவர்கள் நடத்தப்பட்டு வரும் முறைபற்றி இவனுக்கு நீண்ட நாட்களாக மனதில் ஒரு உறுத்தல் இருந்து வந்தது. ஆயினும் சரியான சந்தர்ப்ப சூழ்நிலை உருப்பெறுமல் தள்ளிப் போய்க்கொண்டிருந்த காரணத்தினால் அவனுடைய எண்ணங்களை வெளிக்கொணர முடியாமல் இருந்தது. தொழிலாளர்களின் உணர்ச்சிகளை தற்காலிகமாகவேனும் செம்மைப்படுத்த இப்பொழுது அதற்குச் சரியான நேரம் வந்துவிட்டதாக அவன் உள் மனம் உணர்த்தியது. நீண்ட நேரமாக கலகலத்துக் கிடந்த அந்த வளவு இப்போது வெறிச்சோடிக்கிடந்தது. சைமன் சிந்தனை வசப்பட்டவனாக வளவைத் தாண்டி மண் ஒழுங்கையில் இறங்கி வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

ஊர்க்கூட்டம் தொடங்க சரியாக நாலு மணிக்கு மேலாகிவிட்டது. ஊரில் உள்ள சம்மாட்டிமாரில் சிறில் ஏதோ வேலை காரணமாக கரையூர் சென்றதனால் அவரைத் தவிர எல்லோரும் கூடியிருந்தனர். கூட்டம் கூடி பத்து நிமிடங்கள் கழியத்தான் தனது சதை பருத்த தேகத்தையும் தூக்கமுடியாமல் நாசினல் சட்டைக் குள்ளே இரட்டை வடம் பவுண் சங்கிலி சகிதம் சம்மாட்டித் தனத்தின் செருக்கும், திமிரும் முகத்தில் பிரதிபலிக்க அரக்கி அரக்கி வந்து பின்வாங்கில் குந்திக் கொண்டார் யோண் சம்மாட்டி. தலைமை வகித்த பெரியார் சுருக்கமாக பிரச்சினைகளை எடுத்துக் கூறினர். கூட்டம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. மரியதாசன் எழுந்தான்.

''சம்மாட்டியார் யோணும் அவங்கட ஆக்களும் செய்த செயல் மிகப்பிழை. கிழவனட்டை மன்னிப்புக் கேக்கவேணும்.''

"பிழையெண்டால் நியாயம் காட்டவேணும்."

சவிரிமுத்துச் சம்மாட்டி குறுக்கே குரல் கொடுத்தார். "பணம் கொடுக்குமதியாக இருந்தால் மரியாதையாகக் கேட்டு வாங்க வேண்டியதுதான். அதற்காகத் தொழிலாளிகளை அடிமைகளாக நினைத்துக் கண்டபடி பேசுவதும் அடிப்பதும் எங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது."

"தொழிலுக்கு வாறன் எண்டு கடன் பட்டால் தொழிலுக்கு வரவேண்டியதுதான் கடமை. இல்லாட்டி காசைத் திருப்பித் தரவேண்டியதுதான்."

"அதுக்காக இருபது வருஷத்துக்கு மேலாக வெயிலெண்டும் குளிரெண்டும் பாராமல், உங்களுக்கு உழைத்துத் தந்த மனுசன் என்றும் பாராமல், கை நீட்டி அடிக்கிறதா? எங்கட உழைப்பிலை தானே நீங்க வீடும் வாசலுமாக இருக்கிறீங்க. அதுக்கென்ன அந்த ஆயிரத்தையும் அவங்களுக்கே விட்டால்..."

யேசுராசன் எழுந்து நின்று குரல் கொடுத்தான்.

"நாங்க இவ்வளவு பணம் போட்டு தொழில் நடத்துறம். அவங்களுக்கு பங்குக்காசு கொடுக்கிறம்... இதைவிட என்னத்தை அவங்க உழைச்சுத் தந்திட்டாங்க. சாமத்திய வீடெண்டாலும்... செத்த வீடெண்டாலும் எங்கட்டத்தானே ஓடி வருவினம். ஐஞ்சோ பத்தோ கொடுத்து நாங்க தானே உதவி செய்யிறம்."

யோணின் பேச்சு தலைமை வகித்துக் கொண்டிருந்த பெரியவருக்கும் கோபத்தையும், எரிச்சலையும் கொடுத்தது.

சைமன் எழுந்தான்.

"சம்மாட்டிமார் ஏதோ தொழிலாளர்களுக்கு அள்ளிக் கொடுப்பதாகக் கூறினார். அவர் இறால் போட்டு



சுறாப்பிடிக்கும் கெட்டித்தனம் எங்களுக்கு இப்ப விளங்காது என்ற எண்ணம் போல கிடக்கு. ஒரு வருசத்தில கமிசனுக்கு எண்டு ஒரு தொழிலாளியிட்ட ஆயிரம் ருபாவுக்கு மேல் கழிக்கிறீங்க. ஆனால் அவங்களுக்குக் கொடுக்கிறது என்ன இருநூறு முந்நூறு, ஒரு சாராயப் போத்தல். உழைக்கிறதில தோணிக்கு, வலைக்கு என்று எவ்வளவத்தை தள்ளி நீங்க எடுத்துக் கொள்ளுறீங்க. இதெல்லாம் எங்களுக்கு விளங்காததல்ல."

எல்லோரும் சைமன் பேசியதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். சிலர் சம்மாட்டிமாரை ரகசியமாகக் கிண்டல் செய்யத் தொடங்கினர்.

மரியதாசன் மீண்டும் எழுந்தான். "நாங்க இனிமேல் இவங்கட தொழிலுக்கு போவதாக இருந்தால் எங்களுடைய பங்குப் பணத்தைக் கூட்டித்தரவேணும். 'கமிசன்' பணம் சரியாகக் கணக்குப் பாக்கவேணும். சூசைக்கிழவனிடம் மன்னிப்புக் கேக்க வேணும். இல்லாவிட்டால் கடலில வல இறங்காது."

சம்மாட்டிமாரிடையே முணுமுணுப்பு ஏற்பட்டது. யோண் எழுந்தார். எல்லோரையும் நன்றாகப் பார்த்தார். கனத்த குரலை ஒருமுறை செருமி விட்டுக்கொண்டார். "இஞ்ச நாங்க ஒண்டும் பயந்தாக்களல்ல. எங்களை யாராலும் வெருட்டேலாது. உங்கட உழைப்பு வந்துதான் சாப்பிடப் போறமா? எத்தனை நாளைக்கு சுருண்டு கிடக்கப் போறீங்க? பற நாய்கள் எங்கட காலிலதான் வந்து விழுவீங்க..அப்ப பாப்பம்." யோண் கூறிவிட்டு கூட்டத்தைவிட்டு விறுவிறு என்று வெளியேறினார். அதைத் தொடர்ந்து எல்லாச் சம்மாட்டிமாரும் வெளியேறினர்.

கூட்டம் அல்லோலகல்லோலப் பட்டது. யோணின் திமிரான வார்த்தைகள் கூடியிருந்து கேட்டுக்கொண்டு இருந்தவர்களுக்கு சினத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

தலைவர் எலலோரையும் சமாதானப்படுத்தினர். மீண்டும் கூட்டம் ஒழுங்குக்கு வர நிமிடங்கள் சென்றன.

o o o

''சைமன் அண்ணே... சைமன் அண்ணே...''

விருந்தையில் விரித்துப்போட்டு நண்டு சப்பியும் நைந்தும் போனதால் விரிசல் கண்டுவிட்ட பழைய வலைகளை அரிக்கன் இலாம்பின் மங்கிய வெளிச்சத்தில் வைத்து வெட்டி வெகு லாவகமாக பொத்திக் கொண்டிருந்த சைமன் நிமிர்ந்து பார்த்தான். படலைக்குமேல் பல தலைகள் தெரிந்தன. இருட்டில் ஒன்றும் தெளிவாகத் தெரியாவிட்டாலும், அது மரியதாசின் கனத்த குரல் என்பதை ஊகித்துக்கொண்டான்.

இவ்வளவு நேரமும் படலையடியில் சுருண்டு படுத்துக் கிடந்த சைமனின் 'கறுவல்' பலமாகக் குரைத்தது.

''ஆர் மரியதாசா? ஏன் வாசலில் நிக்கிறீங்க. படலையைத் திறந்து கொண்டு உள்ள வாங்களன். நாய் ஒண்டும் செய்யாது.''

சைமன் லாம்பை எடுத்து முற்றத்தில் வெளிச்சம் விழக்கூடியதாக தூக்கிப் பிடித்தான்.

யேசுராசா, மரியதாசன், சவிரி, செபமாலை, சூசைமுத்து, தெற்குத்தெரு பர்னந்து நிரைத்து வந்து சைமனைச் சூழ ஆசுவாசத்துடன் குந்திக்கொண்டார்கள்.



சைமன் மீண்டும் மடவலைப் பகுதியை கால்களின் பெருவிரல்களுக்குள் மாட்டிப் பொறுக்கப் பிடித்துக் கொண்டு வேகமாகக் கிழிசல்களைப் பொத்திக்கொண்டே அடுக்களைக்குள் இருந்த மனைவிக்குக் குரல் கொடுத்தான்.

''இஞ்ச..பிலோமினு, வந்திருக்கிறவங்களுக்கு தேத்தண்ணி போட்டுக்கொண்டு வா. குறை நினைக்காதீங்கடாப்பா, கூப்பன் சீனி எப்பவோ முடிஞ்சு போச்சுது... சக்கரைதான்.''

''உங்கட வீட்டில மாத்திரமில்ல அண்ண, எல்லாற்ற வீட்டிலயும் இந்த நிலைதான். காசு குடுத்து வெளியில சீனி வாங்க ஆரட்ட காசு இருக்கு.''

மரியதாசன் இருண்டு கிடந்த முற்றத்தைப் பார்த்துக்கொண்டே பதில் சொன்னான். மரியதாசன் முகத்தில் தெம்பு இல்லை. கூட வந்திருந்த எல்லோர் முகத்திலும் ஏதோ ஓர்வித சோர்வுக்களை அப்பிக்கொண்டிருந்ததைச் சைமன் அவதானித்து விட்டான்.

''என்னடாப்பா ஒரு மாதிரியாக இருக்கிறீங்க... ஏதாவது விசேஷம் உண்டா?''

சைமன் கேள்வியைக் கேட்டதும் யேசுராசனும் மரியதாசனும் ஒருவரையொருவர் பார்த்தனர்.

''என்ன நடந்தது என்று சொல்லுங்க. ஆராவது சம்மாட்டிமாற்ற தொழிலில ஏறிவிட்டாங்களா...?''

சைமன் வார்த்தைகளில் சூடு ஏறியது.

''நாளைக்கு எல்லா சம்மாட்டிமாற்ற விடுவலைகளும் கடலில இறங்கப் போகுதுகள் போல இருக்கு. சம்மாட்டிமார் தொழிலாளிகளை விலைக்கு வாங்கிப் போடு வாங்க போல இருக்கு.''

சைமன் அதிர்ச்சியுடன் மரியதாசனைப் பார்த்தான். மரியதாசன் நிதானமாகப் பதில் சொன்னான்.

"சாமிநாதர் விடுவலைக்குப் போறதுக்கு சம்மதிச்சுப்போட்டார்."

"ஏன்?"

"விடுவலைகள் நின்று போனதால் தொழிலாளிகள் எல்லாம் படுப்பு வலைக்கும் களங்கட்டி வலைக்கும், தூண்டலுக்குமாக போய்விட்டாங்க. ஆனால் பாவம் சாமிநாதன் மூன்று நாளாக தொழிலுக்குப் போகயில்ல. போறதுக்கு வேறு தொழிலும் கிடைக்கயில்ல. வீட்டில பட்டினி பொறுக்க முடியாமல் யோண் சம்மாட்டியட்ட போய் கடன் கேட்டிருக்கிறான். அவன் விடுவலைக்கு வந்தால் கடன் தாரன் என்று சொல்லியிருக்கிறான். சாமிநாதரும் சம்மதிச்சுப் போட்டார்."

சைமனின் முகம் சுருங்கிக் கறுத்துவிட்டது. இப்படி ஒரு நிலையை இவன் எதிர்பார்க்கவில்லை. பல தலைமுறையாக இருந்துவரும் இந்தவித அடிமைப் போக்குகளை தகர்த்தெறிவது என்பது இலகுவான காரியம் இல்லை என்பதை இப்போதுதான் புரிந்துகொண்டான். சைமன் சற்று நேரம் அமைதியாக இருந்தான்.

"அண்ணே, சம்மாட்டிமார் நாளைக்காலம விடுவலைகளை எப்படியும் கடலில இறக்கிப்போட வேணும் எண்டு இன்னும் ஆக்களைப் பிடிக்கிறதுக்கு வலைபோட்டுத் திரியிருங்க. இப்படியே விட்டுவிட்டால் சாமிநாதர் போல ஒவ்வொருத்தராகப் போய்ச் சேர்ந்துவிடுவாங்க."

குசினிக்குள் இருந்து பிலோமினா தேநீர்க் கோப்பைகளையும், சக்கரைக் குறுகல்களையும் கொண்டுவந்து கூடியிருந்தவர்கள் முன் வைத்துவிட்டு கதை கேட்கும் ஆவலில் அறைக்கதவு அருகே போய் சாய்ந்தபடி நின்று கொண்டாள்.



தேநீர் உறிஞ்சப்பட்டு கோப்பைகள் வெறுமையாகிக் கொண்டிருந்தன. சைமனின் சிந்தனையில் பல சம்பவங்கள் திரண்டு வந்தன. 'எத்தனை நாளைக்கு இப்படிச் சுருண்டு கிடப்பீங்க? பற நாய்கள், எங்கட காலில தான் வந்து விழுவீங்க.' யோணின் பேச்சு இவன் நினைவில் வந்து மோதியது. உடல் ஒருகணம் சிலிர்த்து அடங்கியது. பொத்திக் கொண்டிருந்த வலைகளையும் நூலையும் அப்படியே விட்டுவிட்டு விறுக்கென்று எழுந்தான். காது மடிப்புக்குள் சொருகி வைத்திருந்த புகையிலைத் துண்டை எடுத்துச் சப்பிக்கொண்டே கனத்த குரலில் பேசினான்.

"இவங்கட வலைகள் கடலில இறங்கிற கெட்டித்தனத்தைப் பாப்பம். மரியதாஸ்! நீ சவிரியையும், யோசேப்புவையும் கூட்டிக்கொண்டு சாமத்தில தெற்குத் தெருவுக்குப் போ. யேசுராசா! நீ சூசைமுத்து செபமாலையோட கோயில் ஒழுங்கையைக் கவனி. நான் பர்னாந்தையும் சிலுவைதாசனையும் கூட்டிக்கொண்டு நடுத்தெருவுக்குப் போறன். ஆர் ஆக்கள் வெள்ளாப்பில வந்து தொழிலாளிகள அரட்டிருங்க எண்டு பாப்பம்."

"ஓம் அண்ணே! அதுதான் சரி."

மரியதாசன் பதில் சூடாக வெளிவந்தது. எல்லோரும் எழுந்து கொண்டனர். சைமன் வளையில் சொருகியிருந்த துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டே படலையைத் தேடி நடந்தான்.

பிலோமினா பயத்துடன் படலையைப் பார்த்தாள். முற்றத்தில் கிடந்த கறுவல் மறுபடியும் குரைத்தது. அவர்கள் படலையைத் திறந்து வெளியேறி இருளுக்குள் மறைந்தனர். தெருநாய்கள் ஆக்ரோசத்துடன் குரைத்தன.

வெகுதூரத்துக்கு அப்பாலும் அவர்களது அழுத்தமான காலடி ஓசை கேட்டுக் கொண்டிருந்தன.

o

# வெற்றுக்கர்கிதங்கள்

படலையை மெதுவாகத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். வீடு முழுவதும் ஒரே இருள். பெரிய அறையின் வாசல் நிலைப்படிக்கு மேலால் தெரிந்த வெளிக்கூடாக உள்ளே எரிந்து கொண்டிருந்த ''அரிக்கன் லாம்பி''ன் மெல்லிய வெளிச்சம் மாத்திரம் மங்கலாக வெளி விருந்தைக்கு நிழல் விழுத்தியது.

முற்றத்தில் நிற்கும் முருங்கை மரத்துடன் சின்னவன் கட்டிப்போட்ட 'கறுவல்' ஆள் அரவம் கேட்டதும் விறுக்கென்று எழுந்து கால்கள் இரண்டையும் அகட்டி உடம்பைச் சிலிர்த்து சோம்பல் முறித்துக் கொண்டே ஆக்ரோசத்துடன் குரல் எழுப்பியபடி அங்கும் இங்குமாக ஓடியது.

அவன் மெதுவாக அதன் வழுவழுப்பான முதுகுப் புறத்தைத் தடவிக் கொடுத்து விருந்தைக்கு வந்தான்.

பெரிய அறையில் அம்மா, மூத்ததங்கைகள், சின்னஞ்சிறுசுகள் சிலவும் படுத்துக் கொள்ளுவார்கள். தந்தையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு படுத்தால் தான் நித்திரை கொள்வேன் என்று அடம்பிடிக்கும் சின்னவன், வழமைக்கு மாருக இன்று உள் அறை



யில். அவனுடைய விசும்பல் விட்டு விட்டு உள்ளே கேட்டது. படுத்த பாயிலேயே சலம் பெய்து விட்டதற்காக அம்மா சற்று நேரத்திற்கு முன் அவனை அடித்திருக்க வேண்டும்.

சாருக்குள் விரித்துக் கிடந்த ஓலைத்தடுக்கில் அவனுடைய தந்தை தான் படுத்துக் கிடந்தார். குறட்டைச் சத்தம் பலமாகக் கேட்டாலும் அவர் அயர்ந்து தூங்குகிருர் என்று சொல்லிவிட முடியாது. சின்ன அரவம் கேட்டாலும் 'பேய் பிசாசை'க் கண்டவர் போல் திடுமென விழித்தெழுந்து விடும் சுபாவம் அவருக்கு.

தகப்பனை நினைத்தால் இவனுக்கு இப்பொழுதும் பயம்தான். இவனுக்கு அம்மாவை எப்படியாவது அரட்டி சாப்பாடு கேட்க வேண்டும். அம்மாவை அரட்டும் சத்தத்திலே தகப்பனும் எழுந்து விட்டால் பிறகு என்ன, ஒரே புறுபுறுப்புத்தான்.

''சும்மா இருந்து தின்னுறதும் பத்தாமல் எங்கேயோ ஊர் சுத்திப் போட்டு ஏமஞ் சாமத்தில வந்து இஞ்ச விடியப்புறம் தொழிலுக்குப் போறதுகளட நித்திரையையும் குழப்புருன்''.

தந்தையின் பேச்சுக்களை கேட்கும் போது கோபம் கோபமாக வரும். அவமானத்தால் உடம்பெல்லாம் கூசும். வீட்டை விட்டு எங்கேயாவது ஓடிப்போக வேண்டும் போல ரோசம் வரும். பிறகு ஆறுதலாக இருந்து தனிமையில் சிந்தித்துப் பார்க்கும்போது அவர் சொல்வதிலும்கூட நியாயம் இருப்பதுபோல்தென்படும்.

இருபத்தைந்தைக் கடந்தும் படிப்பையும் தொடர முடியாமல் வேலையைத் தேடிக்கொள்கிற சாமர்த்தியமும் இல்லாத குடும்பத்திற்கு மூத்த பிள்ளையைப் பற்றி முழுக் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்

புள்ள தந்தை இப்படி அலுத்துக் கொள்வதில் தவ றில்லை என்று தனக்குள்ளேயே மனதைத் தேற்றிக் கொள்வான்.

மற்றவர்களின் உழைப்பில் தின்று கொண்டிருக்க இவனுக்கும் வெட்கமாகத் தான் இருந்தது. அதற் காக அவன்தான் என்ன செய்வான்!

அவனிடமும் தான் 'பைல்' நிறைந்த ''சேட்டுவிக் கேற்''றுகள். வேலை யாராவது கொடுக்க வேண்டுமே! யாரையாவது பிடித்து 'சரிக்கட்டி' காரியம் பார்க்க லாம் என்றால் கையில் மூவாயிரம் வேண்டும் என்று சொல்கிறார்கள்.

கையில் மூவாயிரம் இருந்தால் மூத்த தங்கையின் கல்யாணம் இரண்டு வருசத்துக்கு மேல் இழுபட்டுக் கொண்டு கிடக்குமா?

வயிறு பிசைந்தது. பசியினால் விண் ... விண் ... என்று இரைந்தது. பெரிய அறைக்கதவு அண்டை சென்றான். மூத்தவள் ராணியை எழுப்பலாம் என்று முதலில் நினைத்தான். அவளை இலகுவில் எழுப்பிவிட முடியாது. அவள் எழும்புவதற்கு முதல் தகப்பனே எழுந்து வந்து விடுவார். அம்மாவை எழுப்புவது தான் இலகுவான காரியம்.

''அம்மா ...... அம்மா ...... அம்மா''

மெதுவாக வாசலில் நின்றபடி கூப்பிட்டான். உள் அறையில் சில நிமிடங்கள் வரை எந்தவித சலனமும் இல்லை. கதவை லேசாகத் தட்டிக்கொண்டே மறுபடி யும் குரல் கொடுத்தான். உள்ளே யாரோ அரண்டு எழும் சலனம். அதைத் தொடர்ந்து அம்மாவின் அடைத்த குரல்.

''புள்ள... புள்ள ... தங்கச்சி, அண்ணன் வந்து நிக் கிறான் போல இருக்கு. எழும்பிப் போய் சோத்தைப் போட்டுக் கொடு''.



''போனை எனக்கு அலுப்பாயிருக்கு... சும்மா எல் லாத்துக்கும் என்னத்தான் இந்த மனுசி முறிக்குது. அங்க அவள் மெள்ள பிரண்டு கிடக்கிறாள். அவளை அரட்டிச் சொல்லன்'' – இது ராணியின் குரல்.

''எழும்படி. அவள் இப்பதான் வீடி இல வெட் டிப் போட்டு அலுப்பில கிடக்கிறாள். அங்க அந்த இளந்தாரி எவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டு நிக்கிறான். எழும்படி. சுனங்கல்.''

தங்கை ராணி அலுப்புடன் அம்மாவைத் திட்டிக் கொண்டே லாம்புடன் வெளியே வந்தாள். அவள் கண்களில் நித்திரையின் அழுத்தம். நாள் முழுவதும் வீட்டு வேலைகள் செய்து அலுத்துப் போன சோர்வு முகத்தில்.

இவன் தந்தையின் படுக்கையைத் திரும்பிப் பார்க்கிறான். அவர் மறுபக்கம் புரண்டு படுத்துக் கொள்கிறார்.

''பாவம் மனுசன். இனி நடுச்சாமத்தில் எழும்பிப் போய் நித்திரை முழிச்சு தூண்டலுக்கு கிடந்து போட்டு விடிய பஞ்சி அலுப்பில வாறவர்.''

அவன் எழுந்து போய் கைகளை நீரில் நனைத்துக் கொண்டு குசினிக்குள் சென்று மரப்பலகையில் குந் திக் கொண்டான்.

ராணி சோற்றைக் கோப்பையில் போட்டுக் கொடுத்து விட்டு கிணற்றடிப் பக்கம் இருந்த குடத் தில் தண்ணீர் வார்த்து வரச்சென்று விட்டாள்.

முதல்படியை பிசைந்து வாயில் திணித்துக் கொள் ளப்போன போதுதான் முதல் நாள் இரவு இவனும் நண்பன் யோசேப்பும் போய்ப் பார்த்து வந்த

''வல்மத்துவ'' சிங்கள சினிமாப் படத்தின் காட்சிகள் ஒன்றின் பின் ஒன்ருக மனதில் நெருங்கியடித்துக் கொண்டுவிழுந்தன.

வேலையற்ற பட்டதாரி நண்பர்கள். அவர்கள் கிராமத்தில் படும் கஷ்டங்கள். முகம் கொடுக்கும் பிரச்சினைகள்.

நிலச்சுவாந்தாரன் ஒருவனின் கபடத்தனமான கொடுமையினுல் சொந்த நிலத்தைப் பறிகொடுக்கும் அந்த ஏழை வாலிபனின் குடும்பம்; தட்டிக் கேட்கச் சென்ற வாலிபன்; இறுதியில் துப்பாக்கி வேட்டுக்குப் பலியாகி மடியும் அந்தக் கொடூரமான இரத்தத்தை உறைய வைக்கும் காட்சி...

இறுதியில் எரியும் அவனுடைய சிதைக்கு முன்னுல் அழுது புலம்பும் வயோதிபத்தாயின் ஆருத்துயர்! ''சை, என்ன கொடுமை''.

அவன் இதயத்தில் அவனை அறியாமலே ஓர் அந்தரிப்பு கண்களில் நீர்க்கசிவு. கூடவே எழுந்த பழி உணர்வு. இத்தனை கொடுமைகள் மலிந்த சமூகமா?

''அண்ணா, அம்மானும் மாமியும் கொஞ்ச நேரத்துக்கு முன்னுல வீட்ட வந்திற்றுப் போவினம்''.

வெகு நேரமாய்த் தலை குனிந்தபடி கோப்பையிலிருந்த சோற்றையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

இராணி தன் எதிரே பலகையில் இருந்த இவனையே வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கேட்பது கூட இவன் காதுகளில் சரியாக விழவில்லை.

''என்ன இராணி கேட்டனி?''



''அம்மானும் மாமியும் வீட்ட வந்திற்றுப் போகினம். இந்த ஆவணிக்குள்ள கல்யாணத்தைச் செய்து போடட்டாம்.

''அப்புவும் அம்மாவும் அதுக்கு என்ன சொன்னவியள்''.

இவன் அப்படிக் கேட்டதும் ராணி தலையைக் குனிந்து கொண்டாள். அவள் கை விறகுச் சுள்ளி ஒன்றை எடுத்து நிலத்தில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தது.

மூத்தவனுக்கு வேலை கிடைச்சதுக்குப் பிறகு தான் கலியாணத்தைப் பற்றி யோசிக்கலாம் எண்டு சொல்லிப் போட்டினம்.''

''அதுக்கு அம்மான் ஆக்கள் என்ன சொல்லிச்சினம்''.

''உனக்கு வேலை கிடைச்சு எனக்குச் சீதனக்காசு சம்பாதிக்கிறதுக் கிடையில் தங்கட மகன் மூண்டு பிள்ளையளுக்குத் தகப்பனுப் போயிடுவாராம். வசதியில்லாட்டி வேறு இடத்தைப் பார்க்கச் சொல்லிப் போட்டுப் போயிற்றினம்.'' அவள் குரல் அதற்கு மேல் பேச முடியாமல் தழுதழுத்தது.

இவன் நெஞ்சுக் குழியில் ஏதோ சிக்கிக் கொண்டது. மூச்சு முட்டிக் கொண்டு வருவது போன்ற தவிப்பு. பக்கத்திலிருந்த செம்பிலிருந்து நீரை மடமடவெனக் குடித்து விட்டு விறுக்கென்று எழுந்து விட்டான்.

அதற்கு மேல் ஒரு பிடி சோறும் தொண்டைக்குள் இறங்க மறுத்து விட்டது. செம்பையும் தண்ணீரையும், எடுத்துக் கொண்டு கழுவுவதற்காக வெளியே வந்தான். சில கணங்கள் மௌனத்தால் கரைந்தன,

''தங்கச்சி சாப்பிட்டிற்றியா ......''

''ஓம் ......''

''பொய் சொல்லாத ......''

''ஓம் அண்ண, சோறு தண்ணியுக்குள்ள போட்டு பிஞட்டோட குடிச்சனுங்க.''

''அம்மா சாப்பிட்டாவா.''

''ஓம் ......''

''இவன் தம்பி எங்க? படுக்கையில காணேம். நாளைக்கு சோதனையில்ல தொடங்குது.''

''ஓம் அண்ண, அவன் பள்ளிக்கூடத்தால பின்னேரம் வந்தான். நாளைக்கு ஆரோ மந்திரிமார் கொழும்பில இருந்து புதுசாகக் கட்டின கட்டிடத்தைத் திறக்க வருவினமாம் எண்டு சொல்லிக்கொண்டு நின்றவன், பிறகு ஆரோ பெடியளோட சைக்கிளில கூடிக்கொண்டு போருன். மத்தியானமும் சாப்பிட வரயில்ல.''

தம்பியின் போக்கும் இவனுக்குப் பிடிபடவில்லை. எதற்கு எடுத்தாலும் நியாயம் பேசுவான். ஏதேதோ கூட்டங்களுக்கெல்லாம் போய் வருவதாக ஊரில் உள்ள பலர் இவனிடம் கூறியிருக்கின்றனர். படிப்பிலும் முன்பு போல் அக்கறையில்லை. வீட்டிலும் அதிகம் தங்குவதில்லை.

இவன் மனதில் பெரும் குழப்பம். நம்பிக்கைகள் தீர்ந்து போன ஆற்ருமையினுல் மனதை அமுத்திக் கொண்டிருந்த துயரங்கள் தூக்கத்தைத் துரத்தி அடித்தன.

இவன் முற்றத்துக்கு வந்தான். ராணி கை விளக்கை இவன் படுக்கைக்கு அருகே வைத்து விட்டு



அறையைத் திறந்து கொண்டு உள்ளே போய் விட்டான்.

அன்று பௌர்ணமி கழிந்து மூன்ரும் நாள். நிலவு அப்பொழுதுதான் காலித்துக் கொண்டு வந்தது. இதமாக வீசிக் கொண்டிருந்த சீதளக் காற்றின் சிலுசிலுப்பில் கிணற்றடிப் பக்கம் நிற்கும் நெல்லி மரத்திலிருந்து இலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன.

எங்கேயோ வீட்டிலிருந்து யாரோ ஒருவன் உச்ச சுதியில் நாட்டுக் கூத்துப் பாட்டைப் பாடுகிருன். தகரப்பேணி மிருதங்கமாக முழங்குகிறது.

இரண்டாவது சினிமாக் காட்சி பார்த்து விட்டு வீதியால் செல்வோரின் ஆரவாரங்கள், விமர்சனங்கள், அதிர்வெடிச் சிரிப்புக்கள். அவையும் அடங்கின.

படுக்கையைத் தட்டிப்போட்டு அலுப்புடன் சாய்ந்து கொண்டு சில கணங்கள் தூங்குவதற்கான போராட்டம்.

படலை திறக்கும் சத்தம் கேட்டது. இவனுடைய தம்பிதான் வியர்த்து விறுவிறுக்க வந்து கொண்டிருந்தான். அவனுடைய கைகளில் சுருட்டப்பட்ட போஸ்ட்டர்கள், தகரப்பேணி, பிறஸ்......

காகிதச் சுருள்களை அவசரமாக மூலையில் எறிந்து விட்டு கிணற்றடிப் பக்கம் சென்று நீரை வார்த்து கைகளை அமுத்தி உழக்கிக் கழுவிக் கொண்டிருந்தான்.

கைகளில் இரத்த நிறத்தில் சாயம் நீருடன் கழுவுண்டு நிலத்தில் மண்ணுடன் கலந்து செந்நிறமாகி...

அவன் படுக்கையிலிருந்து விறுக்கென்று எழுந்து போய் காகிதச் சுருள்களை எடுத்து விரித்து ஒவ்வொன்றாக விளக்கு வெளிச்சத்தில் படித்துப் படித்துப் பார்த்தான்.

‘‘முதலாளித்துவக் கல்வி முறை முற்றாக ஒழிய வேண்டும்.’’

‘‘வெற்றுக் காகிதங்கள் வேலை தருமா?’’

‘‘தரப்படுத்துதல், இன ஒடுக்குதல்.’’

அவன் மனம் அந்த வெள்ளைத் தாள்களில் சிவப்பு எழுத்தில் பளிச்செனத் தெரிந்த வாக்கியங்களின் அர்த்தங்களை முதல் முறையாக பிரியத்துடன் நினைத்துப் பார்க்கின்றது.

இவன் சுமந்த வெற்றுக் காகிதங்கள், வீணான நாட்கள், ‘‘சின்னத்தனமான’’ அரசியல்வாதிகளின் பின்னே விவஸ்தை கெட்டு அலைந்து திரிந்த அந்த நாட்கள். கசப்பான மாத்திரையை விழுங்கிக் கொண்டவன் போல் முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

இந்த சமூகத்தை, வாழ்க்கையை, இந்தத் தேசத்தை அவனுக்கு முன்பே புரிந்து கொண்டுவிட்ட இவன் தம்பி இவனுக்கு இன்னும் புதிரானவனா......!

தம்பி கிணற்றடியிலிருந்து கை கால்களைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்து எழுந்தான். இவன் காகிதக் கட்டுகளுடன் நின்று அவனை உற்றுப் பார்ப்பதை அவதானித்து விட்டவனாய் கொல்லைப் புறமாக மெதுவாக நகர்ந்தான்.

முற்றத்தில் தந்தையின் மரக்கோல், சவள் பலகை, பறி ... நீர்கோலும் பட்டை ... தங்கூசிப் பெட்டி.



‘‘இந்த ஆவணிக்கு தங்கச்சியின் கல்யாணத்தை எப்படியாவது முடிச்சுப் போட வேணும்’’.

அவன் அந்த நினைப்பிலிருந்து விடுபடவில்லை. ஒரு கணப் பொறிதான். தெரு நாய்கள் பலத்த சத்தத்துடன் குரைத்தன. அடங்கிப் போயிருந்த வெளிப்புற ஓசைகள், சனங்களின் விழிப்பும், நடமாட்டமும், ஒடுங்கிய குரல்களும் இவனைத் திடுக்கிட வைத்தன.........

தெற்குத் தெருவால் உறுமிக் கொண்டு வந்த ஜீப் ஒன்று படலைக்கு முன்னே ‘சடின் பிறேக்’ குடன் நின்றது. ஜீப்பிலிருந்து ‘தாம்தீம்’ என்று பூட்ஸ் கால்கள் நிலத்தில் குதித்தன. படலை படீரெனத் திறந்தது.

இரண்டு காக்கிச் சட்டைகள் முன்னே பாய்ந்து இவனைப் போஸ்ட்டர்களுடன் இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டன. பிடரியில் ஒருத்தனின் முஷ்டி ஓங்கி இறங்கிறது. இரும்புக் குண்டால் அடித்தது போல். இன்னொருவனின் சப்பாத்துக் கால் சினத்துடன் முகத்தில் பதிந்தது. தாடையிலும், மூக்கிலும் வெடிப்பு. இரத்தம் கசிந்தது. நிலத்தில் முத்தமிட்டு எழுந்த அவன் முகத்தில் இரத்தத்துடன் அந்த மண்ணும் அப்பிக் கொண்டது.

தரதரவென இழுத்துக் கொண்டு போய் ஜீப்பில் இவனை எறிந்தார்கள். உள்ளே இருந்தவர்களின் பூட்ஸ் கால்களுக்கிடையில் முகம் கவிழ்ந்து வீழ்ந்தான். ‘‘போஸ்டர் ஒட்டுறது? வடுவா ருஸ்கல்! செம்மையாகச் சாத்தினால் தான் திருந்துவீங்கள்.’’

தமிழ்க் குரல் உள்ளே இருந்து ஒலித்தது. இவன் மெல்ல எழுந்து ‘‘அம்மா......’’என முனகிக் கொண்டே இருக்கையில் அமர முயற்சித்தான். ‘‘ஜீப் வண்டி

வேகத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. தூரத்தில் வீட்டாரின் அவலக்குரல்கள் கேட்டன. இப்போது நன்ருக உள்ளே இருந்தவர்களைப் பார்க்க முடிந்தது. சில முகங்கள் வீதிகளில் கண்டவை: உதட்டிலும், தாடையிலும் வழிந்து கொண்டிருந்த இரத்தத்தைக் கையால் அழுத்தித் துடைத்தான். இப்போது வீதியை நன்ருகப் பார்க்க முடிந்தது. நிலவு வெளிச்சத்தில் மதில் சுவர்களில் சிவப்பு மையினுல் எழுதப்பட்ட சுலோகங்கள் பளிச்செனத் தெரிந்தன. போஸ்டர்களும் தெரிந்தன.

இவன் தம்பியை நினைத்துக் கொண்டான். அந்த வேதனைக்குள்ளும் கூடவே சிரிப்பு வந்தது.

o



''கலை இலக்கிய முயற்சிகள் அனைத்தும் ஒரு புதிய வாழ்க்கைக்கான மாபெரும் போராட்டத்தில் ஒரு பகுதி'' என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டு தமது சிருஷ்டிகளை உருவாக்கிவரும் படைப்பாளிகளில் டானியல் அன்ரனியும் ஒருவர்

பதினைந்து வருடங்களுக்கு மேலாக சிறுகதை, கவிதை, விமர்சனம் ஆகிய ஆக்க இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தனது ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தி வருபவர்.

,சமர்' என்ற காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியராக கனதியான கலை இலக்கிய பணியாற்றிவருபவர்.

''கடல் வலைய'த்து மக்களின் உயிர்ப்புள்ள வாழ்க்கையின் முழுமையான ஜீவனை 70க்கும் 80க்கும இடைப்பட்ட காலத்தில் வெளியான இத்தொகுப்பி லுள்ள இவரது சிறுகதைகளின் மூலம் நிதர்சனமாக தரிசிக்கமுடியும்.

தமிழ் இலக்கியப் பரப்பில் புதிய பரிமாணங்களை எல்லைகளைத் தொட்டு வளர்த்து வருபவர்களில் டானியல் அன்ரனியும் முதன்மையான ஒருவர் என்பதை 'வலை' என்ற இவரது முதற்சிறுகதை தொகுதி நிலைநிறுத்துகிறது.

மணமாகி, இரு குழந்தைகளுக்கு தந்தையான இவர் நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தில் வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றி வருகிறார்.